மலர் 25 இதழ் 10-12 ஜனவரி / மார்ச் 2000

# பொருளியல் நோக்கு

வெளியீடு: ஆராய்ச்சிப் பகுதி
மக்கள் வங்கி, தலைமையலுவலகம்,
சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை
கொழும்பு 2.
இலங்கை.

பிரதம ஆசிரியர் பீட
ஆலோசகர்:

கலாநிதி காமினி பெர்னான்டோ
பீ. ஏ. சிறப்பு (இலங்கை)
எம். ஏ. (இலங்கை)
எம். எஸ். ஸி. (USA), பீ. எச். டி. (UK)
தலைவர், மக்கள் வங்கி

பிரதம ஆசிரியர்:
கலாநிதி எஸ். எஸ். ஏ. எல். சிரிவர்தன
ஆராய்ச்சிப் பணிப்பாளர்

இணையாசிரியர் / நிர்வாக ஆசிரியர்:
டப். ஜீ. எஸ். வைத்தியநாத

இணையாசிரியர்: (சிங்களப் பதிப்பு - ஆர்திக விமசும)
ஈ. டி. சி. புஷ்பகுமார

இணையாசிரியர்: (தமிழ் பதிப்பு - பொருளியல் நோக்கு)
எம். எல். எம். மன்சூர்

பொருளியல் நோக்கு கருத்துக்களையும் அறிக்கைகளையும் புள்ளி விவரத்தரவுகளையும் உரையாடல்களையும் பலவேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தினைத் தூண்டி அறிவினை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட இதழாகும்.

பொருளியல் நோக்கு வெளியீடு மக்கள் வங்கியின் ஒரு சமூகப்பணித் திட்டமாகும். எனினும், அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோகபூர்வமான கருத்துகளையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக் கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக் கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதிபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும் குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந்தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்தியோ அல்லது விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ள முடியும்.

## விசேஷ அறிக்கை

## யுரோ

| | | |
|---|---|---|
| | 02 | ஐரோப்பாவின் பொருளாதார ஒருங்கிணைப்பு: முக்கிய மைல்கற்கள் |
| வின்சன்ட் மேர்வின் பெர்னான்டோ | 03 | யுரோ, யுரோ முறைமை மற்றும் ஐரோப்பிய மத்திய வங்கி |
| | 11 | ஐரோப்பாவும் இலங்கையும் |
| | 19 | ஐரோப்பிய யூனியன் தொடர்பாக உலகமயமாக்கலின் தாக்கம் |
| கலாநிதி ஜே. பீ. கெலேகம | 20 | ஐரோப்பிய யூனியன் உருவாகிய பின்புலம் |
| | 23 | யுரோ நாணயத்தின் அறிமுகத்தின் ஒரு வருடத்தின் பின்னர் யுரோ பிரதேசம் |

## சிறப்புக் கட்டுரைகள்

| | | |
|---|---|---|
| தீபானி எதிரிசூரிய | 26 | ஓய்வு நேர நடவடிக்கைகள்: வரைவிலக்கணங்களும் கருதுகோள்களும் |
| ஏ. ஏ. நவரத்ன | 29 | இலங்கையில் பாடசாலை மட்டக் கணிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டம் |

## உயர்கல்வி அநுபந்தம்

| | | |
|---|---|---|
| டப். ஜீ. எஸ். வைத்தியநாத | 32 | வரவு செலவுத்திட்டம் 2000 |

**அடுத்த இதழில்:**
**உலகமயமாக்கல்**

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

# ஐரோப்பாவின் பொருளாதார ஒருங்கிணைப்பு முக்கிய மைல்கற்கள்

**19 ஆம் நூற்றாண்டு** பிரான்ஸ், பெல்ஜியம், சுவிட்சர்லாந்து மற்றும் பல்கேரியா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய விதத்தில் லத்தீன் நாணய யூனியன் உருவாக்கப்பட்டமை ஐரோப்பாவில் நாணய உறுதிப்பாட்டுக்கான விருப்பினை எடுத்துக் காட்டியது.

**1951** பாரிஸ் ஒப்பந்தம் ஐரோப்பிய நாணய மற்றும் உருக்கு சமூகத்தை ஸ்தாபித்தது. பிரான்ஸ், மேற்கு ஜேர்மனி, இத்தாலி, லக்ஸம்பேர்க், பெல்ஜியம் மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளின் நிலக்கரி மற்றும் உருக்குக் கைத் தொழில்களை ஒருங்கிணைப்பதே இந்த ஒப்பந்தத்தின் நோக்கமாகும்.

**1958** ரோம் உடன்படிக்கையின் கீழ் 6 உறுப்பு நாடுகளுடன் ஐரோப்பிய பொருளாதார சமூகம் (EEC) ஸ்தாபிக்கப் பட்டது. இது தொடர்பான ஒப்பந்தத்தில் முதலில் பிரான்ஸ், மேற்கு ஜேர்மன், இத்தாலி, லக்ஸம்பேர்க், பெல்ஜியம் மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகள் கைச் சாத்திட்டிருந்தன. இந்நாடுகளுக்கிடையே முழுமையான பொருளாதார ஒருங்கிணைப்பை எடுத்து வருவதற்கென கொள்கைகளை உருவாக்குவதே இந்த அமைப்பின் நோக்கமாக இருந்தது.

**1963** பிரான்ஸ் மற்றும் மேற்கு ஜேர்மனி ஆகிய நாடுகள் ஒத்துழைப்பு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டன.

**1967** ஐரோப்பிய நாணய மற்றும் உருக்கு சமூகம் (ECSC), ஐரோப்பிய பொருளாதார சமூகம் (EEC) மற்றும் (அணு வலு அமைப்பொன்றான) யுரேஷன் என்பன ஒருங்கிணைக்கப்பட்டதுடன், ஐரோப்பிய சமூகம் (EC) என்ற பதத்தின் மூலம் தனியொரு அமைப்பாக இவை உருவாகின.

**1944–1973** நிலையான செலாவணி விகிதங்களைக் கொண்ட பிரெட்டன்வூட்ஸ் முறை ஐரோப்பிய நாணயங்களுக்கு உறுதிப்பாட்டினை வழங்கியது.

**1972** 1980 அளவில் பொருளாதார மற்றும் நாணய யூனியன் ஒன்றை எடுத்து வருவதற்கு ஐரோப்பிய தலைவர்கள் இணங்கினர்.

**1973** டென்மார்க், அயர்லாந்து மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகள் ஐரோப்பிய பொருளாதார . சமூகத்தில் இணைந்து கொண்டன.

**1979** ஐரோப்பிய சமூகம் முழுவதிலும் செலாவணி விகிதங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு உதவும் பொருட்டு ஐரோப்பிய நாணய முறைமை ஸ்தாபிக்கப்பட்டது.

**1980** கிரீஸ் நாடு ஐரோப்பிய பொருளாதார சமூகத்தில் சேர்ந்து கொண்டது.

**1986** ஸ்பெயின் மற்றும் போர்த்துக்கல் ஆகிய நாடுகள் ஐரோப்பிய பொருளாதார சமூகத்தில் இணைந்தன.

**ஜுன் 1988** ஹனோவர் நகரில் ஓர் உச்சி மாநாட்டை கூட்டிய ஐரோப்பிய யூனியன் நாடுகளைச் சேர்ந்த அரசாங்கத் தலைவர்கள், ஒரு கமிட்டியை உருவாக்கி பொருளாதார மற்றும் நாணய அறிக்கையொன்றை தயாரிக்குமாறு ஐரோப்பிய சமூகத்தின் தலைவரிடம் முறையாக வேண்டுகோள் விடுத்தது.

**ஜுன் 1989** டெலர்ஸ் கமிட்டியினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை 3 கட்டங்களில் ஒருங்கிணைப்பு இடம்பெற வேண்டும் என யோசனை தெரிவித்திருந்தது.

**ஜுலை 1990** ஐரோப்பிய யூனியனுக்குள் மூலதன கட்டுப்பாடுகள் ஒழிக்கப்பட்டன.

**டிசம்பர் 1990** அரசாங்கங்களுக்கிடையிலான மாநாடு உடன்படிக்கையின் கடப்பாடுகளை வகுத்தது.

**1991** மாஸ்ட்ரிச் மாநாட்டின் போது, ஐரோப்பிய தனி நாணய முறையிலிருந்து தொடக்கத்தில் விலகி நிற்பதற்கான உரிமைகளை பிரிட்டன் பெற்றுக் கொண்டது. ஆனால், பிற்பாடு அது இந்நாணயத்தில் சேர்ந்து கொள்ள விரும்பும் பட்சத்திலும், அதற்கான தகைமையை பெற்றுக் கொள்ளும் பட்சத்திலும் அதில் சேர்ந்து கொள்ளும் தெரிவு அதற்கு வழங்கப்பட்டது.

**டிசம்பர் 1991** ஐரோப்பிய யூனியனின் வரலாற்றில் பெரும் அபிலாஷைகளுடன் கூடிய சர்ச்சைக்குரிய ஆவணங்களில் ஒன்றான மாஸ்ட்ரிச் உடன்படிக்கை முடிவாக்கப்பட்டது. புதிய ஐரோப்பிய நாணயத்தில் சேர்த்துகொள்ள விரும்பும் நாடுகள் தொடர்பாக இவ்வுடன்படிக்கை கடுமையான பல முன் நிபந்தனைகளை விதித்தது.

**ஜுன் 1992** டென்மார்க் மக்கள் சர்வஜன வாக்கெடுப்பொன்றின் போது மாஸ்ட்ரிச் உடன்படிக்கையை நிராகரித்தமையால் ஐரோப்பிய தனி நாணயத்திலிருந்து விலகி நிற்கும் சலுகை டென்மார்க்குக்கு வழங்கப்பட்டது.

**1993** ஐரோப்பிய யூனியன் உறுப்புரிமை தொடர்பான ஒரு தேர்வு முறையை அறிவித்தது. ஐரோப்பிய யூனியனில் உறுப்புரிமை கோரும் ஒரு நாடு சட்டத்தின் ஆட்சி, மனித உரிமைகள் மற்றும் சிறுபான்மையினருக்கான பாதுகாப்பு என்பவற்றுக்கு உத்தரவாதமளிக்கும் உறுதியான ஒரு ஜனநாயக முறையை கொண்டிருத்தல் வேண்டும். மேலும், ஐரோப்பிய யூனியன் விதிமுறைகளையும் பிரமாணங்களையும் பிரயோகிக்கக்கூடிய செயற்படும் சந்தைப் பொருளாதாரம் ஒன்றையும் பொது நிர்வாகக் கட்டமைப்பொன்றையும் அந்நாடு கொண்டிருத்தல் அவசியமாகும்.

**ஜனவரி 1994** நாணய ஒருங்கிணைப்பின் இரண்டாவது கட்டமாக ஐரோப்பிய நாணய நிறுவகம் பிராங்பேர்ட் நகரில் திறந்து வைக்கப்பட்டது.

**1995** அவுஸ்திரியா, பின்லாந்து மற்றும் சுவீடன் போன்ற நாடுகள் ஐரோப்பிய பொருளாதார சமூகத்தில் இணைந்தன.

**டிசம்பர் 1995** மாட்ரிட் நகரத்தில் இடம் பெற்ற ஒரு கூட்டத்தின் போது யுரோ நாணயத்தை அறிமுகம் செய்து வைக்கும் தமது விருப்பினை ஐரோப்பிய யூனியன் தலைவர்கள் ஊர்ஜிதம் செய்தனர்.

**மே 1998** 11 நாடுகள் யூரோ நாணயத்தில் இணைந்து கொள்வதற்கான தகைமைகளை பூர்த்தி செய்திருப்பதாக் ஐரோப்பிய யூனியன் தலைவர்கள் முடிவு செய்தனர். ஐரோப்பிய மத்திய வங்கியும் ஸ்தாபிக்கப்பட்டது.

**டிசம்பர் 1998** யுரோ மாற்று வீதங்கள் நிர்ணயிக்கப்பட்டன.

**ஜனவரி 01 1999** ஐரோப்பிய வலயத்தைச் சேர்ந்த 11 நாடுகள் தமது நாணயக் கொள்கைகளை ஒருங்கிணைத்து யுரோ என்ற பெயரில் தமது பொது நாணயத்தை அறிமுகம் செய்து வைத்தன.

**ஜனவரி 2002** யுரோ பணத்தாள்களும் நாணயங்களும் அறிமுகம் செய்து வைக்கப்படும்.

**ஜுலை 2002** தேசிய பணத்தாள்களும் நாணயங்களும் விலக்கிக் கொள்ளப்படும்.

# யூரோ முறைமை மற்றும் ஐரோப்பிய மத்திய வங்கி

வின்சன்ட் மேர்வின் பெர்ணாண்டோ

ஐரோப்பிய பொருளாதார மற்றும் நாணய ஒருங்கிணைப்பின் மூன்றாவது கட்டம் 1999 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் துவக்கி வைக்கப்பட்டது. அதாவது, 1992 இல் மாஸ்ட்ரிச்ட் நகரில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் 11 நாடுகள் தமது நாணய கொள்கைகளை ஒருங்கிணைத்து யூரோ என்ற பெயரில் ஒரு பொது நாணயத்தை அறிமுகம் செய்து வைத்தன. யூரோ நாணயத்தின் அறிமுகத்துக்கும் ஐரோப்பிய நாணய ஒருங்கிணைப்புக்கும் இறுதியாக ஐரோப்பிய மத்திய வங்கியின் ஸ்தாபிதத்துக்கும் வழிகோலிய வரலாற்று பின்னணியையும், காரணிகளையும் எடுத்து விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். கட்டுரையின் இறுதிப் பாகம் யூரோ நாணயத்தின் அறிமுகம் இலங்கையின் மீதும், உலக பொருளாதாரத்தின் மீதும் எடுத்து வரக்கூடிய தாக்கங்களை குறிப்பிடுகின்றது.

## ஐரோப்பிய சமூகத்தின் சுருக்கமான வரலாறு

ஐரோப்பிய பொருளாதார சமூகம் (EEC) ரோம் உடன்படிக்கையின் கீழ் 6 உறுப்பு நாடுகளுடன் 1958 இல் ஸ்தாபிக்கப்பட்டது: பிரான்ஸ், மேற்கு ஜேர்மனி, இத்தாலி, லக்ஸம்பேர்க், பெல்ஜியம் மற்றும் நெதர்லாந்து. அதன் பின்னர் டென்மார்க், அயர்லாந்து மற்றும் ஐக்கிய இராச்சியம் (1973), கிறீஸ் (1981), ஸ்பெயின் மற்றும் போர்த்துக்கல் (1986) ஆகிய நாடுகள் இதில் சேர்ந்து கொண்டதனை அடுத்து உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்தது. ஜேர்மனி ஐக்கியப்பட்டதன் விளைவாக கிழக்கு ஜேர்மனியின் பொருளாதாரம் மேற்கு ஜேர்மனியுடன் இணைக்கப்பட்டது. அவுஸ்திரியா, பின்லாந்து மற்றும் சுவீடன் ஆகிய நாடுகள் 1995 ஜனவரி 01 ஆம் திகதியன்று ஐரோப்பிய பொருளாதார சமூகத்தில் இணைந்து கொண்டன.

உண்மையில் ஐரோப்பிய பொருளாதார சமூகம் (ஐ பொ ச) என்பது ஆரம்ப உறுப்பு நாடுகளினால் உருவாக்கப்பட்ட 3 அமைப்புக்களில் ஒன்று மட்டுமேயாகும். பாரிஸ் ஒப்பந்தம் (1951) ஆறு ஐரோப்பிய நாடுகளின் நிலக்கரி மற்றும் உருக்குக் கைத்தொழில்களை ஒருங்கிணைப்பதற்கென ஐரோப்பிய நிலக்கரி மற்றும் உருக்கு சமூகம் (ECSC) என்ற அமைப்பை உருவாக்கியது. ரோம் உடன்படிக்கை (1957) ஐ பொ ச வை ஸ்தாபித்தது. பிறிதொரு ரோம் உடன்படிக்கை அணுவலு சமூகம் என்ற மற்றொரு அமைப்பை உருவாக்கியது. இந்த மூன்று அமைப்புக்களும் 1967 இல் ஒன்றாக இணைக்கப்பட்டு அதற்கு ஐரோப்பிய சமூகம் (EC) என்ற பெயர் வழங்கப்பட்டது. இக் கட்டுரை முழுவதிலும் அது ஐரோப்பிய சமூகம் என்றே அழைக்கப்படும்.

ஐ பொ ச வின் ஆரம்ப குறிக்கோள்கள் ரோம் உடன்படிக்கையின் இரண்டாவது உறுப்புரையில் எடுத்து விளக்கப்பட்டுள்ளன:" பொருளாதார நடவடிக்கைகளின் இணக்க பூர்வமான அபிவிருத்தி, இடையறாத சமநிலையுடன் கூடிய விரிவாக்கம், அதிகரித்த அளவிலான உறுதிப்பாடு, வாழ்க்கைத் தரங்களில் துரித வளர்ச்சி மற்றும் உறுப்பு நாடுகளுக்கிடையிலான நெருக்கமான உறவுகள் என்பவற்றை (ஐரோப்பிய) சமூகத்துக் கூடாக மேம்படுத்தும் பொருட்டு ஒரு பொதுச் சந்தையை ஸ்தாபித்துக் கொள்வதும், உறுப்பு நாடுகளின் பொருளாதார கொள்கைகளை படிப்படியாக ஒருமுகப்படுத்திக் கொள்வதும்."

இந்த அமைப்பு 4 பிரதான நிறுவனங்களை கொண்டிருந்தது: ஆணைக்குழு, அமைச்சர்களின் பேரவை, ஐரோப்பிய நீதிமன்றம் மற்றும் ஐரோப்பிய பாராளுமன்றம். ஆணைக்குழு பணிப்புரைகளை தயாரித்து, கொள்கைகளை அறிமுகம் செய்து வைத்து, வழிமுறைகளை செயல்படுத்தி வருகின்றது. உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கியிருக்கும் அமைச்சர்கள் பேரவை இச்சமூகத்தின் பிரதான முடிவெடுக்கும் அமைப்பாக இருந்து வருகின்றது. ஐரோப்பிய பாராளுமன்றம் உறுப்பு நாடுகளிலிருந்து தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் விவாதங்களை நடத்துவதற்கான ஓர் அரங்கினை வழங்குகின்றது. ஐரோப்பிய நீதிமன்றம் சமூகத்தின் கொள்கைகள் மற்றும் உறுப்பு நாடுகளில் அவற்றை அமுல் செய்தல் போன்ற விடயங்களை கையாள்கின்றது.

1. பொதுவான விவசாயக் கொள்கை.
2. பிராந்தியக் கொள்கை.
3. சமூகக் கொள்கை மற்றும் கல்விக் கொள்கை.
4. கைத்தொழில் மற்றும் வர்த்தக கொள்கைகள்.
5. நாணயக் கொள்கைகள்.
6. ஆராய்ச்சி மற்றும் முதலீட்டுக் கொள்கை.
7. வெளிநாட்டு உதவிக் கொள்கை.
8. சுற்றாடல் கொள்கை.
9. பொருளாதாரக் கொள்கை.

## யூரோ உருவாகிய விதம்

ஐரோப்பாவுக்கான ஒரு பொது நாணய அலகு தொடர்பான கருதுகோள், 1957 ரோம் உடன்படிக்கை ஐரோப்பாவில் பொருளாதார ஒருங்கிணைப்பை எடுத்து வருவதற்கான முயற்சிகளை மேற்கொண்ட கால கட்டத்திலேயே தளிர்விடத் தொடங்கியது எனலாம். இந்த உடன்படிக்கையின் மூலம் ஐரோப்பிய பொருளாதார சமூகம் ஸ்தாபிக்கப்பட்டது. எனினும், 1969 இல் ஹேக் நகரில் இடம்பெற்ற ஐரோப்பிய தலைவர்களின் உச்சி மாநாட்டின் போதே இந்த கருதுகோள் முழுமையான அங்கீகாரத்தை பெற்றது. ஐரோப்பிய யூனியன் (EU) தொடர்பான மாஸ்ட்ரிச்ட் உடன்படிக்கை 1992 இல் உறுப்பு நாடுகளினால் கைச்சாத்திடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்டதை அடுத்தே இதற்கான இறுதி வடிவம் கொடுக்கப்பட்டது. இந்த உடன்படிக்கையின் கீழ் ஐரோப்பிய சமூகத்தின் உறுப்பு நாடுகள் மூன்று கட்டங்களில் பொருளாதார மற்றும் நாணய ஒருங்கிணைப்பை எடுத்து வருவதற்கான கடப்பாட்டினை ஏற்றுக் கொண்டன.

இதன் முதலாவது கட்டம் 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 01 ஆம் திகதி ஆரம்பமாகியதுடன், ஐரோப்பிய யூனியனுக்குள் இருந்து வரும் ஏற்றத் தாழ்வு நிலைமைகளை அகற்றுவதில் கவனம் செலுத்தியது. இரண்டாவது கட்டம் 1994 ஜனவரி முதலாம் திகதி ஆரம்பமாகியது. இது உறுப்பு நாடுகளிடையே நிதி மற்றும் நாணய ஒருங்கிணைப்பை சாதித்துக் கொள்ளும் குறிக்கோளையும், ஐரோப்பிய மத்திய வங்கிக்கு வழிகோலிய அமைப்பான ஐரோப்பிய நாணய நிறுவனத்தின் ஸ்தாபிதத்தையும் நோக்கங்களாக கொண்டிருந்தது. ஐரோப்பிய நாணய நிறுவனத்தின் பணிகள் வருமாறு: (அ) தேசிய மத்திய வங்கிகளுக்கிடையிலான ஒத்துழைப்பைப் பலப்படுத்துவதும் நாணயக் கொள்கைகளை ஒருங்கிணைப்பதும்; (ஆ) தீர்வை முறையொன்றின் பாவனைக்கு வசதி செய்து கொடுத்தல்; (இ) ஐரோப்பிய நாணய முறையை கண்காணித்தல். 1998 இன் நடுப்பகுதி அளவில் ஐரோப்பிய நாணய நிறுவனத்

தின் இடத்தில் ஐரோப்பிய மத்திய வங்கியையும் உள்ளிட்ட ஐரோப்பிய மத்திய வங்கி முறைமை எடுத்து வரப்பட்டது. ஐரோப்பிய சமூகத்தின் உறுப்பு நாடுகள் 1992 – 1997 காலப்பிரிவின் போது, குறிப்பிட்ட சில நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டியிருந்தன. (மூன்று மிகச் சிறந்த ஐரோப்பிய நாடுகளின் பணவீக்க விகிதத்தின் 1.5 சதவீத புள்ளிகளுக்குள் இருந்து வர வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டிருந்த) விலை உறுதிப்பாடு, (ஆகக் குறைந்த வட்டி விகிதங்களைக் கொண்டிருக்கும் 3 உறுப்பு நாடுகளின் வீதங்களுடன் இரண்டு சதவீதப் புள்ளிகளுக்குள் இருந்துவர வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டுள்ள) நீண்ட கால வட்டி விகிதங்கள், செலாவணி விகித உறுதிப்பாடு, நிலைத்து நிற்கத்தக்க அரசாங்கத்தின் நிதி நிலைமை மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 60% க்கு மேற்படாத அரசாங்க கடன் என்பன இந்த நிபந்தனைகளாக இருந்தன.

நாணயங்களின் உறுதிப்பாட்டினை பராமரித்து வருதல், பணவீக்கத்தை கட்டுப்படுத்துதல் மற்றும் ஒத்துழைப்புக்கு ஊடாக பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துதல் என்பனவே ஐரோப்பிய நாணய முறைமையின் நோக்கங்களாகும். செலாவணி விகித பொறிமுறையின் (ERM) மூலம் விதிக்கப்பட்டிருந்த தேவைகளுக்கு உறுப்பு நாடுகள் இணங்கி ஒழுக வேண்டியிருந்தமையினால் அவை அது தொடர்பாக செலவுகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

இந்த செலாவணி விகித பொறிமுறை செலாவணி விகிதங்களை ஓரளவுக்கு நிலையாக வைத்திருந்த ஒரு முறையாக இருந்தது. அதாவது, இது நாணயங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட வரையறைகளுக்குள் தளம்பிச் செல்வதற்கு இடமளித்தது. இந்த அமைப்பைச் சேர்ந்த அனைத்து நாடுகளும் செலாவணி விகிதப் பொறிமுறையில் இணைந்து கொள்வதற்கான உரித்தினை கொண்டிருந்தன. ஆனால், இது ஐரோப்பிய நாணய முறைமையின் உறுப்புரிமைக்கான ஒரு முன்நிபந்தனையாக இருந்து வரவில்லை. இதன் அடிப்படையில் யுரோ நாணயத்தில் இணைந்து கொள்வதற்கு தகுதியான 11 நாடுகளும் தெரிவு செய்யப்பட்டன.

யுரோ நாணயம் முறையாக அறிமுகம் செய்து வைக்கப்பட்டதனையடுத்து 1999 ஜனவரி 01 ஆம் திகதியன்று இந்த செயன்முறையின் மூன்றாவது கட்டம் துவங்கியது. இதனையடுத்து யுரோவில் பங்கேற்கும் நாடுகளின் செலாவணி விகிதங்கள் (மீண்டும் மாற்றியமைக்கப்பட முடியாத விதத்தில்) நிர்ணயிக்கப்பட்டன. இவ்விதம் நிர்ணயிக்கப்பட்ட செலாவணி விகிதங்கள் வருமாறு:

**மாற்றியமைக்க முடியாத யுரோ நாணய மாற்று விகிதங்கள்**

| நாடு | நாணயம் | 1 யுரோ= |
|---|---|---|
| பெல்ஜியம் | பிராங்க் | 40.3399 |
| ஜேர்மனி | மார்க் | 1.95583 |
| ஸ்பெயின் | பெஸட்டா | 166.386 |
| பிரான்ஸ் | பிராங்க் | 6.55957 |
| அயர்லாந்து | பவுண் | 0.787564 |
| இத்தாலி | லீரா | 1936.27 |
| லக்ஸம்பேர்க் | பிராங்க் | 40.3399 |
| நெதர்லாந்து | கில்டர் | 2.20371 |
| அவுஸ்திரியா | ஷிலிங் | 13.7603 |
| போர்த்துக்கல் | எஸ்குடோஸ் | 200.482 |
| பின்லாந்து | மார்க்கா | 5.94573 |

*மூலம்: மாதாந்த செய்தி விவரணம், ஐரோப்பிய மத்திய வங்கி, ஜனவரி 1999*

## யுரோ வந்த வழி

1946 – "ஐக்கிய ஐரோப்பிய அரசு" ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என வின்ஸ்டன் சர்ச்சில் அழைப்பு விடுக்கிறார்.

1952 – ஐரோப்பிய நிலக்கரி மற்றும் உருக்கு சமூகத்தின் ஸ்தாபிதம்.

1957 – ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் ஸ்தாபிதம்.

1963 – பிரான்ஸ் மற்றும் மேற்கு ஜேர்மனி ஆகிய நாடுகள் ஒத்துழைப்பு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடுகின்றன.

1972 – 1980 அளவில் பொருளாதார மற்றும் நாணய ஒருங்கிணைப்பை எடுத்து வருவதற்கு ஐரோப்பியத் தலைவர்கள் இணங்குகின்றனர்.

1979 – ஐரோப்பிய நாணய முறைமை மற்றும் ஐரோப்பிய நாணய அலகு என்பவற்றின் ஸ்தாபிதம்.

1986 – 1992 முடிவு அளவில் ஐரோப்பிய சமூகத்தின் உறுப்பு நாடுகள் தொடர்பாக தீர்வையற்ற உள்ளகச் சந்தையொன்றை உருவாக்குவது தொடர்பான ஒப்பந்தம் முடிவாக்கப்படுகின்றது.

1989 – மேற்கு ஜேர்மனியையும் கிழக்கு ஜேர்மனியையும் பிரித்த பேர்லின் சுவரின் வீழ்ச்சி.

1990 – மேற்கு ஜேர்மனியும் கிழக்கு ஜேர்மனியும் ஐக்கியமடைகின்றன.

1992 பெப்ரவரி 07 – 1999 ஜனவரி அளவில் தனியொரு ஐரோப்பிய நாணயத்தை அறிமுகம் செய்து வைக்கும் திட்டத்தை கொண்ட மாஸ்ட்ரிச்ட் உடன்படிக்கை கைச்சாத்திடப்படுகின்றது.

1992 ஜுன் – ஐரோப்பிய தனி நாணய அலகு தொர்டர்பான சர்வஜன வாக்கெடுப்பில் டென்மார்க் மக்கள் அதனை நிராகரிக்கின்றனர். அயர்லாந்து மக்கள் அதற்கு சாதகமாக வாக்களிக்கின்றனர்.

1992 டிசம்பர் – சர்வஜன வாக்கெடுப்பில் பிரெஞ்சு மக்கள் தனி நாணயத்துக்கு சாதகமாக வாக்களிக்கின்றனர்.

1993 மே – டென்மார்க் மக்கள் 2 ஆவது சர்வஜன வாக்கெடுப்பிலும் ஐரோப்பிய நாணய ஒருங்கிணைப்பினை நிராகரிக்கின்றனர்.

1993 நவம்பர் – ஜேர்மனிய நீதிமன்றம் மாஸ்ட்ரிச்ட் உடன்படிக்கைக்கு சார்பாக தீர்ப்பளிக்கின்றது.

1994 ஜனவரி – ஐரோப்பிய நாணய நிறுவனம் பிராங்க்பேர்ட் நகரில் ஸ்தாபிக்கப்படுகின்றது.

1995 டிசம்பர் – தனி நாணய அலகுக்கான திகதியை ஐரோப்பியத் தலைவர்கள் உர்ஜிதம் செய்கின்றனர்.

1998 மே – ஐரோப்பிய சமூகத்தில் பங்

கேற்கும் 11 நாடுகள் யுரோ நாணயத்தை அங்குரார்ப்பணம் செய்து வைப்பதற்கான முடிவை மேற்கொள்கின்றன. ஐரோப்பிய மத்திய வங்கியின் தலைவர் தெரிவு செய்யப்படுகின்றார்.

1998 டிசம்பர் 31 –
பங்கேற்கும் நாடுகள் செலாவணி விகிதங்களை நிர்ணயம் செய்கின்றன.

1999 ஜனவரி –
வங்கிகளும் பங்குத்தொகுதி மாற்று நிலையங்களும் யுரோ நாணயத்தில் வர்த்தகம் செய்ய ஆரம்பிக்கின்றன. காசோலை மற்றும் கடன் அட்டை கொடுக்கல் வாங்கல்களில் யுரோ நாணயம் பயன்படுத்தப்படுகின்றது.

1999 ஜனவரி 4–
நிதிச் சந்தைகள் ஒரு புதிய உலகை எதிர்கொள்கின்றன.

1999 ஜனவரி 7–
தனியொரு ஐரோப்பிய நாணயத்துக்கு பொறுப்பான ஐரோப்பிய மத்திய வங்கியின் ஆட்சி மன்றம் முதல் தடவையாக கூடுகின்றது.

2002 ஜனவரி 01 –
யுரோ நாணயக் குற்றிகளும் தாள்களும் புழக்கத்சத்துக்கு வரவுள்ளன.

2002 ஜுலை 01 –
பழைய நாணயங்கள் செல்லுபடியற்றவையாகிவிடும்.

ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த 15 உறுப்பு நாடுகளில் 11 உறுப்பு நாடுகள் இணைந்து யுரோலாந்து என்ற பெயரிலான தனியொரு பொருளாதாரத்தை ஸ்தாபித்துள்ளன. யுரோ என்பது இந்த பொருளாதார வலயத்தின் பொது நாணயமாகும். யுரோ என்ற பெயர் 1995 டிசம்பரில் வைக்கப்பட்டதுடன் அது 1999 ஜனவரி முதலாம் திகதி அமுலுக்கு வந்தது. யுரோ நாணயத்தின் அறிமுகம் பிரெட்டன்வூட்ஸ் நிறுவனங்களின் ஸ்தாபிதத்தின் பின்னர், உலக நிதித் துறையில் ஏற்பட்ட மிகவும் குறிப்பிடத்தக்க நிறுவன ரீதியான அபிவிருத்தியாக இருந்து வருவதாக கருதப்படுகின்றது. இது உலக பொருளாதாரத்தின் மீது முக்கியமான தாக்கங்களை எடுத்து வர முடியும்.

யுரோ நாணயம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டமையின் குறிக்கோள்கள் வருமாறு:

(1) ஒரு நாட்டு நாணயத்தை மற்றொரு நாட்டின் நாணயமாக மாற்றிக்கொள்ளும் பொழுது ஏற்படக்கூடிய இழப்புக்களை நீக்குவதன் மூலம் ஐரோப்பிய சமூக நாடுகளில் பயணங்களை மேற்கொள்வதற்கு வசதிகளை செய்து கொடுத்தல்.

(2) செலாவணி விகித நட்டவச்சங்களை நீக்குவதன் மூலம் ஐரோப்பிய கம்பெனிகள் ஐரோப்பிய சமூக நாடுகளில் முதலீடுகளை மேற்கொள்வதனை ஊக்குவித்தல்.

(3) அனைத்து ஐரோப்பிய சமூக நாடுகளிலும் பொதுவாக ஒருமுகமான செலாவணி விகிதக் கொள்கையொன்றை மிகவும் தாக்கமான விதத்தில் அமுல் செய்தல்.

(4) தனியொரு ஐரோப்பிய பொருளாதாரத்தை ஸ்தாபித்து அதற்கூடாக ஐக்கிய ஐரோப்பிய அரசினை அமைக்கும் இறுதிக் குறிக்கோளை சாதித்துக் கொள்ளல்.

(5) உலகின் பிரதான ஒதுக்கு நாணயமாக இருந்து வரும் அமெரிக்க டொலரை தாக்கமான முறையில் எதிர்கொள்வதும், அதனிடத்தில் யுரோ நாணயத்தை எடுத்து வந்து ஐரோப்பாவின் இழந்த மாண்பினை மீட்டிக் கொள்வதும்.

## யுரோ வங்கி தாள்கள் மற்றும் நாணயங்கள் என்பவற்றை நோக்கிய நகர்வு

யுரோ நாணயத்தின் அறிமுகம் தொடர்பான நடைமுறை அம்சங்கள் குறித்த ஐரோப்பிய யூனியன் ஒழுங்கு விதிகள் ஆகப் பிந்தியது 2002 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 6 மாத காலம் வரையில் தேசிய நாணயத்தில் வெளியிடப்பட்டிருக்கும் வங்கித் தாள்களும் நாணயங்களும் அந்த நாட்டின் பிரதேச எல்லைக்குள் சட்ட ரீதியான பணமாக இருந்து வரும் என்பதனை குறிப்பிடுகின்றன. இரண்டு விதமான நாணயங்களின் புழக்கம் இடம்பெறும் காலப்பிரிவினை தேசிய சட்டத்தின் மூலம் சுருக்கிக் கொள்ள முடியும் என்ற விடயத்துக்கு 1995 இல் இடம்பெற்ற மாட்ரிட் ஐரோப்பிய கவுன்சிலின் கூட்டத்தின் போது இணக்கம் காணப்பட்டிருந்தது. அன்று தொடக்கம் இந்த மாற்றத்தை எடுத்து வருவதற்கும் சில்லறை வியாபாரிகள் மற்றும் நிதி நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் ஆகியோரின் சுமைகளை குறைப்பதற்கு உதவுவதற்கும் வாடிக்கையாளர்களுக்கு மத்தியில் குழப்ப நிலை தோன்றுவதனை தவிர்ப்பதற்கும் ஒரு குறுகிய காலப்பிரிவு தேவைப்படும் என்ற விடயம் குறித்து ஒரு பரவலான கருத்தொற்றுமை நிலவியுள்ளது. ஒரே நேரத்தில் இரு விதமான நாணயங்களைச் சமாளிக்க வேண்டியிருப்பதனால் அது பல நடைமுறைச் சிரமங்களை உருவாக்கும். மேலும், இதற்கென மேலதிகச் செலவுகளை மேற்கொள்ள வேண்டியும் நேரிடும். இந்தக் குறைபாடுகளை கவனத்தில் எடுத்து, இரு விதமான நாணயங்கள் புழக்கத்தில் இருக்கும் காலப்பிரிவு இரண்டு வாரங்களுக்கும் இரண்டு மாதங்களுக்கும் இடையில் நீடிக்கும் என்ற எடுகோளினை பெரும்பாலான தேசிய மத்திய வங்கிகள் பின்பற்றியுள்ளன.

1997 ஆம் வருடத்தில் முடிவின் போது யுரோ உறுப்பு நாடுகளில் சுமார் 1300 கோடி வங்கித் தாள்கள் புழக்கத்தில் இருந்து வந்தன. இவை 79 வகைகளை கொண்டிருந்தன. ஐரோப்பிய யூனியன் உறுப்பு நாடுகளின் தேசிய வங்கித் தாள்கள் 1997 இல் தயாரிக்கப்பட்டன. அவற்றின் பெறுமதி சுமார் 650 கோடியாகும். மத்திய வங்கிகள் குறித்த ஐரோப்பிய அமைப்பு இதுவரையில் வங்கித் தாள் தயாரிப்பினை பூர்த்தி செய்யும் விஷயத்தில் முழுமையாக கவனம் செலுத்தி வருகின்றது. இந்த மாற்ற நிகழ்வுப் போக்கு தொடர்பான விரிவான திட்டங்களை தயாரிக்கும் வேலைக்கு இப்பொழுது உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகின்றது.

மாஸ்ட்ரிச் உடன்படிக்கை விதிகளின் பிரகாரம் எதிர்கால நாணய ஐக்கிய அமைப்புக்குள் வங்கித் தாள்களின் வெளியீட்டுக்கு ஒப்புதல் வழங்கும் உரிமையை ஐரோப்பிய மத்திய வங்கியின் ஆட்சி மன்ற குழுவே கொண்டிருக்கும். 2002 ஜனவரி 01 ஆம் திகதியை உடனடுத்து 'தேசிய நாணயத் தாள்களை மீளப் பெற்றுக்கொள்ளும் நடைமுறை தொடங்கும். 'அந்தத் திகதியிலிருந்து 6 மாத காலத்துக்குள் பழைய வங்கித் தாள்கள் சட்ட பூர்வமான பணம் என்ற அந்

தஸ்தை இழந்து விடும்.

### யுரோலாந்து மற்றும் ஐரோப்பிய மத்திய வங்கி முறை

ஐரோப்பிய மத்திய வங்கிகள் முறை

ஐரோப்பிய மத்திய வங்கி
யுரோ முறை
11 தேசிய மத்திய வங்கிகள்

4 தேசிய மத்திய வங்கிகள்

* ஐரோப்பிய சமூகத்தை ஸ்தாபித்த ஒப்பந்தத்தின் பிரகாரம் தனியொரு நாணயத்தை ஏற்றுக் கொள்ளாத உறுப்பு நாடுகளின் தேசிய மத்திய வங்கிகள் நாணயக் கொள்கை துறையில் தேசிய சட்டத்தின் பிரகாரம் தமது அதிகாரங்களை தக்க வைத்துக் கொண்டிருப்பதுடன், தனியொரு நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதிலும் அவை சம்பந்தப்பட்டிருக்கவில்லை.

2002 ஜனவரி 01 ஆம் திகதி யுரோ பணம் அறிமுகம் செய்து வைக்கப்படுவதனை அடுத்து டொய்ஷ் மார்க் தாள்கள் மற்றும் நாணயக் குற்றிகள் என்பன சட்ட ரீதியான பணம் என்ற அந்தஸ்தை இழந்துவிடும் என வருங்கால ஜேர்மனி சட்டம் ஒன்று விதித்துரைக்கவுள்ளது. எவ்வாறிருப்பினும், நாணயக் குற்றிகளை கணிக்கும் இயந்திரங்களை பொறுத்த வரையில் வரையறுக்கப்பட்ட ஒரு காலப் பிரிவுக்கு மட்டும் டொய்ஷ் மார்க் பணத்தினை உபயோகிப்பதற்கு அனுமதிக்கப்படும். நாணய இயந்திரங்களை இயக்குபவர்களின் சங்கத்தின் மதிப்பீடுகளின் பிரகாரம் ஜேர்மனியில் சுமார் 17 இலட்சம் நாணய இயந்திரங்களை மாற்றி அமைப்பதற்கு ஏறத்தாழ 100 நாட்கள் எடுக்கும்.

*யுரோ முறையும் ஐராப்பிய மத்திய வங்கிகள் அமைப்பும்:* யுரோ முறை ஐரோப்பிய மத்திய வங்கியையும் உறுப்பு நாடுகளின் தேசிய மத்திய வங்கிகளையும் உள்ளடக்கியதாக இருந்து வருகின்றது. (யுரோலாந்து என்று அழைக்கப்படும்) யுரோ பிரதேசத்துக்கான தனியொரு நாணயக் கொள்கையை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பு யுரோ முறைக்கு வழங்கப்பட்டுள்ளது. யுரோ முறையில் தற்பொழுது 11 தேசிய மத்திய வங்கிகளும் அடக்கியுள்ளன. யுரோ பிரதேசத்தில் அனைத்து 15 உறுப்பு நாடுகளும் பங்கேற்கும் சந்தர்ப்பத்தில் "யுரோ முறைமை" என்ற பதம் ஐரோப்பிய மத்திய வங்கி அமைப்பு என்ற பதத்துக்கு இணையானதாகிவிடும். ஐரோப்பிய மத்திய வங்கிகளின் ஆட்சி மன்றம் 1998 ஜுன் 9 ஆம் திகதி தீர்மானித்தவாறு ஐரோப்பிய யூனியனிலுள்ள 15 நாடுகளும் அவற்றின் தேசிய மத்திய வங்கிகளும் ஐரோப்பிய மத்திய வங்கி அமைப்புக்கான மூலதனத்தில் பெற்றிருக்கும் சதவீதப் பங்குகள் அட்டவணை 2 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2

ஐரோப்பிய மத்திய வங்கியில் ஒவ்வொரு நாடும் பெற்றிருக்கும் சதவீதப் பங்கு

| நாடு | மத்திய வங்கியின் பெயர் | சதவீதப் பங்கு (%) |
|---|---|---|
| அவுஸ்திரியா | ஒஸ்ட்ரெச்சி தேசிய வங்கி | 2.3663 |
| ஸ்பெயின் | பங்கோடி எஸ்பானா | 8.8300 |
| கிறீஸ் | பாங்க் ஒப் கிறீஸ் | 2.0585 |
| டென்மார்க் | டென்மார்க் தேசிய வங்கி | 1.6573 |
| ஜேர்மனி | டொய்ஷ் பத்தாஸ் பாங்க் | 24.4096 |
| பின்லாந்து | சோமொனட் பாங்கி | 1.3991 |
| நெதர்லாந்து | டி நெதர்லான்ட்ஸ் வங்கி | 4.2796 |
| பெல்ஜியம் | பெல்ஜியம் தேசிய வங்கி | 0.1469 |
| சுவீடன் | சுவெறிகேஸ் ரிஸ்க் பாங்க் | 2.6580 |
| ஸ்க்ஸெம்பேர்க் | ஸர்ஸெம்பேக் மத்திய வங்கி | 0.1469 |
| இத்தாலி | பங்காடி இத்தாலியா | 14.9616 |
| பிரான்ஸ் | பங்கா டி பிரான்ஸ் | 16.8703 |
| போர்த்துக்கல் | பாங்கோ த போர்த்துக்கல் | 1. 9250 |
| அயர்லாந்து | அயர்லாந்து மத்திய வங்கி | 0.8884 |
| ஐக்கிய இராச்சியம் | இங்கிலாந்து வங்கி | 14.7109 |
| மொத்தம் | | 100.0000 |

மூலம்: ஐரோப்பிய மத்திய வங்கி

யுரோ முறைமை ஐரோப்பிய மத்திய வங்கியின் ஆட்சி மன்றத்தினாலும் நிறைவேற்று சபையினாலும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. ஆட்சி மன்ற குழுவில் நிறைவேற்று சபையின் உறுப்பினர்கள் அனைவரும் யுரோ நாணயத்தை ஏற்றுக் கொண்டுள்ள உறுப்பு நாடுகளின் தேசிய மத்திய வங்கிகளின் ஆளுனர்களும் அடங்குகின்றனர். நிறைவேற்று சபை யுரோ நாணயத்தை ஏற்றுக்கொண்டுள்ள உறுப்பு அரசுகளின் தலைவர்களினால் நியமனம் செய்யப்பட்ட தலைவர், உப தலைவர் மற்றும் 4 உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்டுள்ளது.

### யுரோ பிரதேசத்தின் முக்கிய பண்புக் கூறுகள்

யுரோ பிரதேசத்தில் காணப்படும் முக்கிய கூறுகளில் பெரும்பாலானவை - குறிப்பாக ஒவ்வொரு பொருளாதாரமும் திறந்து விடப்பட்டிருக்கும் அளவு மற்றும் நிதியியல் கட்டமைப்பு முதலிய பண்புக் கூறுகள் - நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. அவற்றை ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய பொருளாதாரங்களுடனேயே ஒப்பிட்டு நோக்க வேண்டியுள்ளது. யுரோலாந்து பிரதேசத்தின் நிலையான விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி 1997 இல் உலக மொ உ உ வின் 15% ஆக இருந்து வந்தது. அதேவேளையில், ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் உலக மொ உ உ வுக்கு முறையே சுமார் 20% ஆன பங்களிப்பினையும் 8% ஆன பங்களிப்பினையும் வழங்கியிருந்தன. மொத்த உலக் (பண்ட) ஏற்றுமதிகளில் யுரோ பிரதேசத்தின் பங்கு 16% வரையில் இருந்து வருகின்றது. இது ஐக்கிய அமெரிக்கா (13%) மற்றும் ஜப்பான (9%) ஆகிய நாடுகளின் ஏற்றுமதி அளவுகளிலும் பார்க்க கணிசமான அளவில் உயர்ந்து காணப்படுகிறது. அரசாங்க துறைகளின் அளவு மற்றும் கட்டமைப்பு என்பவற்றை பொறுத்த வரையில் யுரோ பிரதேசம் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளிலிருந்து பெருமளவுக்கு வேறுபட்டுள்ளது.

முக்கியமான சில நாணய மற்றும் நிதியியல் குறிகாட்டிகளை பொறுத்த வரையில் யுரோ பிரதேசத்தின் நிதி கட்டமைப்புக்கும் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஜப்பான் என்பவற்றின் நிதிக் கட்டமைப்புக்கும் இடையில் அமைப்பு

ரீதியான பல வேறுபாடுகள் நிலவி வருவதனை அவதானிக்க முடிகிறது. யுரோ பிரதேசத்தின் நிதி அமைப்பை பொறுத்த வரையில் வங்கிக் கடனே மிக முக்கியமான ஒரு பங்கினை வகித்து வருகின்றது. அங்கு பங்குச் சந்தை மூலதனம் ஒரு வரையறுக்கப்பட்ட பங்கினை மட்டுமே வகித்து வருகிறது. ஐக்கிய அமெரிக்காவைப் பொறுத்த வரையில் பங்குச் சந்தைகள் மற்றும் கடன் பிணைப் பத்திரங்கள் என்பவற்றைக் கொண்ட சந்தைகள் நிதிப்படுத்தல் மற்றும் சேமித்தல் என்பவற்றுக்கான முக்கிய மூலதாரங்களாக உள்ளன. பல்வேறு குறிகாட்டிகளையும் கவனத்தில் எடுப்பதற்கு ஊடாக இந்த வேறுபாட்டினை புரிந்து கொள்ள முடியும். வங்கி வைப்புக்கள் மொ உ உ வுடன் சார்பு ரீதியில் நோக்கும் பொழுது ஐக்கிய அமெரிக்காவின் அளவிலும் (55%) பார்க்க யுரோ பிரதேசத்தில் (84%) உயர்வானவையாக காணப்படுகின்றன. மேலும், வெளிநிற்கும் உள்நாட்டுக் கடன் மொ உ உ நியதிகளில் ஐக்கிய அமெரிக்காவுடன் ஒப்பிடும் பொழுது யுரோ பிரதேசத்தில் பெருமள வுக்கு உயர்வாக இருந்து வருகின்றது. வேலையின்மை விகிதம் ஐக்கிய அமெரிக் காவிலும் (4.4%) பார்க்க யுரோ பிரதேசத் தில் பெருமளவுக்கு உயர்வாக (10.8%) உள்ளது. ஜப்பானின் உத்தியோக பூர்வ வேலையின்மை விகிதம் 4.4% மட்டுமே யாகும்.

ஒட்டுமொத்தமாக நோக்கும் பொழுது யுரோ பிரதேசம் உலகின் மிகப் பெரிய பொருளாதாரங்களில் ஒன்றாக இருந்து வருவதனை அவதானிக்க முடிகிறது. உலகளாவிய பேரண்ட பொருளாதார நிலைமைகளை வடிவமைப்பதில் இப் பிரதேசம் மிக முக்கியமான ஒரு பங்கினை எதிர்காலத்தில் வகித்து வரும். மேலும், ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது அது அதன் பொருளாதாரத்தை மேலும் அதிகளவுக்கு திறந்து விடும். மிகப் பெரிய உள்நாட்டுச் சந்தையொன்றினால் வழங்கப்படும் அதிகரித்த அளவிலான வேலை வாய்ப்புக்களினாலும் யுரோலாந்தைச் சேர்ந்த குடிமக்கள் பயனடைவார்கள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

### யுரோ முறைமையின் உறுதிப்பாட்டை அடிப்படையாகக் கொண்ட நாணயக் கொள்கை

யுரோ முறைமையின் உறுதிப்பாட்டு நோக்கிலான நாணயக் கொள்கை உத்தியின் பிரதான கூறுகள் 1998 அக்டோபர் 13 ஆம் திகதி பொதுமக்களிடம் சமர்ப்பிக்கப்பட்டன. அதனை அடுத்து ஐரோப்பிய மத்திய வங்கியின் தலைவர்

அட்டவணை 3

யுரோ பிரதேசம் ஜப்பான் மற்றும் ஐக்கிய அமெரிக்கா என்பவற்றின் முக்கிய பண்புக் கூறுகள்

| | அறிக்கையிடும் காலம் | அலகு | யூரோ | ஐக்கிய அமெரிக்கா | ஜப்பான் |
|---|---|---|---|---|---|
| குடித்தொகை | 1998 | மில்லியன் | 292.0 | 270 | 127 |
| மொ உ உ (உலக மொ உ உ வின் பங்கு) | 1997 | % | 15.0 | 20.2 | 7.7 |
| விவசாயம், கடற்றொழில், காட்டுத்தொழில் | 1993 | மொ உ உ வில் % | 2.4 | 1.7 | 2.1 |
| (கட்டடவாக்கத்தை உள்ளிட்ட) கைத்தொழில் | 1993 | மொ உ உ வில் % | 30.9 | 26 | 39.2 |
| சேவைகள் துறை | 1993 | மொ உ உ வில் % | 66.7 | 72.3 | 58.7 |
| அரசாங்க பெறுவனவுகள் | 1998 | மொ உ உ வில் % | 46.7 | 35.9 | 33 |
| சமூக பாதுகாப்பு உதவு தொகைகள் | 1998 | மொ உ உ வில் % | 17.0 | 9.4 | 11.1 |
| செலினம் | 1998 | மொ உ உ வில் % | 49.1 | 34.5 | 38.6 |
| குடும்பங்களுக்கான நடப்பு மாற்றங்கள் | 1998 | மொ உ உ வில் % | 20.2 | 13.7 | 15.7 |
| பண்ட ஏற்றுமதி | 1997 | மொ உ உ வில் % | 13.6 | 8.5 | 10 |
| பண்ட இறக்குமதி | 1997 | மொ உ உ வில் % | 12.0 | 11.1 | 8.1 |
| ஏற்றுமதிகள் (உலக ஏற்றுமதிகளின் % ஆக) | 1997 | % | 15.7 | 12.6 | 7.7 |
| வங்கி வைப்புக்கள் | 1997 முடிவு | ய. நா. 100 கோடி | 7128.56 | 5881.5 | 4710.8 |
| | 1997 முடிவு | மொ உ உ வில் % | 128.5 | 82.2 | 127.1 |
| தனியார் துறை மீதான கோரல்கள் | 1997 முடிவு | ய. நா. 100 கோடி | 5125.9 | 4931.1 | 4033.6 |
| மத்திய அரசாங்கத்தின் மீதான கோரல்கள் | 1997 முடிவு | ய. நா. 100 கோடி | 2002.6 | 950.4 | 677.1 |
| உள்நாட்டு கடன் பிணைப்பத்திரங்கள் | 1997 முடிவு | ய. நா. 100 கோடி | 5002.4 | 11364 | 4052.2 |
| | 1997 முடிவு | மொ உ உ வின் % | 90.2 | 164.7 | 108.5 |
| தனியார் துறையினால் வெளியிடப்பட்டது | 1997 முடிவு | ய. நா. 100 கோடி | 1987.9 | 4729 | 1192.4 |
| பொதுத்துறையினால் வெளியிடப்பட்டது | 1997 முடிவு | ய. நா. 100 கோடி | 3104.4 | 6634.7 | 2822.9 |
| பங்குச் சந்தை மூலதன மயமாக்கல் | அக். 1998 | ய. நா. 100 கோடி | 3190.9 | 9679.7 | 3300.9 |
| மெய் மொ உ உ வளர்ச்சி | 1998 | % | 30.0 | 3.3 | 2.5 |
| நுகர்வோர் விலைச் சுட்டெண் பணவீக்கம் | நவம் 1998 | % | 0.9 | 1.5 | 0.8 |
| வேலையற்றோர் (ஊழியர் படையின் % ஆக) | நவம் 1999 | % | 10.8 | 4.4 | 4.4 |
| விரிந்த பண நிரம்பல் | 1998 03 வது கால் கண்டு | % | 4.4 | 7.4 | 3.3 |
| மூன்று மாத வட்டி விகிதம் | 1998 முடிவு | % | 3.3 | 5 | 0.18 |
| 10 வருட அரசாங்க முறி மீதான ஆதாயம் | 1998 முடிவு | % | 3.9 | 4.7 | 2.2 |
| அரசாங்க மிகை (+) அல்லது பற்றாக்குறை (-) | 1998 | % மொ உ உ | -2.3 | 1.4 | -5.5 |
| மொத்தக் கடன் | 1998 | % மொ உ உ | 73.6 | 59.3 | 115.6 |
| நடைமுறைக் கணக்கு நிலுவை | 1997 | % மொ உ உ | 1.1 | 1.7 | 2.3 |

மூலம்: ஐரோப்பிய மத்திய வங்கி மாதாந்த செய்தி விவரணம் - ஜனவரி 1999

மற்றும் அதன் ஏனைய ஆட்சி மன்ற உறுப்பினர்கள் ஆகியோரினால் நிகழ்த்தப்பட்ட உரைகளின் போதும் வெளியிடப்பட்ட அறிக்கைகளின் மூலமும் அவை மேலும் விரிவாக எடுத்து விளக்கப்பட்டிருந்தன. இந்த உத்தி 3 பிரதான கூறுகளை உள்ளடக்குகின்றது:

அ. தனியொரு நாணயக் கொள்கையின் முதன்மைக் குறிக்கோள் விலை உறுதிப்பாடாகும்; அத்துடன்

ஆ. இந்தக் குறிக்கோளைச் சாதித்துக் கொள்வதற்கென பயன்படுத்தப்படும் உத்தியின் "இரு தூண்கள்":

- விரிவான பணக் கூட்டுக்களின் வளர்ச்சிக்கான குறிப்பு மதிப்பு குறித்த அறிவித்தலினால் எடுத்துக் காட்டப்பட்டது போல பணத்துக்கு முதன்மையான பங்கு; அத்துடன்

- வருங்கால விலை மாற்றங்கள் மற்றும் ஒட்டுமொத்த யூரோ பிரதேசத்திலும் விலை உறுதிப்பாடு எதிர்கொள்ளக்கூடிய நட்டவச்சங்கள் என்பன குறித்த விரிவான ஒரு மதிப்பீடு.

ஐரோப்பிய மத்திய வங்கியின் ஆட்சி மன்றக் குழு விலை உறுதிப்பாடு என்பதனை பின்வரும் விதத்தில் வரைவிலக்கணப்படுத்தியுள்ளது: "யூரோ பிரதேசத்துக்கான நுகர்வோர் விலைகளின் இணக்கப்படுத்தப்பட்டுள்ள சுட்டெண்ணில் ஒவ்வொரு வருடத்திலும் 2% க்கு குறைவான அதிகரிப்பு." இந்த வரைவிலக்கணத்தின் பிரகாரம் நடுத்தர காலத்தின் போது விலை உறுதிப்பாடு பேணப்பட வேண்டியுள்ளது. யூரோ பிரதேசத்துக்கான நுகர்வோர் விலைகளுக்கான இணக்கப் படுத்தப்பட்ட சுட்டெண் (நு வி இ சு) சார்பு ரீதியில் ஒரு புதிய கருதுகோளாகும். விலை உறுதிப்பாடு சாதிக்கப்பட்டு பேணப்பட்டு வருகின்றதா என்பதனை மதிப்பீடு செய்யும் விஷயத்தில் இந்தச் சுட்டெண் ஒரு விலைச் சுட்டெண்ணாக பயன்படுத்தப்பட வேண்டும் என்பதனை மேலே குறிப்பிடப்பட்ட வரைவிலக்கணம் எடுத்துக் காட்டுகின்றது.

## விலை உறுதிப்பாட்டின் அனுகூலங்கள்

விலை உறுதிப்பாடு சார்பு ரீதியான விலைப் பொறிமுறையின் ஒளிவு மறைவற்ற தன்மையை விருத்தி செய்கின்றது. அதன் மூலம் அது விலைத் திரிபுகள் ஏற்படுவதனை தவிர்த்து, சந்தை செயல் திறனுடன்கூடிய விதத்தின் மூலவளங்களை ஒதுக்கிக் கொடுப்பதற்கு வகை செய்கின்றது. செயல் திறனுடன் கூடிய மூலவளப் பகிர்வு பொருளாதாரத்தின் உற்பத்தி ஆற்றலை உயர்த்தும். மேலும், உறுதியான விலைகள் நீண்டகால வட்டி வீதங்கள் மீதான பணவீக்க நட்டத்தைக் குறைத்து மூதலீட்டினையும் வளர்ச்சியையும் தூண்டுகின்றது. விலை உறுதிப்பாடு பேணப்படும் பொழுது செல்வம் மற்றும் வருமானங்கள் என்பவை பாரிய அளவில் ஏறுமாறாக பகிரப்படும் நிலை தவிர்க்கப்படுவதுடன், அதன்மூலம் சமூக இணக்க நிலையையும் உறுதிப்பாட்டையும் பராமரித்து வருவதற்கு வாய்ப்பு கிடைக்கின்றது. விலை உறுதிப்பாட்டினை பேணி வருவதானது வெளியீடு அல்லது வேலை வாய்ப்பு தொடர்பான குறிக்கோள்களை சாதித்துக் கொள்வதற்கு பங்களிப்புச் செய்கின்றது என்பதனை இந்த வாதங்கள் காட்டுகின்றன. விலை உறுதிப்பாட்டில் கவனம் செலுத்தும் ஒரு நாணயக் கொள்கை வெளியீடு மற்றும் வேலைவாய்ப்பு என்பன தொடர்பான குறிக்கோள்களை சாதித்துக் கொள்வதற்கு உதவ முடியும் என்பது யூரோ முறைமையின் நாணயக் கொள்கையின் அடிச்சரடாகும்.

பணவீக்கம் என்பது இறுதியில் நாணயம் சார்ந்த ஒரு தோற்றப்பாடாக இருந்து வருகின்றது. எனவே, யூரோ முறைமையின் உத்தியில் பணத்துக்கு ஒரு முக்கிய பங்குப் பணியை வழங்குவது முக்கியமானது என்பதனை ஆட்சி மன்றக் குழு ஏற்றுக் கொண்டது. அது பணத்துக்கு வழங்கியுள்ள முதன்மையான பங்கினை குறித்துக்காட்டும் விதத்தில் ஆட்சி மன்றக் குழு நாணயத் துறை வளர்ச்சிக்கான அளவு ரீதியான குறிப்பு மதிப்பொன்றை அறிவித்தது. இது ஒட்டுமொத்த உறுதிப்பாட்டினை நோக்கிய உத்தியின் தூண்களில் ஒன்றாகும். ஆட்சி மன்றக் குழு பகுப்பாய்வினை மேற்கொள்வதற்கும் நாணயக் கூட்டுக்களில் அடங்கியுள்ள தகவல்களை விலை உறுதிப்பாட்டை நோக்காகக் கொண்ட நாணயக் கொள்கைக்கு ஒத்திசைவான நம்பகமான ஒரு வழிகாட்டுதலை வழங்கக் கூடிய விதத்தில் வழங்குவதற்கு உதவும் பொருட்டு இந்த குறிப்பு மதிப்பு உருவாக்கப் பட்டுள்ளது.

ஒரு புறம் பணத்துக்கும் மறுபுறம் விலைகள் மற்றும் மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி, பணப்புழக்கம் என்பவற்றின் வேகத்துக்கும் இடையில் ஓர் உறவு நிலவி வருவது நன்கு அறியப்பட்ட விடயமாகும். இதனைப் பயன்படுத்தியே நாணய வளர்ச்சிக்கான குறிப்பு மதிப்பு பெற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. விலைகளுக்கான குறிப்பு மதிப்பு விலை உறுதிப்பாடு தொடர்பான யூரோ முறைமையின் வெளியிடப்பட்ட வரைவிலக்கணத்தை அடிப்படையாக கொண்டதாக அமைய வேண்டும். ஆட்சி மன்றக் குழு 1998 டிசம்பர் 01 ஆம் திகதி $M_3$ வளர்ச்சிக்கான அதன் குறிப்பு மதிப்பினை அறிவித்தது. பின்வரும் நடுத்தர கால எடுகோள்களை அடிப் படையாகக் கொண்டு இந்த குறிப்பு மதிப்பு பெறப்பட்டது.

1. யூரோ முறைமையின் வெளியிடப்பட்ட வரைவிலக்கணத்துக்கு ஏற்ப விலை உறுதிப்பாடு பேணப்படுதல் வேண்டும். அவ்வாறு செய்யும் பொழுது யூரோ பிரதேச நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் ஆண்டு தோறும் ஏற்படும் அதிகரிப்புக்கள் 2% க்கு குறைவாக இருந்து வரும்.

2. மெய் மொ உ உ வளர்ச்சிப் போக்கு ஆண்டொன்றுக்கு 2 - 2 1/2% வீச்சுக்குள் இருந்து வருகின்றது.

3. நடுத்தர காலத்தின் போது $M_3$ சுற்றோட்ட வேகத்திலான வீழ்ச்சி ஒவ்வொரு வருடமும் 1/2 - 1% அளவில் இருந்து வரும்.

ஐரோப்பிய மத்திய வங்கி அமைப்பு விலை உறுதிப்பாடு குறித்த முதன்மைக் குறிக்கோளுக்கு பங்கம் ஏற்படாத விதத்தில் ஐரோப்பிய சமூகத்தின் பொதுவான பொருளாதார கொள்கைகளுக்கு ஆதரவு வழங்க வேண்டியுள்ளது. இக்குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்லும் பொழுது அது கட்டற்ற போட்டி மற்றும் செயல்திறனுடன் கூடிய விதத்திலான மூலவள ஒதுக்கீடு என்பவற்றைக் கொண்ட திறந்த பொருளாதாரம் ஒன்றின் கோட்பாடுகளுக்கு ஏற்ப செயற்படுதல் வேண்டும்.

## ஐரோப்பிய மத்திய வங்கி அமைப்பின் அடிப்படைப் பணிகள் வருமாறு:

- ஐரோப்பிய சமூகத்தின் நாணயக் கொள்கைக்கு வரைவிக்கணம் வழங்கி அதனை அமுல் செய்தல்;

- அந்நியச் செலாவணி செயற்பாடுகளை மேற்கொள்ளல்;

- உறுப்பு நாடுகளின் உத்தியோக பூர்வ வெளிநாட்டு ஒதுக்குகளை பராமரித்து முகாமை செய்தல்;

- கொடுப்பனவு முறைகளின் தடங்கலற்ற இயக்கத்தினை மேம்படுத்துதல்.

ஐரோப்பிய மத்திய வங்கி அமைப்பு தனது குறிக்கோள்களை சாதித்துக் கொள்வதற்கென ஒரு தொகுதி நாணயக் கொள்கை கருவிகளை தன்வசம் வைத்துள்ளது –

(அ) திறந்த சந்தை செயற்பாடுகளை நடத்துகின்றது:

(ஆ) நிலையான வசதிகளை வழங்குகின்றது:

(இ) கொடுகடன் நிறுவனங்கள் ஐரோப்பிய மத்திய வங்கி அமைப்புடனான கணக்குகளில் குறைந்தபட்ச ஒதுக்குகளை வைத்திருக்க வேண்டிய தேவையை வலியுறுத்துகின்றது.

## திறந்த சந்தை செயற்பாடுகள்

யுரோ முறைமையின் நாணயக் கொள்கையின் குறுங்கால வட்டி விகிதங்களை நெறிப்படுத்துதல், சந்தையில் திரவத் தன்மை நிலையை சமாளித்தல் மற்றும் நாணயக் கொள்கையின் நிலைப்பாட்டினை அடையாளம் காட்டுதல் ஆகிய நோக்கங்கள் தொடர்பாக திறந்த சந்தை செயற்பாடுகள் ஒரு முக்கியமான பங்கினை வகித்து வருகின்றன. இந்த செயற்பாடுகளில் "பிரதான மீள் நிதிப்படுத்தல் செயற்பாடு" அதாவது இரண்டு வார கால முதிர்ச்சியுடன் கூடிய வாராந்த ஏலம் மையமான ஒரு பங்கினை வகிக்கிறது. உண்மையிலேயே யுரோ முறைமை இந்த செயற்பாட்டுக்கு ஊடாகவே குறுங்கால சந்தை வட்டி வீதங்களிலான அசைவுகளை நெறிப்படுத்தி வருவதுடன், வங்கி அமைப்பினை மீள் நிதிப்படுத்தியும் வருகின்றது. இது தவிர யுரோ முறைமை "நீண்ட கால மீள் நிதிப்படுத்தல் செயற்பாடுகளையும்" தொடர்ச்சியாக நடத்தி வருகின்றது. இவை 3 மாத கால முதிர்ச்சியைக் கொண்ட மாதாந்த ஏல செயற்பாடுகளாகும். தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் யுரோ முறைமை மேற்கொள்ளக்கூடிய ஏனைய வகையிலான சிறந்த சந்தை செயற்பாடுகள் சந்தையில் ஏற்படும் எதிர்பார்க்கப்படாத திரவத் தன்மை தளம்பல்களை சமாளிப்பதனையும் உள்ளடக்குகின்றன. திறந்த சந்தை செயற்பாடுகளை மேற்கொள்வதற்கென ஐரோப்பிய மத்திய வங்கி அமைப்பு 5 வகையான கருவிகளைக் கொண்டுள்ளது. இதில் மிக முக்கியமான கருவி நேர்மாற்று கொடுக்கல் வாங்கல்களாகும். மேலும், இந்த அமைப்பு ஒரே தடவையிலான கொடுக்கல் வாங்கல்கள், கடன் சான்றிதழ்களின் வெளியீடு, அந்நியச் செலாவணி மாற்றல்கள் மற்றும் நிலையான வைப்புக்களை திரட்டுதல் என்பவற்றையும் மேற்கொள்ள முடியும்.

## நிலையான வசதிகள்

ஓரிரவு திரவத் தன்மையை உறிஞ்சிக் கொள்ளல், நாணயக் கொள்கையின் பொதுவான நிலைப்பாட்டினை அடையாளம் காட்டுதல் மற்றும் ஓரிரவு சந்தை வட்டி விகிதங்களை கட்டுப்படுத்துதல் என்பன நிலையான வசதிகளின் நோக்கங்களாகும். சம்பந்தப்பட்ட தரப்பினர் குறிப்பிட்ட சில செயற்பாட்டு நிபந்தனைகளை பூர்த்தி செய்திருக்கும் சந்தர்ப்பங்களில் இரு நிலையான வசதிகளை பெற்றுக்கொள்ள முடியும். எதிர் எதிர் தரப்பினர் தகுதி பெற்றிருக்கும் சொத்துக்களுக்கு எதிராக தேசிய மத்திய வங்கிகளிலிருந்து ஓரிரவு திரவத் தன்மையை (பணத்தை) பெற்றுக்கொள்ளும் பொருட்டு எல்லைக் கடனளிப்பு வசதியை பயன்படுத்திக் கொள்ள முடியும். சாதாரண சந்தர்ப்பங்களில் எதிர் எதிர் தரப்பினர் இந்த வசதியைப் பெற்றுக் கொள்வதில் கடன் உச்ச வரம்புகளோ அல்லது ஏனைய வரையறைகளோ இருந்து வரவில்லை. மேலும், எதிர் எதிர் தரப்புக்கள் தேசிய மத்திய வங்கிகளில் ஓரிரவு வைப்புக்களை செய்வதற்கென வைப்பு வசதியையும் வைத்துக் கொள்ள முடியும். சாதாரண சந்தர்ப்பங்களில் இத்தகைய வைப்புக்கள் தொடர்பாக உச்ச வரம்புகளோ அல்லது ஏனைய வரையறைகளோ விதிக்கப்படுவது இல்லை. இந்த நிலையான வசதிகளின் நிருவாகம் பன்முகப்படுத்தப் பட்டிருப்பதுடன், அது தேசிய மத்திய வங்கிகளினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## குறைந்த பட்ச ஒதுக்குகள்

ஐரோப்பிய மத்திய வங்கி அமைப்பின் குறைந்தபட்ச ஒதுக்கு முறை யுரோ பிரதேசத்தில் உள்ள கொடுகடன் நிறுவனங்களுக்கு பொருந்துவதுடன் அது பிரதானமாக பணச் சந்தை வட்டி விகிதங்களை உறுதிப்படுத்திக் கொள்ளல் மற்றும் ஓர் அமைப்பு ரீதியான திரவத் தன்மை பற்றாக்குறையை உருவாக்குதல் (அல்லது விரிவாக்குதல்) ஆகிய நோக்கங்களை முன்னெடுத்துச் செல்கின்றது. ஒவ்வொரு நிறுவனம் தொடர்பான ஒதுக்குத் தேவை அதன் ஐந்தொகையுடன் சம்பந்தப்பட்ட கூறுகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது. வட்டி விகிதங்களை நிலையாக வைத்துக் கொள்ளும் நோக்கத்தின் அடிப்படையில் ஐரோப்பிய மத்திய வங்கி அமைப்பின் ஒதுக்கு முறை சராசரி ஒதுக்கு ஏற்பாடுகளை மேற்கொள்ளும் முறைகளை நிறுவனங்கள் பின்பற்றுவதற்கு இடமளிக்கின்றது. தேவைப்படும் ஒதுக்குகளை பராமரித்து வரும் நிறுவனங்கள் ஐ ம அமைப்பின் பிரதான மீள நிதிப்படுத்தல் செயற்பாடுகளிலிருந்து பயனடைகின்றன.

## கொடுப்பனவு முறை (TARGET)

நாணயக் கொள்கை வழிமுறைகளை செயல்திறனுடன் அமுல் செய்வதற்கும் ஐரோப்பிய பணச் சந்தை குழுவிலும் மத்திய வங்கி பணத்தை பகிர்ந்தளிப்பதற்கும் யுரோ அமைப்புக்கு சக்தி வாய்ந்த செயல்திறனுடன் கூடிய பாரிய பெறுமதிக் கொடுப்பனவு முறையொன்று அவசியமாகின்றது. அத்தகைய ஒரு கொடுப்பனவு முறை மெய் நேர மொத்தக் கொடுப்பனவு வடிவில் கிடைக்கிறது. இது ஆசிய ஐரோப்பிய தன்னியக்க மெய் நேர மொத்த தீர்ப்பனவு மாற்றம் முறை (TARGET) என அழைக்கப்படுகிறது. இதன் குறிக்கோள்கள் வருமாறு:

(அ) எல்லைகளுக்கிடையிலான கொடுப்பனவுகளை தீர்த்து வைப்பதற்காக பாதுகாப்பான நம்பகமான ஒரு பொறிமுறையை வழங்குதல்.

(ஆ) ஐரோப்பிய யூனியனுக்கு இடையிலான கொடுப்பனவுகளில் செயல்திறனை அதிகரித்துக் கொள்ளல்.

(இ) ஐ ம வ அமைப்பின் நாணயக் கொள்கையின் தேவைகளை நிறைவு செய்து வைத்தல்.

இந்த "TARGET" முறையின் அனுகூலங்களை பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்:

(1) நெகிழ்ச்சித் தன்மையுடன் கூடிய திரவத் தன்மை முகாமை.

(2) நட்டவச்சக் குறைப்பு.

(3) மெய் நேரக் கொடுப்பனவு.

(4) அனைவருக்கும் பொருந்தக் கூடிய செயற்பாட்டு நேரங்கள்.

(5) ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த எந்தவொரு கடன் நிறுவனத்தையும் அணுகும் வாய்ப்பு.

(6) தகவல்கள் முழுமையாக ஒரு அந்தத்திலிருந்து மற்றொரு அந்தத்துக்கு செல்லும் வாய்ப்பு.

(7) ஒரு கொடுப்பனவை மேற்கொள்வதன் செலவு

## யுரோ அறிமுகம்: உலகளாவிய தாக்கங்கள்

ஐரோப்பிய யூனியனின் பெரும்

பகுதியை உள்ளடக்கக் கூடிய விதத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் யுரோ நாணயத்தின் அறிமுகம் இன்றைய யுகத்தின் மிகப்பெரிய சவாலாக இருந்து வர முடியும் என்பதனை எவரும் அறுதியிட்டுக் கூற முடியும். யுரோவை தனியொரு நாணயமாக உபயோகிக்கும் நடைமுறை 2002 ஜுலை 01 ஆம் திகதியன்று பூர்த்தியடையும். தனியொரு நாணயம் பல்வேறு அனுகூலங்களையும் கொண்டுள்ளது. முதலாவதாக, நாடுகளைத் தாண்டி பயணம் செய்யும் பயணிகள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பணத்தை மாற்றிக்கொள்ள வேண்டிய தேவை (ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலின் போதும் பண இழப்புக்களை அனுபவிக்க வேண்டிய தேவை) இனி இருந்து வர மாட்டாது. இரண்டாவதாக, வங்கிகளுக்கு செலுத்தப்பட்டு வரும் செலாவணி மாற்றல் கட்டணங்கள் ஒழிக்கப்பட்டுவிடும். மூன்றாவதாக உறுப்பு நாடுகளில் கொடுப்பனவுகளும் மாற்றல்களும் மிக வேகமாகவும் நம்பகமாகவும் மலிவாக வும் இடம்பெற்று வருவதனால் குறிப் பாக சிறு வர்த்தகத் துறையினர் பயன டைவர். நான்காவதாக தனியொரு நாணயம் வர்த்தகத் துறையினர் மற்றும் நுகர்வோர் ஆகியோரைப் பொறுத்தவரையில் பொருட்கள் விற்கப்படும் விலை தொடர் பான நிச்சயமற்ற நிலையை இல்லாமல் செய்துவிடும். செலாவணி அசைவுகளில் திடீரென ஏற்படும் மாற்றங்கள் ஒரு சில மணி நேரங்களில் இலாபங்கள் அனைத்தையும் அடித்துச் சென்றுவிட முடியும். ஐந்தாவதாக பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவை தனியொரு நாணயத்தில் விலையிடப்பட்டிருந்தால் தனி நாணயத்தின் போட்டித் தாக்கம் விலைகளின் அடிப்படையில் நுகர்வோருக்கு சாதகமானதாக அமையும். இதுவரை காலமும் ஐக்கிய அமெரிக்க டொலர் உலகின் பிரதான ஒதுக்கு நாணயமாக இருந்து வந்துள்ளது. இந் நிலைமையை மாற்றியமைக்கும் நீண்ட கால குறிக்கோளை நிறைவேற்றி வைக்கும் வழியில் யுரோ நாணயத்தின் அறிமுகம் ஒரு மைல் கல்லாக உள்ளது. நீண்ட காலமாக ஐக்கிய அமெரிக்க டொலரே உலகின் முதன்மையான ஒதுக்கு நாணயமாக இருந்து வந்துள்ளது. உலகின் பல நாடுகள் தமது அந்நியச் செலாவணி ஒதுக்குகளை டொலரிலேயே பராமரித்து வருகின்றன. தற்பொழுது உலகளாவிய ரீதியில் சுமார் 65% ஆன உத்தியோகபூர்வ அந்நியச் செலாவணி ஒதுக்குகள் டொலரிலேயே வைக்கப்பட்டுள்ளன. டொய்ஷ் மார்க் நாணயத்திலான ஒதுக்குகள் 12.8% ஆகவும், பிரெஞ்சு பிராங்க் நாணயத்திலான ஒதுக்குகள் 1.2% ஆகவும் இருந்து வருகின்றன. அதேவேளையில், 4.9% அந்நியச் செலாவணி ஒதுக்குகள் யென் நாணயத்தில் வைக்கப்பட்டுள்ளன.

தமது உத்தியோக பூர்வ ஒதுக்குகளை இந்நாடுகள் டொலரிலிருந்து யுரோ நாணயத்துக்கு மாற்றிக் கொள்வதற்கான வாய்ப்பு உள்ளதா? இது முக்கியமாக கிழக்கு ஐரோப்பாவைச் சேர்ந்த நாடுகளுக்கு பொருந்தக் கூடியதாக உள்ளது. இந்நாடுகள் பெரும்பாலானவற்றின் வர்த்தகம் ஜேர்மனியுடன் மேற்கொள்ளப்பட்டு வருவதனால் அவை தமது நாணயங்களை டொய்ஷ் மார்க்குடன் பிணைத்துக் கொண்டுள்ளன. அந்நாடுகள் தமது ஒதுக்குகளை பிரதானமாக யுரோ நாணயத்தில் வைத்துக் கொள்வதற்கான வாய்ப்பு உள்ளது. அநேகமாக டொலரில் பாரிய ஒதுக்குகளை வைத்திருக்கும் ஏனைய நாடுகள், உதாரணமாக இலத்தின் அமெரிக்கா போன்ற ஐக்கிய அமெரிக்காவுடன் உறுதியான வர்த்தக உறவுகளைக் கொண்ட நாடுகள், யுரோவுக்கென டொலர்களை கைவிடும் என எதிர்பார்க்க முடியாது. இந்தப் பின்னணியில் ஓர் ஒதுக்கு நாணயம் என்ற முறையில் டொலர் கடுமையான போட்டியை எதிர்கொள்ள நேரிடும். எவ்வாறிருப்பினும், யுரோ நாணயத்தின் நிலை அதன் உறுப்பு நாடுகளின் பேரண்டப் பொருளியல் உறுதிப்பாட்டிலேயே பெருமளவுக்கு தங்கியிருக்கும். உடனடி எதிர்காலத்தில் யுரோ நாணயம் உலகத்தின் பிரதான ஒதுக்கு நாணயம் என்ற ஸ்தானத்தை ஈட்டிக் கொள்வது அநேகமாக சாத்தியமில்லை. எனினும், வருங்காலத்தில் அமெரிக்க டொலருக்கு அது வழங்கவிருக்கும் போட்டி காரணமாக இரு நாணயங்களும் தமது நிலைகளை விருத்தி செய்து கொள்வதற்கும், தமது சார்பு ரீதியான மதிப்பினை பராமரித்து வருவதற்கும் அவற்றை நிர்ப்பந்திக்கும்.

## சிறப்பு எடுப்பனவு உரிமை (சி எ உ) தொடர்பான தாக்கங்கள்

சி எ உ சர்வதேச நாணய நிதியத்தின் கணக்குகளில், உறுப்பு நாடுகளுடனான அதன் நிதிசார் உறவுகளில் ஒரு கணக்கீட்டு அலகு என்ற முறையில் மிக முக்கியமான ஒரு பங்கினை வகித்து வருகின்றது. ச நா நி மிக முக்கியமான 5 நாணயங்களின் ஒரு கூடையாக சி எ உ வை நிர்ணயித்து வருகின்றது. இந்தக் கூடையில் இந்த நாணயங்களின் பங்குகள் அவற்றின் வெளி மதிப்பினை பிரதிநிதித்துவம் செய்வதாக கருதப்படுகிறது. சி எ உ கூடை ஐக்கிய அமெரிக்க டொலர், டொய்ஷ் மார்க், ஜப்பானிய யென், பிரெஞ்சு பிராங்க் மற்றும் ஸ்டேர்லிங் பவுண் என்பவற்றை உள்ளடக்குகின்றது. 1996 ஜனவரி 01 இல் சி எ உ கூடையில் டொலரின் நிறையேற்றம் 39% ஆகவும், டொய்ஷ் மார்க் நிறையேற்றம் 21% ஆகவும், யென் 18% ஆகவும், பிரெஞ்சு பிராங்க் மற்றும் ஸ்டேர்லிங் பவுண் என்பன ஒவ்வொன்றும் 11% ஆகவும் இருந்து வந்தன. 1999 ஜனவரி 01 ஆம் திகதி பின்வருமாறு காணப்பட்டது: அமெரிக்க டொலர் 39%, யுரோ (டொய்ஷ் மார்க்கின் 21% மற்றும் பிரெஞ்சு பிராங்கின் 11% என்பவற்றுக்கு பதிலாக) 39%, யென் 18%, ஸ்டேர்லிங் பவுண் 11% என நிலவி வந்தன.

யுரோ நாணயத்தின் அறிமுகத்தின் விளைவாக யுரோ பிரதேச நாடுகளின் சர்வதேச நாணய நிதியத்துடனான உறவுகளில் முக்கியமான பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சர்வதேச நாணய நிதியம் தொடர்பான உறுப்பு உடன்படிக்கை 1944 ஜுலை 22 ஆம் திகதி பிரெட்டன் வூட்ஸில் கைச்சாத்திடப்பட்டதுடன், அது 1945 டிசம்பர் 27 ஆம் திகதி அமுலுக்கு வந்தது. இந்த ஒப்பந்த விதிகளின் பிரகாரம் இறைமை உள்ள அரசுகள் மட்டுமே அதில் உறுப்புரிமையை பெற்றுக் கொள்ளலாம். தங்கியிருக்கும் பிரதேசங்கள் அல்லது அதி உயர் மட்டத்திலான கூட்டுக்கள் அல்லது ஐரோப்பிய சமூகம் போன்ற நிறுவனங்கள் இதில் உறுப்புரிமையை பெற முடியாது. ஒவ்வொரு உறுப்பு நாட்டுக்கும் உலக அளவில் அதன் பொருளாதாரத்தின் அளவை அடிப்படையாகக் கொண்ட ஒரு பங்கீடு வழங்கப்படுகின்றது. இந்த அடிப்படையிலேயே சர்வதேச நாணய நிதியத்துக்குள் சம்பந்தப்பட்ட நாட்டின் நிதிசார் உரிமைகள், கடப்பாடுகள் மற்றும் வாக்களிக்கும் உரிமைகள் என்பன நிர்ணயிக்கப்படுகின்றன. ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த 15 நாடுகளும் ஏறத்தாழ 30% க்கு மேற்பட்ட பங்கீட்டை கொண்டிருப்பதுடன் யுரோ பிரதேசத்தைச் சேர்ந்த 11 நாடுகளின் கோட்டா பங்கு 23% க்கு மேற்பட்டதாக உள்ளது. தற்பொழுது ச நா நி யின் நிறைவேற்று சபையில் முகாமைத்துவ பணிப்பாளருடன் 24 நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் உள்ளனர். மிகப் பெரிய கோட்டா பங்குகளை கொண்டிருக்கும் (ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான், ஜேர்மனி, பிரான்ஸ், மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய) 5 உறுப்பு நாடுகளினால் இப் பணிப்பாளர்களில் ஐவர் நியமனம் செய்யப்படுகின்றனர். ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த 12 நாடுகளினால் தமது சொந்த நிறைவேற்றுப் பணிப்பாளரை நியமனம் செய்துகொள்ள முடியாது என்பதனை இது காட்டுகின்றது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நீண்ட பேச்சு வார்த்தைகளின் பின்னர் ச நா நி யின் நிறைவேற்று சபையில் ஐரோப்பிய மத்திய வங்கிக்கு ஒரு பார்வையாளர் என்ற

(18 ஆம் பக்கம் பார்க்க)

# ஐரோப்பா மற்றும் இலங்கை

### வரலாற்றுப் பின்புலம்

புராதன கால ஐரோப்பா தப்ரபேன் என்ற அரபுப் பெயரில் இலங்கையை அறிந்திருந்தது. 8 ஆம் நூற்றாண்டில் வெளியிடப்பட்ட ஒரு ஜேர்மனிய நூல் தப்ரபேன் தீவு புராணங்களையும் யானைகளையும் இரத்தினக் கற்களையும் கொண்டிருப்பதாகவும், அது ஆண்டு முழுவதும் சூரிய ஒளியை வழங்குவதுடன் குளிர் நிலவும் ஐரோப்பாவில் வாழும் மக்களுக்கு அபரிமிதமான செல்வங்களை வழங்கும் ஒரு கனவுலகமாக இருந்து வருகின்றது என்றும் வர்ணிக்கின்றது.

ஐரோப்பா இலங்கையுடன் மிக நீண்ட காலமாக இடைத் தொடர்புகளை பராமரித்து வந்துள்ளது. குறிப்பாக மூன்று ஐரோப்பிய வல்லரசுகள் இலங்கையில் தமது முத்திரையை பதித்துச் சென்றுள்ளன. 1505 இல் இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயர் நாட்டின் தாழ் நிலப் பகுதிகள் பெரும்பாலானவற்றில் தமது ஆதிக்கத்தை நிலை நாட்டிக் கொண்டதுடன், 1658 வரையில் இங்கு ஆட்சி செய்தனர். அவர்களை அடுத்து ஐக்கிய கிழக்கிந்திய கம்பெனியைச் சேர்ந்த டச்சுக்காரர்கள் இங்கு வந்தனர். டச்சு ஆட்சி (கரையோரப் பிரதேசங்களில்) முடிவுக்கு வந்ததுடன் பிரிட்டிஷ்காரர்கள் முழு நாட்டையும் தமது கொடியின் கீழ் கொண்டு வந்தனர்.

இந்த மூன்று காலனித்துவ வல்லரசுகளும் நாட்டின் சமூகக் கட்டமைப்பில் நிலையான பல தாக்கங்களை விட்டுச் சென்றுள்ளன. போர்த்துக்கேயருப்புக்களை அடுத்து இங்கு வந்த கத் தோலிக்க மிஷன் பெருந்தொகையான மக்களை கத்தோலிக்க மதத்துக்கு மதமாற்றம் செய்தனர். இன்று குறிப்பாக நாட்டின் மேற்கு கரையோரப் பிரதேசத்திலும் வட பிரதேசத்திலும் கணிசமான அளவிலான கத்தோலிக்கர்கள் வாழ்ந்து வருகின்றனர். இலங்கையில் டச்சுக்காரர்கள் விட்டுச் சென்ற முதுசம் ரோமன் டச்சு சட்ட முறையாகும். இது இன்று நவீன இலங்கையின் சட்டத் தொகுப்பின் ஒருங்கிணைந்த ஒரு பாகமாக காணப்படுகிறது. மேலும், டச்சுக்காரர்கள் கரையோரப் பிரதேசங்களில் குடியிருப்புக்களையும் கோட்டைகளையும் ஸ்தாபித்தனர். காலிக் கோட்டை இலங்கையில் டச்சு யுகத்தின் ஓர் அழியாத சின்னமாகும். டச்சுக்காரர்களும் அதேபோல போர்த்துக்கேயரும் உள்நாட்டு சமூகத்தினருடன் திருமண உறவுகளை ஏற்படுத்திக் கொண்டனர். நாட்டில் இன்றும் வாழ்ந்து வரும் சிறு எண்ணிக்கையிலான பறங்கியர் சமூகம் இவர்களின் வழித் தோன்றல்கள் ஆவர்.

ஆனால், இலங்கையை பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் முழுமையாக நிலை மாற்றத்துக்கு உள்ளாக்கியவர்கள் பிரிட்டிஷ் காரர்கள் என்பதில் இரு வேறு கருத்துக்கள் இருக்க முடியாது. இலங்கை தேயிலை மற்றும் இறப்பர் ஆகிய விளைபொருட்களின் மிக முக்கியமான ஒரு நாடாக உருவாகியது. அண்மைக் காலம் வரையில் நாட்டின் மொத்த ஏற்றுமதிச் சம்பாத்தியங்களுக்கு இந்த இரு பண்டங்களும் கணிசமான அளவிலான பங்களிப்பினை வழங்கிக் கொண்டிருந்தன. பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இலங்கையில் சிறந்த பாதை வசதிகளையும் ரெயில் பாதை வசதிகளையும் உருவாக்கினார்கள். அத்துடன் நாட்டின் சட்ட மற்றும் அரசியல் நிறுவனங்களும் அவர்களுடைய ஆட்சிக் காலத்தின் போது ஸ்தாபிக்கப்பட்டன. இன்று இலங்கையின் சட்ட அமைப்பு பெருமளவுக்கு பிரிட்டிஷ் பொதுச் சட்ட கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டதாகவே உள்ளது. நாட்டின் அரசியல் முறை ஆரம்பத்தில் முழுவதும் வெஸ்மினிஸ்டர் பாராளுமன்ற முறையை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப்பட்டிருந்தது. இன்னமும் கூட அந்த மாதிரியின் பிரதான பண்புக் கூறுகளை எமது அரசியலமைப்பு தன்னகத்தே கொண்டுள்ளது. இலங்கை 1948 பெப்பரவரி 04 ஆம் திகதி சோல்பரி பாராளுமன்ற அரசியலமைப்பின் கீழ் சுதந்திரமடைந்தது. 1972 இல் அது ஒரு சுதந்திர குடியரசாக பிரகடனம் செய்யப்பட்டினை அடுத்து பிரிட்டனுடனான பிணைப்புக்கள் முழுவதுமாக அறுத்து எளியப்பட்டன.

மேலே குறிப்பிடப்பட்ட காலனித்துவ வல்லரசுகள் தவிர வேறு சில ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த மக்களும் இலங்கையின் மீது தமது செல்வாக்கினை பதியச் செய்துள்ளனர். ஜேர்மனியரான வில்ஹெல்ம் கெய்ர் மகாவம்சத்தை மொழி பெயர்த்து அதற்கு பொழிப்புரை வழங்கியதுடன், இலங்கை மக்கள் தமது கடந்த காலம் குறித்த பார்வையை கூர்மைப் படுத்திக் கொள்வதற்கு உதவினார்.

### வர்த்தகம்

ஐரோப்பிய யூனியன் உறுப்பு நாடுகளுக்கும் இலங்கைக்கும் இடையிலான பொருளாதார உறவுகளில் வர்த்தகம் மற்றும் உதவி என்பன ஆதிக்கம் செலுத்துகின்றன. ஐரோப்பிய யூனியனுக்கான இலங்கையின் ஏற்றுமதிகள் கடந்த இரு தசாப்த காலத்தின் போது கணிசமான அளவில் மாற்றம் கண்டுள்ளன. 1970கள் வரையில் தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதித் துறையில் ஆதிக்கம் செலுத்தி வந்தன. இன்று ஆடைக் கைத்தொழில் ஏற்றுமதிகளில் பெருமை மிக்க ஒரு ஸ்தானத்தை ஈட்டிக் கொண்டுள்ளது. தற்பொழுது இலங்கையின் ஏற்றுமதிகளில் சுமார் 30% ஆனவற்றை ஐரோப்பிய யூனியன் பெற்று வருகிறது. ஐக்கிய அமெரிக்காவை அடுத்து இலங்கையின் மிகப் பெரிய ஏற்றுமதிச் சந்தையாக இது உள்ளது. ஐரோப்பிய யூனியனுக்கான இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளில் சுமார் அரைவாசிக்கும் மேற்பட்ட பகுதி ஐக்கிய இராச்சியம் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கே ஏற்றுமதி செய்யப்படுகிறது.

(பட்டம் தீட்டப்பட்ட வைரங்களின் ஏற்றுமதி காரணமாக) பெல்ஜியம், லக்ஸம்பேக் மற்றும் நெதர்லாந்து போன்ற நாடுகளும் இலங்கையின் முக்கிய சந்தைகளாக இருந்து வருகின்றன. ஐரோப்பிய யூனியனுக்கான இலங்கையின் ஏற்றுமதிகளில் சுமார் அரைவாசிப் பகுதி தயார்செய்யப்பட்ட ஆடைகளாகும். ஐரோப்பிய யூனியன் தற்பொழுது இலங்கையின் இறக்குமதிகளில் 16% இற்கு சற்று அதிகமான ஒரு பகுதியை வழங்கி வருகின்றது. இறக்குமதிகளிலும் கூட சுமார் அரைவாசிப்பகுதி ஐக்கிய இராச்சியம் மற்றும் ஜேர்மனி ஆகிய இரு நாடுகளிலிருந்தே வருகிறது. பெல்ஜியம் - லக்ஸம்பேர்க், இத்தாலி மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளும் இலங்கைக்கு இறக்குமதிகளை வழங்கும் முக்கிய நாடுகளாக இருந்து வருகின்றன. வெளிநாட்டு வர்த்தகத்தை பொறுத்தவரையில்

ஐரோப்பிய யூனியன் உறுப்பு நாடுகளில் ஐக்கிய இராச்சியம் ஒரு முன்னணிப் பங்கினை வகித்து வருகின்றது. ஐக்கிய இராச்சியம் இலங்கையின் இரண்டாவது மிகப் பெரிய ஏற்றுமதிச் சந்தையாக இருந்து வருவதுடன், இலங்கைக்கு பண்டங்களை ஏற்றுமதி செய்யும் ஏழாவது மிகப் பெரிய நாடாகவும் உள்ளது. வலு உருவாக்க உபகரணங்கள், மருந்துப் பொருட்கள், உலோகமல்லாத கனிப் பொருட்கள் மற்றும் தொலைத் தொடர்பு உபகரணங்கள் என்பன இலங்கைக்கான ஐக்கிய இராச்சியத்தின் பிரதான ஏற்றுமதிப் பண்டங்களில் அடங்குகின்றன. ஐக்கிய இராச்சியம் இலங்கையிலிருந்து முதன்மையாக ஆடை வகைகளையே இறக்குமதி செய்கின்றது. அதனையடுத்து தேயிலை, வாசனைத் திரவியங்கள் மற்றும் ஜவுளி வகைகள் என்பன இடம்பெறுகின்றன. ஜேர்மனி இலங்கையின் ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த இரண்டாவது மிகப்பெரிய வர்த்தகக் கூட்டாளியாக இருந்து வருகின்றது. ஜேர்மனிக்கான இலங்கையின் ஏற்றுமதிகளில் ஜவுளி வகைகள், ஆடைகள், தேயிலை ஏனைய உணவுப் பண்டங்கள் என்பனவும், இறப்பர் மற்றும் இறப்பர் உற்பத்திப் பொருட்களும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இலங்கை ஜேர்மனியிலிருந்து இறக்குமதி செய்யும் முக்கியமான பண்டங்களாக (உள்ளூர் ஆடைக் கைத்தொழிலுக்குத் தேவைப்படும் சிந்தெடிக் உள்ளீடுகளான) ஜவுளி வகைகள், இயந்திரங்கள், இரசாயனப் பொருட்கள், கார்கள், டிரக் வண்டிகள் மற்றும் மின்னணு தொழில்நுட்பப் பொருட்கள் என்பன அடங்குகின்றன.

**இலங்கையின் ஏற்றுமதிகள் 1996**
**(நாடுவாரியாக)**

| நாடு | ஏற்றுமதிகள் (ரூ. மில்லியன்) | % பங்கு |
|---|---|---|
| அவுஸ்திரியா | 396 | 0.2 |
| பெல்ஜியம் – லக்ஸம்பேக் | 12,119 | 5.3 |
| டென்மார்க் | 612 | 0.3 |
| பின்லாந்து | 167 | 0.1 |
| பிரான்ஸ் | 5,983 | 2.6 |
| ஜேர்மனி | 13,229 | 5.8 |
| கிறீஸ் | 534 | 0.2 |
| அயர்லாந்து | 558 | 0.2 |
| இத்தாலி | 3,220 | 1.4 |
| நெதர்லாந்து | 6,833 | 3.0 |
| போர்த்துக்கல் | 244 | 0.1 |
| ஸ்பெயின் | 1,356 | 0.6 |
| சுவீடன் | 1,286 | 0.6 |
| ஐக்கிய இராச்சியம் | 21,477 | 10.0 |
| முழு ஐரோப்பிய யூனியன் | 68,014 | 30.0 |
| அனைத்து நாடுகளும் | 226,801 | 100.0 |

**இலங்கையின் இறக்குமதிகள் 1996**
**(நாடுவாரியாக)**

| நாடு | இறக்குமதிகள் (ரூபா மில்லியன்) | % பங்கு |
|---|---|---|
| அவுஸ்திரியா | 595 | 0.2 |
| பெல்ஜியம் – லக்ஸம்பேக் | 7,903 | 2.6 |
| டென்மார்க் | 1,074 | 0.4 |
| பின்லாந்து | 1,064 | 0.4 |
| பிரான்ஸ் | 2,730 | 0.9 |
| ஜேர்மனி | 8,497 | 2.8 |
| கிறீஸ் | 205 | 0.1 |
| அயர்லாந்து | 348 | 0.1 |
| இத்தாலி | 4,769 | 1.6 |
| நெதர்லாந்து | 4,571 | 1.5 |
| போர்த்துக்கல் | 98 | – |
| ஸ்பெயின் | 459 | 0.2 |
| சுவீடன் | 3,142 | 1.0 |
| ஐக்கிய இராச்சியம் | 13,913 | 4.6 |
| முழு ஐரோப்பிய யூனியன் | 49,368 | 16.5 |
| அனைத்து நாடுகளும் | 299,424 | 100.0 |

## முதலீடு

சொத்து மதிப்பு வெளியீடு மற்றும் வேலை வாய்ப்புக்களின் உருவாக்கம் என்பவற்றின் அடிப்படையில் நோக்கும் பொழுது ஐரோப்பிய யூனியன் உறுப்பு நாடுகளில் ஐக்கிய இராச்சியமே இலங்கையின் மிகப் பெரிய முதலீட்டு நாடாக இருந்து வருகின்றது. கோட்ஸ் டுட்டால், சி ஐ சி மற்றும் சிலோன் டுபாக்கோ என்பன இலங்கையின் முன்னனி பிரிட்டிஷ் கம்பெனிகளாகவும், ஸ்டான்டர்ட் சாட்டர்ட் வங்கி, ஹொங்கொங் அன்ட் ஷாங்காய் பாங்கிங் கோபரேஷன் என்பன இலங்கையில் இயங்கி வரும் முன்னணி பிரிட்டிஷ் வங்கிளாகவும் இருந்து வருகின்றன. இக் கம்பெனிகளில் சில கடந்த நூற்றாண்டு தொடக்கம் இலங்கையில் இயங்கி வந்துள்ளன. மேலும், டெல்மேஜ் போர்சித், எய்ட்கி ஸ்பென்ஸ் மற்றும் ஜோன் கீல்ஸ் முதலிய இலங்கையின் நன்கு ஸ்தாபிதமாகியிருக்கும் பல கம்பெனிகள் கணிசமான அளவிலான பிரிட்டிஷ் நிறுவன பங்குடைமையை கொண்டுள்ளன. இலங்கையின் ஆடைக் கைத்தொழிலும் கூட பிரிட்டன் பெருமளவுக்கு அக்கறை கொண்டிருக்கும் ஒரு துறையாக உள்ளது. இத்தகைய நேரடி முதலீடுகள் தவிர 1990களின் ஆரம்பம் தொடக்கம் கொழும்புப் பங்குச் சந்தையிலும் ஓரளவுக்கு பிரிட்டிஷ் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கையிலான ஜேர்மனியின் நேரடி முதலீடு 1996 இல் சுமார் 12 கோடி டொய்ஷ் மார்க்குகளாக இருந்து வந்தது. ஜேர்மனிக் கம்பெனிகள் இலங்கையில் பிரதானமாக கூட்டு தொழில் முயற்சிகளில் முதலீடு செய்திருப்பதுடன், சுமார் 18,000 தொழில் வாய்ப்புக்களை உருவாக்கியுள்ளன. ஆடை உற்பத்தி, இரசாயன மற்றும் மின்னணுப் பொருட்கள், பஸ் வண்டிகள் தயாரிப்பு, சுற்றுலாத்துறை போன்ற பிரிவுகளில் ஜேர்மனி முதலீடுகளை மேற்கொண்டுள்ளது. முக்கியமாக ஜேர்மனி அரசாங்கத்துக்குச் சொந்தமான அபிவிருத்தி வங்கியான

DEGவங்கி, இலங்கை வங்கி, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் மற்றும் மேர்கன்டைல் ஷிப்பிங் கம்பெனி என்பவற்றில் அக்கறைகளை கொண்டுள்ளது. அண்மைக் காலத்தில் தொலைத் தொடர்புத் துறையைச் சேர்ந்த இரண்டு பாரிய சுவீடிஷ் கம்பெனிகள் இலங்கையில் தம்மை ஸ்தாபித்துக் கொண்டுள்ளன. உள்நாட்டு அடிப்படை தொலைத் தொடர்புச் சேவைகளை வழங்கும் வேலையில் சன்டெல் நிறுவனம் ஈடுபட்டிருப்பதுடன், அது இதுவரையில் சுமார் 10 கோடி அமெரிக்க டொலர்களை இலங்கையில் முதலீடு செய்துள்ளது. எரிக்ஸன் நிறுவனம் இலங்கைக்கு தொலைத் தொடர்பு உபகரணங்களை வழங்கும் ஒரு முக்கிய வழங்குனராக உள்ளது. ட்ரெலர் போக் மற்றும் ஸ்கன்ஸ்கா போன்ற ஏனைய சுவீடிஷ் கம்பெனிகள் இலங்கையில் பல வருட காலம் செயற்பாடுகளை மேற்கொண்டிருந்தன. ஏனைய பெரும்பாலான ஐரோப்பிய யூனியன் நாடுகள் இலங்கையில் வரையறுக்கப்பட்ட அளவிலான முதலீடுகளையே மேற்கொண்டுள்ளன. எனினும், அண்மையில் குறிப்பிட்ட சில புதிய முதலீடுகள் வந்துள்ளன. பிரிட்டிஷ் – டச்சு கம்பெனியான யுனிலிவர் மீரிகமையில் ஐஸ்கிறீம் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பித்துள்ளது. ரோயல் டச்சு கம்பெனி இலங்கை கேஸ் கம்பெனியை கொள்வனவு செய்துள்ளது. மேலும், பிரெஞ்சு சிமெண்ட் லபார்ஜ் கம்பெனி சுவிஷ் கூட்டாளி ஒருவருடன் இணைந்து மறைன் சீமெந்து (மகாவெலி சீமெந்து) நிறுவனத்தை கொள்வனவு செய்துள்ளது.

## சுற்றுலாத் துறை

இலங்கை வண்ணமயமான கடற்கரைகள், பசுமைத் தாவரங்கள், புராதன நகரங்கள் மற்றும் விருந்தோம்பும் கலாசாரம் என்பன குறித்து நன்கு அறியப்பட்டுள்ள ஒரு நாடாகும். அதன் சுற்றுலாக் கைத்தொழிலுக்கு ஊடாக வேலை வாய்ப்புக்களையும் வருமானத்தையும் உருவாக்கக்கூடிய பாரிய உள்ளார்ந்த ஆற்றலை அது தன்னகத்தே கொண்டுள்ளது. குறிப்பாக ஐரோப்பிய யூனியன் நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் இயற்கை எழில் மற்றும் கலாசார செழுமை ஆகிய இரண்டையும் நாடி இங்கு வருகின்றார்கள். நாட்டில் இடம்பெற்று வரும் இன மோதல்கள் கடந்த சில வருடகாலமாக இலங்கை தொடர்பாக சர்வதேச ரீதியில் சாதகமற்ற ஒரு பிரசாரத்தை ஏற்படுத்தியிருந்த போதிலும் சுற்றுலாத் துறை பொருளாதாரத்தின் முக்கியமான துறை என்ற தனது ஸ்தானத்தை தொடர்ந்தும் பேணி வந்துள்ளது. ஐரோப்பாவிலிருந்து வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையில் ஓர் ஏறுமுகமான போக்கும் தென்படுகிறது.

இலங்கை சுற்றுலாச் சபையின் மாதாந்த செய்தி விவரணம் (அக்டோபர் 1997) மேற்கு ஐரோப்பிய பயணிகள் வருகை தொடர்பாக பின்வருமாறு குறிப்பிடுகிறது:

11 மேற்கு ஐரோப்பா 38.2% அதிகரிப்பை இவ்வாண்டின் போது பதிவு செய்ததுடன் இவ்வாண்டின் போது பதிவு செய்யப்பட மிக உயர்ந்த மாதாந்த சதவித அதிகரிப்பு இதுவாகும். ஜேர்மனி மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளிலிருந்து வரும் பயணிகள் எண்ணிக்கையில் ஓர் ஏறு முகமான போக்கு ஏற்பட்டிருந்தமையே இதற்கான காரணமாகும். பிரான்சிலிருந்து வரும் பயணிகள் எண்ணிக்கை அதிகரிப்பு பராமரிக்கப்பட்டு வந்திருக்கும் அதேவேளையில், கடந்த 3 மாதங்களில் ஏற்பட்ட உயர் அதிகரிப்புக்களுக்குப் பின்னர் இத்தாலிய பயணிகள் வருகையில் மந்தப் போக்கு ஏற்பட்டுள்ளது."

## உதவி: ஒரு பொதுநோக்கு

பொருளாதார, அரசியல் மற்றும் மனிதாபிமான காரணங்களுக்கு ஆதரவு வழங்கும் பல்வேறு உதவி நிகழ்ச்சித் திட்டங்கள் இலங்கையின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்து வருகின்றன. ஐரோப்பிய யூனியனும் அதன் ஒரு சில உறுப்பு அரசுகளும் இலங்கைக்கு உதவி வழங்கும் முக்கிய நாடுகளாக இருந்து வருகின்றன. இந்த உதவியின் பெரும்பாலான பகுதி கொடைகளின் வடிவிலேயே வருகின்றது. அண்மைய வருடங்களில் உதவி தொடர்பான மொத்தக் கடப்பாடுகள் ஆண்டொன்றுக்கு சுமார் 3 கோடி அ டொலர்களிலிருந்து 5 கோடி அ டொலர் வரையிலான வீச்சுக்களில் இருந்து வந்துள்ளது. நெதர்லாந்து, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஜேர்மனி என்பன இலங்கைக்கு உதவிக் கொடைகளை வழங்கும் பிரதான ஐரோப்பிய யூனியன் நாடுகளாகும். பின்லாந்து மற்றும் டென்மார்க் போன்ற நாடுகள் 1990 களின் தொடக்கம் வரையில் இலங்கைக்கு உதவிக் கொடைகளை வழங்கும் முக்கிய மூலதாரங்களாக இருந்தன.

ஐரோப்பிய யூனியன் தனியொரு அமைப்பு என்ற முறையில் அதன்

**இலங்கைக்கு மேற்கு ஐரோப்பாவிலிருந்து சுற்றுலா பயணிகளின் வருகை 1989 – 1997 (நாடு மற்றும் தேசிய இனவாரியாக)**

| நாடு | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அவுஸ்திரியா | 4,962 | 7,790 | 6,318 | 8,418 | 9,087 | 8,736 | 6,927 | 5,145 | 5,823 |
| பெல்ஜியம் | 3,410 | 4,954 | 10,119 | 10,119 | 8,835 | 10,152 | 7,356 | 6,150 | 6,816 |
| டென்மார்க் | 1,112 | 1,088 | 1,917 | 1,971 | 3,375 | 3,126 | 2,967 | 1,629 | 1,851 |
| பின்லாந்து | 558 | 770 | 34,770 | 1,563 | 1,917 | 4,146 | 3,261 | 522 | 564 |
| பிரான்ஸ் | 19,744 | 33,044 | 95,541 | 40,206 | 34,770 | 30,510 | 31,008 | 21,453 | 23,392 |
| ஜேர்மனி | 30,180 | 59,086 | 18,210 | 85,365 | 95,541 | 93,756 | 79,869 | 45,123 | 59,814 |
| இத்தாலி | 14,774 | 19,212 | 15,387 | 25,539 | 18,210 | 18,066 | 18,378 | 11,976 | 14,424 |
| நெதர்லாந்து | 5,772 | 8,696 | 978 | 17,529 | 15,387 | 12,222 | 14,307 | 11,004 | 15,957 |
| நோர்வே | 600 | 766 | 2,334 | 966 | 978 | 1,254 | 1,068 | 882 | 1,242 |
| ஸ்பெயின் | 822 | 1,550 | 6,426 | 2,643 | 2,334 | 2,811 | 2,952 | 1,788 | 2,406 |
| சுவீடன் | 1,514 | 1,486 | 2,653 | 3,714 | 6,426 | 6,393 | 7,530 | 3,882 | 4,014 |
| சுவிட்சர்லாந்து | 3,854 | 6,518 | 7,771 | 11,484 | 16,194 | 12,489 | 8,343 | 4,353 | 8,169 |
| ஐக்கிய இராச்சியம் | 25,540 | 40,476 | 31,585 | 41,238 | 44,226 | 50,313 | 64,491 | 53,163 | 62,997 |
| ஏனையன | 1,718 | 5,176 | 802 | 2,097 | 2,379 | 2,582 | 2,510 | 1,854 | 2,583 |
| மேற்கு ஐரோப்பா | 115,560 | 190,612 | 195,041 | 252,852 | 253,659 | 256,527 | 251,067 | 168,724 | 212,052 |
| அனைத்து நாடுகளும் | 184,732 | 297,888 | 317,703 | 393,669 | 392,250 | 407,511 | 403,101 | 302,265 | 366,165 |

மூலம்: வருடாந்த புள்ளி விவர அறிக்கை 1997, இலங்கை சுற்றுலா சபை

உறுப்பு அரசுகளின் இருபக்க நிகழ்ச்சித் திட்டங்கள் தவிர இலங்கைக்கு கணிசமான அளவில் உதவிகளை வழங்கும் அமைப்பாக உள்ளது "ஐரோப்பிய சமூக உதவி" என்ற பதம் ஐரோப்பிய ஆணைக் குழுவினால் நிர்வகிக்கப்படும் ஐரோப்பிய உதவியின் கூறினை குறித்துக் காட்டுகின்றது. ஐரோப்பிய ஆணைக்குழு வரவு செலவுத்திட்டம் இலங்கைக்கான மொத்த உதவியில் அரைவாசிப் பகுதியை வழங்குகின்றது. ஐரோப்பிய அபிவிருத்தி நிதியம் சுமார் 1/8 பகுதியை வழங்குகின்றது.

### ஜேர்மனி உதவி செய்திட்டங்கள்

அபிவிருத்தி ஒத்துழைப்பை பொறுத்தவரையில் இலங்கை ஆசியாவிலுள்ள ஜேர்மனியின் ஒரு முக்கிய கூட்டாளி நாடாக இருந்து வருகின்றது. இந்த இரு நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு ஒத்துழைப்பில் வறுமை ஒழிப்பு, சுற்றலாடல் பாதுகாப்பு மற்றும் இயற்கை வள முகாமை, கிராமிய அபிவிருத்தி, உள்கட்டமைப்பு வசதிகள் விருத்தி, கல்வி மற்றும் தொழில் பயிற்சி என்பன முன்னுரிமைத் துறைகளாக இருந்து வருகின்றன. அண்மைய வருடங்களில் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து வைப்பதிலேயே ஜேர்மனி உதவி பெருமளவுக்கு கவனம் செலுத்தி வந்துள்ளது. துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் ஒரு பாகமான ரன்தெனிகல மற்றும் ரன்தம்பே ஆகிய இரு பாரிய செய்திட்டங்களை நிதிப்படுத்துவதற்கு ஜேர்மனி உதவி வழங்கியது. 1989 இல் பூர்த்தி செய்யப்பட்ட இந்த இரு செய்திட்டங்களும் இலங்கையின் மின்சார வழங்கலுக்கும் நீர்ப்பாசனத் தேவைகளுக்கும் கணிசமான அளவிலான பங்களிப்புக்களை வழங்கின. ஈடுபடுத்தப்பட்ட நிதிக் கட்டுப்பாட்டின் அளவு மற்றும் தொழில்நுட்பச் சாதனை என்பவற்றின் அடிப்படையில் இவை மிகப் பாரிய செய்திட்டங்களாக இருந்து வந்தன. மொறட்டுவையில் அமைந்துள்ள தொழில் பயிலுனர் பயிற்சி நிறுவனம், இலங்கை - ஜேர்மனி தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் மற்றும் இரத்மலானையில் அமைந்துள்ள ரெயில்வே தொழில்நுட்ப பயிற்சி மையம் என்பவற்றுக்கு ஜேர்மனி கணிசமான அளவில் பங்களிப்புச் செய்துள்ளது. கோட்பாட்டு ரீதியான பாடசாலைக் கல்வியை தொழிலில் ஈடுபடுவதன் மூலம் நடைமுறைப் பயிற்சியுடன் இணைக்கும் "ஜேர்மனி மாதிரி" இந்த நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இலங்கையின் விவசாயத் துறைக்கும் ஜேர்மனி உதவிகளை வழங்கி வருகின்றது. அநுராதபுரத்தில் இலங்கை - ஜேர்மனி பண்ணை இயந்திரமயமாக்கல் பயிற்சி நிலையம், மகா இலுப்பல்லம பாதுகாப்பு பண்ணை செய்திட்டம் மற்றும் சிறு உடைமையாளர் ஒருங்கிணைந்த கால்நடை அபிவிருத்தி செய்திட்டம் என்பன இத்துறையில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் ஒரு சில செய்திட்டங்களாகும்.

நாட்டின் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் இடம்பெற்று வரும் போர் காரணமாக இடம் பெயர்ந்திருக்கும் அகதிகளுக்கு இருப்பிடம், உணவு மற்றும் மருத்துவ உதவி என்பவற்றை வழங்கும் பண்ட உதவி செய்திட்டங்களையும் ஜேர்மனி பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது. யாழ்ப்பாணத்தை புனரமைப்புச் செய்வதில் உதவுவதற்கென ஒரு புதிய ஒத்துழைப்புச் செய்திட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்துக்கான நீர் விநியோகத்தின் தரத்தை விருத்தி செய்தல், தனியார் வீடுகளை புனரமைப்புச் செய்தல் மற்றும் சேதமடைந்துள்ள பாடசாலைக் கட்டடங்களை திருத்தியமைத்தல் என்பன அத்திட்டத்தின் நோக்கங்களாகும். திருகோணமலைப் பிராந்தியத்துக்கான உணவுப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம் ஒன்றும் தயாரிக்கப்பட்டு வருகின்றது. தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான ஜேர்மனிய முகவரகம் (GTZ) வடக்கிலும் கிழக்கிலும் மனிதாபிமான உதவியை வழங்குவதில் முக்கியமான ஒரு பங்கினை வகித்து வருகின்றது. யாழ்ப்பாணத்தில் வீடுகளை மீளமைப்பு செய்வதற்கென அண்மையில் அது ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை துவக்கியது.

### பிரெஞ்சு உதவி

1950 களின் நடுப் பகுதி தொடக்கம் பிரான்ஸ் இலங்கை தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தி வந்துள்ளது. இந்த உதவி நீண்ட காலக் கடன்கள் மற்றும் கொடைகள் என்ற வடிவில் வழங்கப்பட்டு வந்துள்ளன. (பிரதானமாக மின்சாரம், நீர் மின்சக்தி, பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள், தொலைத்தொடர்பு மற்றும் பயிற்சிப் பாடசாலைகள் என்பவற்றுக்கென உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.) 1970 களின் தசாப்தத்தின் பின்னர் தொடர்ச்சியான பிரெஞ்சு உதவியின் அளவு வீழ்ச்சியடைந்தது. தற்பொழுது உதவி வழங்கப்பட்டு வரும் செய்திட்டங்களில் தொலைத்தொடர்பு, நீர் விநியோகம், விமானப் போக்குவரத்து, சுகாதார சேவைகள் என்பன அடங்குகின்றன. அம்பத்தலே, நீர்கொழும்பு, திருகேணமலை, பதுளை மற்றும் குருணாகல் ஆகிய இடங்களுக்கு பிரெஞ்சு உதவியின் கீழ் நீர் சுத்திகரிப்பு பொறிகள் வழங்கப்பட்டுள்ளன. அண்மையில் ஓர் உணவு உதவி நிகழ்ச்சித் திட்டமும், துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

### இத்தாலியிலிருந்து கிடைக்கும் உதவி

இலங்கைக்கான இத்தாலிய உதவி சுகாதாரம் மற்றும் அபிவிருத்தி போன்ற துறைகளில் கவனம் செலுத்தியுள்ளது. இத்தாலிய வெளிநாட்டு அமைச்சின் ஓர் அங்கமான இத்தாலியன் கூட்டுத்தாபனம் திருசேணமலை மற்றும் மூதூர் வைத்தியசாலைகளின் மீளமைப்பு வேலைகளுக்கு உதவி வழங்கியுள்ளது. மேலும், வடக்கு கிழக்கிலிருந்து இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கான சமூக மற்றும் சுகாதார உதவியை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றுக்கும் (1992-95) இத்தாலி உதவி வழங்கியுள்ளது. இத்திட்டம் கொழும்பு, அநுராதபுரம், புத்தளம் மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் வாழ்ந்து வரும் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உதவிகளை வழங்கியது. இடம் பெயர்ந்துள்ள மக்கள் தொடர்பாக உவக சுகாதார நிறுவனத்துடன் இணைந்து (1993-96) செயற்படுத்தப்பட்ட மற்றொரு நிகழ்ச்சித் திட்டம் இடம்பெயர்ந்துள்ள மக்களின் உளவியல் பொதுச் சுகாதார, சமூக மற்றும் பொருளாதார பிரச்சினைகள் தொடர்பாக ஒருங்கிணைந்த ஓர் அணுகுமுறையை பின்பற்றியது. இத்தாலிய அரசாங்கம் 1997 இல் செஞ்சிலுவை சங்கத்தின் சர்வதேச கமிட்டிக்கு மனிதாபிமான உதவியாக 600,000 அமெரிக்க டொலர்களை வழங்கியது. மேலும் அது 1997 பெப்ரவரியில் 2,700,000 அ. டொ. மென்கடனொன்றுக்கான கடப்பாட்டினை ஏற்றுக் கொண்டது. இந்த ஒத்துழைப்பு செய்திட்டங்கள் எந்தெந்த துறைகளில் செயற்படுத்தப்பட வேண்டும் என்பதனை இரு அரசாங்கங்களும் இணைந்து முடிவு செய்யும். அநேகமாக சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற துறைகளிலேயே இத்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.

### நெதர்லாந்து உதவி

நெதர்லாந்தின் இருதரப்பு ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டம் 3 விடயங்

களில் கவனம் செலுத்துகின்றது:

- கிராமிய அபிவிருத்தி
- சுற்றுச் சூழல்
- புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வு

கிராமிய அபிவிருத்தி நான்கு பிரதான வகைகளை உள்ளடக்குகின்றது. நுவரெலியா மற்றும் இரத்னபுரி ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் முதல் வகையைச் சேர்ந்தவையாகும். இத்திட்டங்களை 1999 இல் நிறுத்திவிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், குறிப்பிட்ட சில நடவடிக்கைகள் பிராந்திய பொருளாதார மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கட்டமைப்பின் கீழ் அந்தந்த மாவட்டங்களில் தொடர்ந்தும் செயற்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. பல்கரும குடும்ப சுற்றாடல் நிகழ்ச்சித் திட்ட மேம்பாட்டை மகாவலி "C" வலயத்தில் அமுல் செய்வதற்கு ஊடாக மகாவலி அபிவிருத்தி அமைச்சுக்கு வழங்கப்பட்டு வரும் ஆதரவு இரண்டாவது வகையில் அடங்குகின்றது.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான உதவித் திட்டங்கள் மூன்றாவது வகையில் அடங்குகின்றன. சமூக நலன்புரி நிகழ்ச்சித் திட்டத்தை அமுல் செய்வதற்கு ஊடாக பிரதானமாக தேயிலை மற்றும் இறப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு உதவி வழங்கப்பட்டு வருவதுடன், பெருந்தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக நலன் புரி அறக்கட்டளைக்கு தொழில்நுட்ப உதவி வழங்கப்படுகின்றது. சமூக நலன் புரி நிகழ்ச்சித்திட்டம் 1997 முடிவின் போது நிறுத்தப்படவிருந்த போதிலும் ஏற்கனவே இடம்பெற்று வரும் நடவடிக்கைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு உதவும் பொருட்டும், பெருந்தோட்ட அபிவிருத்தி உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் தொடக்கத்துக்கு தயாராகும் பொருட்டும் இதனை மேலும் 6 மாத காலத்துக்கு நீடிப்பதற்கு இரு தரப்பினராலும் முடிவு செய்யப்பட்டது. நான்காவது வகை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்துக்கான உதவியாகும். இதன்கீழ் அண்மையில் ஸ்தாபிக்கப்பட்ட சணச அபிவிருத்தி வங்கிக்கு நிறுவன ரீதியான உதவியும் பயிற்சி உதவியும் வழங்கப்பட்டு வருகின்றது.

**சுற்றுச் சூழல் தொடர்பான நடவடிக்கைகள் இரு விரிவான பிரிவுகளில் அடங்குகின்றன:**

பசுமை சுற்றாடல் - ஈர நில பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் தொடர்ச்சியாக ஈர நிலங்களில் ஒருங்கிணைந்த மூலவள முகாமை நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஒருங்கிணைந்த மூலவள முகாமை நிகழ்ச்சித்திட்டம் முதுராஜவெல பாதுகாப்பு வலயம், நீர்கொழும்பு கடல் நீரேரி என்பவற்றை உள்ளடக்கிய முத்துராஜவெல பிரதேசத்தை பேணி அபிவிருத்தி செய்வதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. அது இப்பிரதேசத்திலுள்ள இயற்கை வளங்களை பாதுகாத்துக் கொள்வதிலும் பொருத்தமான மூலவளங்களை உச்ச மட்டத்தில் நிலைத்து நிற்கக்கூடிய விதத்தில் பயன்படுத்திக் கொள்வதனையும் மூலவள முகாமையில் உள்ளூர் முகவரகங்கள் மற்றும் சமூகங்கள் என்பவற்றின் ஆற்றல்களை பலப்படுத்திக் கொள்வதிலும் கவனம் செலுத்தும்.

சாம்பல் நிற சுற்றாடல் - தூய்மைக் கேட்டினை கட்டுப்படுத்துவதற்கான விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகள் என்பவற்றுக்கான வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்துக்கொள்வதற்கென மத்திய சுற்றாடல் அதிகார சபை அண்மையில் உதவி பெற்றுக் கொண்டுள்ளது. தற்பொழுது கம்பெனிகள் சுற்றுச் சூழலுக்கு உசிதமான உற்பத்தி நுட்பங்களை அறிமுகம் செய்து வைக்கும் விஷயத்தில் நெதர்லாந்து ஆலோசகருடன் இலங்கை வர்த்தக சம்மேளனம் இணைந்து பணியாற்றி வருகின்றது.

புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வு என்பவற்றின் கீழ் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் 3 துறைகளை உள்ளடக்குகின்றன: (1) அம்பாறை மாவட்டத்தில் அரசாங்கத்தின் வீடமைப்பு மற்றும் சமூக உள்கட்டமைப்பு நிகழ்ச்சித் திட்டத்துக்கு உதவி வழங்குதல். திருகோணமலை மாவட்டத்தில் மற்றொரு நிகழ்ச்சித் திட்டம் இனங்காணப்பட்டிருப்பதுடன் அது வெகுவிரைவில் ஆரம்பித்து வைக்கப்படும். (2) தூதுவராலயத்தின் நேரடி நிதிப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்துக்கு ஊடாக வடக்கு கிழக்கில் மோதல்கள் இடம்பெற்று வரும் பிரதேசங்களில் இயங்கி வரும் உள்ளூர் அரசு சாரா அமைப்புக்களுக்கு உதவுதல். (3) மோதல்கள் இடம்பெற்று வரும் பிரதேசங்களில் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் அகதிகளுக்கான ஐ நா ஸ்தாபனம், யுனிசெப், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் போன்ற சர்வதேச நிறுவனங்களுக்கும் கெயார் இன்டர்நஷனல் முதலிய அரசு சாரா அமைப்புக்களுக்கும் உதவி வழங்குதல்.

பிரதான துறைகளுக்கு வெளியே மனித உரிமைகள் மற்றும் ஆராய்ச்சி என்பவற்றுக்கு நிதிப்படுத்தல் வசதி வழங்கப்பட்டு வருகின்றது. கொள்கைக் கற்கைகளுக்கான நிறுவனம், கொழும்பு பல்கலைக்கழகத்தின் மனித உரிமைகள் நிலையம், சட்டத்தரணிகள் சங்கம், கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல் பீடம், மத்திய கலாசார நிதியம், களனி மற்றும் பேராதனை பல்கலைக்கழகங்கள் போன்ற பல்வேறு நிறுவனங்களுக்கு ஊடாக இந்த உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், கொழும்பிலுள்ள நெதர்லாந்து தூதரகம் அதன் கலாசார நிதியம், சிறு தூதுவராலய நிதியம் போன்ற பல்வேறு நிதியங்களுக்கு ஊடாகவும் பெருந்தொகையான நடவடிக்கைகளுக்கு உதவிகளை வழங்கி வருகின்றது.

**சுவீடனின் உதவித் திட்டங்கள்**

இலங்கை 1975 தொடக்கம் சுவீடிஷ் அபிவிருத்தி உதவிகளை தொடர்ச்சியாக பெற்று வந்துள்ளது. இங்கு 1976 இல் அபிவிருத்தி ஒத்துழைப்பு அலுவலகம் ஒன்று திறந்து துவக்கப்பட்டதுடன், பின்னர் அது 1980 இல் ஸ்தாபிக்கப்பட்ட சுவீடிஷ் தூதுவராலயத்தின் ஒரு பாகமாக மாறியது. இலங்கைக்கும் சுவீடனுக்கும் இடையிலான முதலாவது இரு தரப்பு செய்திட்டம் 1959 இல் குடும்பத் திட்டமிடல் துறையில் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையுடனான சுவீடனின் அபிவிருத்தி ஒத்துழைப்பு சுவீடிஷ் சர்வதேச ஒத்துழைப்பு முகவரகத்தினால் (SIDA) நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. சமாதானம் மற்றும் ஜனநாயகம் என்பவற்றின் பண்புக் கூறுகளைக் கொண்டிருப்பதுடன், வறியவர்களுக்கு பயனளிக்கும் நிலையான பொருளாதார அபிவிருத்தியையும் உள்ளடக்கிய ஓர் அபிவிருத்தி நிலையை மேம்படுத்துவதே இலங்கையுடனான சுவீடிஷ் அபிவிருத்தி ஒத்துழைப்பின் குறிக்கோளாகும் என ஒரு சமீபத்திய உத்தி ஆவணம் எடுத்து விளக்குகின்றது.

1978-87 காலப் பிரிவின் போது கொத்மலே நீர் மின்சக்தி செய்திட்டத்துக்கு சுவீடன் நிதி உதவி வழங்கியது. இது மகாவலி செய்திட்டத்தின் 3 பாரிய மின்சக்தித் திட்டங்களில் ஒன்றாகும். கொத்மலை மின்சார உற்பத்தி பொறி 1985 இல் அங்குராப்பனம் செய்து வைக்கப்பட்டது. இது இலங்கையிலான சுவீடனின் இரண்டாவது மிகப் பெரிய

அபிவிருத்தித் திட்டமாக இருந்து வந்தது. கொத்மலை செய்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டதனை அடுத்து சுவீடிஷ் சர்வதேச ஒத்துழைப்பு முகவரகம் வேறு பல துறைகளில் இலங்கையில் தனது நடவடிக்கைகளை மேற்கொண்டது. கல்வி, ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி, ஆராய்ச்சி ஒத்துழைப்பு, மனிதாபிமான உதவி, பால் சமத்துவம், ஜனநாயக நிறுவனங்களை பலப்படுத்துதல் மற்றும் தனியார் துறை அபிவிருத்தி என்பன இத்துறைகளாக இருந்து வந்தன. மாத்தறை, பதுளை மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு "சிடா" உதவி வழங்கப்பட்டது. கிராமப் பிரதேசங்களில் வாழும் வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை விருத்தி செய்வதே இத் திட்டங்களின் குறிக்கோளாக இருந்தது. வசதி வாய்ப்புக்கள் குறைந்த கிராமிய மக்கள் தமது மேம்பாட்டுக்கென இணைந்து பணியாற்றுவதற்கான ஒரு முறையாக சமூக அணி திரட்டலின் மீது அதிகளவுக்கு அழுத்தம் கொடுப்பட்டது.

கல்வித் துறைக்கும் "சிடா" உதவி வழங்கி வருகின்றது. ஆரம்பக் கல்வியின் தரத்தை விருத்தி செய்வதும் சமூகத்தின் வசதி வாய்ப்புக்கள் குறைந்த பிரிவினரின் குழந்தைகள் ஆரம்பக் கல்வியில் சேர்ந்து கொள்வதற்கு வகை செய்வதும் இந்த உதவித் திட்டங்களின் குறிக்கோளாக இருந்து வந்தது. "சிடா" உதவியுடனான தொலைக் கல்வி நிகழ்ச்சித்திட்டம் பயிற்றப்படாத சுமார் 69,000 ஆசிரியர்களுக்கு பயிற்சி வசதிகளை வழங்கியுள்ளது. பெருந்தோட்டத் துறையில் ஆரம்பப் பாடசாலை வசதிகளை விருத்தி செய்யும் நோக்கத்துடன் பெருந்தோட்டப் பாடசாலைகள் கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 1980 இல் துவக்கி வைக்கப்பட்டது. இதே போன்ற ஒரு திட்டம் கொழும்பைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் கேகாலை, கண்டி, நுவரெலியா, இரத்தினபுரி மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வசதி குறைந்த பிரதேசங்களிலும் 1986 இல் துவக்கி வைக்கப்பட்டது.

ஆராய்ச்சி ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் குறிக்கோள் இலங்கையில் அடிப்படை விஞ்ஞானத் துறைகளில் ஆராய்ச்சித் திறன்களை உருவாக்குவதாகும். இந்த உதவி பிரதானமாக இலங்கை ஆராய்ச்சிப் பேரவை மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்பவற்றுக்கு ஊடாக வழிப்படுத்தப்பட்டுள்ளது. பல்வேறு ஆராய்ச்சித் திட்டங்கள், நீர், எருமைகள், உயிரியல், கடலோர ஆராய்ச்சி, மின்பொறியியல் போன்ற துறைகளை உள்ளடக்கியிருந்தன.

தனியார் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் ஆடை மற்றும் மரக் கைத்தொழில்களில் ஏற்றுமதி அபிவிருத்திக்கு ஆதரவு வழங்குதல், தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி, வர்த்தக தாராறுகளை தீர்த்து வைப்பதற்கான தீர்ப்பாய நிறுவனம் ஒன்றை நிறுவுதல், மீன் ஏற்றுமதிக் கைத்தொழிலின் தர மேம்பாடு என்பவற்றை உள்ளடக்குகின்றது. போரினால் பாதிக்கப்பட்டிருக்கும் வடக்கு கிழக்கு பிரதேசங்களுக்கான மனிதாபிமான உதவி, குறிப்பான வேண்டுகோள்களை அடுத்து செஞ்சிலுவை சங்கம், யுனிசெப் போன்ற சர்வதேச நிறுவனங்களுக்கு ஊடாக பிரதானமாக வழங்கப்பட்டு வருகின்றது. "சிடா"வின் சர்வதேச பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் வருடாந்தம் சுமார் 60 இலங்கையர் பங்கேற்கின்றனர். சுவீடன் சிறப்புத் தேர்ச்சியையும் வளங்களையும் கொண்டிருக்கும் துறைகளில் சாதாரணமாக 4–6 வார கால உயர் பயிற்சி இதில் வழங்கப்படுகின்றது.

## ஐக்கிய இராச்சியத்தின் உதவி

ஐக்கிய இராச்சியம் இலங்கைக்கு உதவி வழங்கும் முக்கிய நாடுகளில் ஒன்றாக இருந்து வந்துள்ளதுடன், பாரிய மூலதனச் செறிவு மிக்க பல செய்திட்டங்களில் அது சம்பந்தப்பட்டிருந்தது. துரிதப்படுத்தப்பட்ட மகாவலிச் செய்திட்டத்தின் ஒரு பாகமாக விக்டோரியா அணைக்கட்டின் நிர்மாணம் (1980–85) மற்றும் கொழும்பில் பாதை நிலைமைகளின் அபிவிருத்தி (1987) ஆகியவற்றையும் இத் திட்டங்கள் உள்ளடக்கியிருந்தன.

இலங்கைக்கான பிரிட்டிஷ் உதவியின் நோக்கெல்லை 1989 தொடக்கம் மாற்றமடைந்துள்ளது. இது பாரிய மூலதனச் செறிவு மிக்க செய்திட்டங்களிலிருந்து நிகழ்ச்சித் திட்ட உதவியை நோக்கி நகர்ந்து சென்றுள்ளது. தற்போதைய ஐக்கிய இராச்சிய – இலங்கை நாட்டு நிகழ்ச்சித்திட்டம் நான்கு பிரதான துறைகளில் கவனம் செலுத்தி வருகின்றது:

(1) சுற்றாடல் உதவி – வனவள முகாமை செய்திட்டம் (1991–97), பங்கேற்பு வனவள முகாமைச் செய்திட்டம் (1998 வரை தொடரவுள்ளது) மற்றும் மகாவெலி அதிகார சபையின் குறிப்பிட்ட சில நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் ஒரு மூன்றாண்டு கால செய்திட்டம் என்பன இதில் அடங்குகின்றன. கொழும்பு சாக்கடை அமைப்பின் செயல்திறனை விருத்தி செய்வதற்கான செய்திட்டம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

(2) மனிதவள அபிவிருத்தி மற்றும் கல்வி – இதன் கீழ் 3 திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன: (I) முகாமைத்துவ ஆற்றலை விருத்தி செய்வதற்கான திறந்த பல்கலைக்கழக தொலைக் கல்வி செய்திட்டம் (1996–98); (II) ஆங்கில மொழி போதனைத் திறன்களின் தரத்தை விருத்தி செய்வதற்கான ஆரம்ப ஆங்கிலமொழி செய்திட்டம் (1996–99); (III) ஆரம்பக் கல்வித் தேவைகளுக்கான ஓர் உத்தியை அபிவிருத்தி செய்து செயற்படுத்துவதில் கல்வியமைச்சுக்கு உதவுவதற்கென ஆரம்பக் கல்வி செய்திட்டத்துக்கான ஒரு பெருந்திட்டம். (1997–2000). ஆரம்ப கணித செய்திட்டம் ஒன்றும் தற்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றது.

(3) நல்லாட்சி – இது தொடர்பாக சட்டத்தை அமுல் செய்வதற்கு உதவும் பொருட்டு இலங்கைச் சுங்க – மற்றும் கலால் துறையைச் சேர்ந்து ஊழியர்களுக்கு அடிப்படை புலனாய்வு நுட்பங்கள் குறித்த பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது. நிறுவனங்களை கட்டியெழுப்பும் செய்திட்டம் ஒன்றின் கீழ் கொழும்பு மாநகர சபைக்கும் உதவி வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டம் முகாமைத் தகவல் முறைமைகள், நிதியியல் கணக்கீடு தேர்ச்சி பெற்றிருக்கும் தொழிலாளர்களுக்கான பயிற்சி என்பவற்றை உள்ளடக்குகிறது. கொழும்பு நகரில் வாழும் வறியவர்களுக்கு உதவி வழங்கும் ஒரு திட்டமும் கவனத்தில் எடுக்கப்பட்டு வருகின்றது. இத்துறையில் வருங்கால ஒத்துழைப்பு தொடர்பாக உள்ளார்ந்த ஆற்றல்களைக் கொண்டிருக்கும் துறைகள் குறித்தும் ஆராயப்பட்டு வரு

கின்றது. பொலிஸ் துறையின் செயலாற்றுகையை விருத்தி செய்தல், நீதிமன்ற நிருவாகத்தின் செயல்திறனை உயர்த்துதல் மற்றும் சிவில் சேவைச் சீர்திருத்தம், தனியார்மயமாக்கல் என்பனவும் இதில் அடங்குகின்றன.

(4) வறுமை ஒழிப்பு – வடக்கிலும் கிழக்கிலும் நிவாரண மற்றும் புனருத்தாரன உதவியை வழங்குவதில் இது தொடர்பாக முக்கியமாக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டம் பிரதானமாக அரசு சாரா அமைப்புக்களுக்கு ஊடாக அமுல் செய்யப்பட்டு வருகின்றது. எனினும், இலங்கை அரசாங்கம் 1996 இல் முன்வைத்த ஓர் உதவி வேண்டுகோளை அடுத்து பிரிட்டன் யாழ்ப்பாணத்துக்கு ஓர் இடைக்கால மின்சார விநியோகத்தை வழங்குவதற்கென ஜெனரேட்டர்களையும் கேபள்களையும் மின்மானிகளையும் வழங்கியது. இவை 1997 மே மாதத்தில் ஓரளவுக்கு நிறுவப்பட்டன. மேலும், இலங்கையின் நீண்ட கால தேவைகளை மதிப்பிடுவதற்கென மேற்கொள்ளப்படும் ஓர் ஆய்வினை நிதிப்படுத்துவதற்கும் பிரிட்டன் இணக்கம் தெரிவித்துள்ளது.

### ஐரோப்பிய யூனியனின் உதவி

ஒரு தனி அலகு என்ற முறையில் ஐரோப்பிய யூனியன் ஐரோப்பிய ஆணைக்குழுவுக்கு ஊடாக உதவிகளை வழிப்படுத்தி வருகின்றது. இந்த உதவி தொடர்பாக நீர்ப்பாசனம் தொடக்கம் வர்த்தக வாய்ப்புக்கள் மற்றும் சமூகப் பிரச்சினைகள் ஆகிய அனைத்து அம்சங்களையும் அடக்கிய ஓர் ஒருங்கிணைந்த அணுகுமுறை பின்பற்றப்பட்டு வருகின்றது. கடந்த காலத்தில் ஐரோப்பிய ஆணைக்குழுவின் அபிவிருத்தி உதவி – பிரதானமாக உணவு உதவி – 1976 தொடக்கம் கோதுமை வழங்கல்களிலேயே தங்கியிருந்தது. முதல் 5 வருடங்களின் போது செய்திட்ட உதவியும் வழங்கப்பட்டது. இந்த உதவி தொடக்கத்தில் 20 இலட்சம் ஐரோப்பிய யூனியன் நாணயங்கள் வரையில் அதிகரித்தது. 1980 களில் துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துக்கு உதவும் பொருட்டு வருடாந்தம் சுமார் 35 இலட்சம் ஐரோப்பிய யூனியன் நாணயம் செய்திட்ட உதவியாக வழங்கப்பட்டது. இன்று கிராமப் பிரதேசங்களில் வறுமை ஒழிப்புக்கான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவி என்பவற்றில் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

தற்பொழுது உதவி வழங்கப்படும் பிரதான திட்டங்கள் விவசாய வருமானங்களை அதிகரித்து, பங்கேற்பு முறைகளுக்கு ஊடாக விவசாயிகளின் திறன்களை மேம்படுத்துவதனை நோக்கமாகக் கொண்ட தேசிய நீர்ப்பாசன புனருத்தாரண செய்திட்டம்; மகளிருக்கு வலுவூட்டுவதில் சிறப்புக் கவனம் செலுத்தி வரும் வடமேல் மாகாண சிறிய மற்றும் நடுத்தர அளவு நீர்ப்பாசன கட்டமைப்புக்கள்; மொனராகலை நீர்ப்பாசன மற்றும் சனசமூக அபிவிருத்தி செய்திட்டம்; ஏற்கனவே ஈட்டப்பட்டிருக்கும் பயன்களை பாதுகாத்து சுறுசுறுப்பான வர்த்தகச் சூழ்நிலை ஒன்றை உருவாக்குவதனை நோக்கமாகக் கொண்ட மகாவலி பலப்படுத்தல் செய்திட்டம்.

கிராமத் துறைக்கு வெளியே இடம்பெற்றுவரும் ஏனைய செய்திட்டங்களில் சுற்றுலாத் துறைக்கும் இலங்கை கட்டளைகள் பணியகத்துக்கும் வழங்கப்பட்டு வரும் விருத்திக்கான உதவியும் அடங்குகிறது. உதவி வழங்கப்பட்டு சமீபத்தில் முடிவடைந்த ஒரு சில திட்டங்களில் மருதானை ஆபரண பாடசாலைக்கு உதவி மற்றும் இலங்கை ஆபரணத் தயாரிப்பாளர்களை ஐரோப்பிய சந்தைக்கு எடுத்துச் செல்லல், அச்சுக் கைத்தொழில் மற்றும் பீங்கான் கைத்தொழில் என்பவற்றுக்கு தொழில்நுட்ப உதவி வழங்குதல், தேயிலை மற்றும் கணிப்பொறி மென்பொருள் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கான ஆய்வுகளைப் பொறுப்பேற்றல் என்பனவும் அடங்குகின்றன. இலங்கை மற்றும் ஐரோப்பிய சந்தைகள் தொடர்பாக பொருளாதார, சட்ட, தொழில்நுட்ப, நிதிசார மற்றும் சந்தை விடயங்கள் தொடர்பான தகவல்களை வழங்கும் ஐரோப்பிய வணிகத் தகவல் நிலையம் ஒன்று வெகுவிரைவில் ஐரோப்பிய ஆணைக்குழுவின் உதவியுடன் செயற்படுத்தப்படவுள்ளது.

ஒத்துழைப்பு தொடர்பான மற்றொரு முக்கியமான துறை அரசு சாரா அமைப்புக்களுக்கும் இலங்கையில் செயல்பட்டு வரும் சர்வதேச முகவரகங்களுக்கும் உதவி வழங்குவதாகும். இலங்கையின் அரசு சாரா அமைப்புக்கள் துறை பல நடவடிக்கைகளில் முன்னணியில் இருந்து வருகின்றது. சூழல் பாதுகாப்பு, மனித உரிமைகள், குடும்பத் திட்டமிடல், மகளிருக்கு வலுவூட்டல், சமூக நலன்புரிச் சேவைகள், சேமிப்பு மற்றும் கொடுகடன் மற்றும் பயிற்றுவிப்பவர்களுக்கு பயிற்சியளித்தல் போன்ற ஒரு சில துறைகளில் அரசு சாரா அமைப்புக்கள் முன்னணிப் பங்கினை வகித்து வந்துள்ளன.

ஜேர்மனியைச் சேர்ந்த அரசு சாரா அமைப்புக்கள் நாட்டின் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. டெஸ்வோஸ் என்ற ஜேர்மனிய அரசு சாரா அமைப்பு இலங்கையின் நேரடி உதவி நிறுவனத்துடன் சேர்ந்து வவுனியா மாவட்டத்தின் தென் பகுதியில் அமைந்திருக்கும் 3 கிராமங்கள் தொடர்பான மீள் குடியேற்ற வேலைகளில் ஈடுபட்டுள்ளது. உபகரணங்கள், உணவு மற்றும் பாலர் பாடசாலைகளுக்கான விளையாட்டுப் பொருட்களை வழங்குதல், விவசாயக் கிணறுகளை அமைத்தல், வருமான உருவாக்க நடவடிக்கைகளை தோற்றுவித்தல் என்பன இதன் முக்கிய நடவடிக்கைகளில் அடங்குகின்றன. வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களின் விடுவிக்கப்படாத பகுதிகளில் அண்மையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களுக்கான செய்திட்டம் ஒன்றை மேற்கொள்வதில் உள்ளூர் அரசு சாரா அமைப்பொன்றுடன் சேர்ந்து ஜேர்மனியின் அக்ரோ அக்ஷன் என்ற அமைப்பு ஈடுபட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் இருப்பிடம் மற்றும் சமயலறை உபகரணங்கள் என்பன வழங்கப்படுவதுடன், பொதுச் சுகாதார வசதிகளும் அமைத்துக் கொடுக்கப்படுகின்றன.

பாதிக்கப்பட்ட குழுக்களுக்கு ஒருங்கிணைந்த வடிவிலான நிவாரணங்களை வழங்குவதனை மேம்படுத்தும் பொருட்டு வடிவமைக்கப்பட்ட உலக சுகாதார நிறுவனத்தின் இடம்பெயர்ந்த மக்களுக்கான சுகாதாரம் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்

திட்டத்துக்கு (1993-96) இத்தாலி அரசாங்கம் பங்களிப்பினை வழங்கியது. நெதர்லாந்து அரசாங்கம் MSF, CARE மற்றும் ZOA போன்ற சர்வதேச அரசு சாரா அமைப்புக்களுக்கு ஊடாக வடக்கு, கிழக்கு பிரதேசங்களுக்கு புனருத்தாரண உதவியையும் நிவாரண உதவியையும் வழங்கி வருகின்றது. மேலும், அகதிகளுக்கான ஐ நா உயர் ஸ்தானிகராலயம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் யுனிசெப் போன்ற குறிப்பிட்ட சில சர்வதேச முகவரகங்களுக்கு ஊடாகவும் டச்சு உதவி வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், பொதுக் கொள்கை மற்றும் மனித உரிமைகள் என்பவற்றுடன் சம்பந்தப்பட்டிருக்கும் பல உள்ளூர் அரசு சாரா அமைப்புக்களுக்கும் நிதி உதவியும் தொழில்நுட்ப உதவியும் அளிக்கப்படுகின்றது.

### சுவீடன் வழங்கும் உதவி

சுவீடிஷ் சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு முகவரகம் (SIDA) பல்வேறு வழிகளுக்கு ஊடாகவும் இலங்கையிலுள்ள அரசு சாரா அமைப்புக்களுக்கு உதவி வழங்கி வருகின்றது. மனித உரிமைகள், சமாதானம் மற்றும் ஜனநாயகம் மற்றும் பால் சமத்துவம் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்கள் என்பன உதவி பெற்று வரும் முக்கிய நடவடிக்கைகளாகும். சிறுவர் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வு, சிறுவர்கள் சுரண்டப்படுவதனை ஒழித்தல், வடக்கு கிழக்கில் மோதல்கள் இடம்பெற்று வரும் பிரதேசங்களில் நிலவும் நிலைமை தொடர்பான வெளியீடுகள், சமாதான தீர்வொன்றுக்காக மக்களின் ஆதரவை திரட்டுதல், மனித உரிமை மீறல்களுக்கு உள்ளாக்கப்பட்டிருப்பவர்களுக்கு சட்ட உதவிச் சேவைகளை வழங்குதல் போன்ற பல்வேறு விதமான செய்திட்டங்களுக்கும் உதவி வழங்கப்பட்டு வந்துள்ளது.

### ஐக்கிய இராச்சியத்தின் செய்திட்ட உதவி

பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகர் விருப்பு அதிகாரம் கொண்ட இரு நிதியங்களை வைத்துள்ளார்: தூதுவராலய தலைவர்களின் வெகுமதித் திட்டம். மற்றும் பிரிட்டிஷ் பங்கேற்புத் திட்டம் இவை உள்ளூர் அரசு சாரா அமைப்புக்களுக்கு ஊடாகவும் கடல் கடந்த தொண்டு சேவை அமைப்பின் (VSO) ஆளணியினருக்கு ஊடாகவும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. VSO வின் 50 பிரிட்டிஷ் தொண்டர்கள் தற்பொழுது இலங்கையில் பணியாற்றி வருகின்றார்கள். குறிப்பாக கல்வி, சுகாதாரத் துறைகளிலும் தோல் தொழிலாளர்கள் மற்றும் தச்சுத் தொழிலாளர்கள் ஆகியோருக்கான பயிற்சித் திட்டங்களிலும் அவர்கள் சம்பந்தப்பட்டுள்ளனர். Project Trust என்ற அமைப்பைச் சேர்ந்த 12 இளம் தொண்டர்கள் ஆங்கில மொழியைக் கற்பித்தலில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும், பிரிட்டிஷ் அரசாங்கம் ஒக்ஸ்பாம் அமைப்பு ஊடாகவும், சிறுவர் பாதுகாப்பு நிதியத்துக்கு ஊடாகவும் வடக்கு கிழக்கில் இடம்பெற்று வரும் உள்நாட்டுப் போர் காரணமாக இடம்பெயர்ந்திருக்கும் குடும்பங்களுக்கு நிவாரண உதவிகளையும் புனருத்தாரண உதவிகளையும் வழங்கி வருகின்றது. மற்றொரு பிரிட்டிஷ் செய்திட்டம் 3 மாவட்டங்களில் இனப்பெருக்க சுகாதார சேவைகளையும் தாய் சேய் பராமரிப்பு சேவைகளையும் வழங்குவதற்கென உள்ளூர் அரசு சாரா அமைப்பொன்றுக்கு உதவி வருகின்றது.

### ஐரோப்பிய ஆணைக்குழு

ஐரோப்பிய ஆணைக்குழு நேரடியாகவும் மறைமுகமாகவும் பல அரசு சாரா அமைப்புக்களுக்கும் சர்வதேச நிறுவனங்களுக்கும் நிதி உதவிகளை வழங்கி வருகின்றது. இச் செய்திட்டங்கள் தொழில் பயிற்சி, வருமான உருவாக்க நடவடிக்கைகள், சிறு வணிக முயற்சிகள் அபிவிருத்தி, (போதைவஸ்து பாவனை எச். ஐ. வி. /எய்டஸ் போன்ற) சுகாதாரத் திட்டங்கள் மற்றும் உடல் ஊனமுற்றவர்களுக்கு உதவி போன்ற பல்வேறு செய்திட்டங்களையும் உள்ளடக்குகின்றது. மேலும், ஐரோப்பிய ஆணைக்குழு அவசர கால உதவிகளையும் வழங்குகின்றது. இந்த உதவிகள் அரசு சாரா அமைப்புக்களுக்கு ஊடாகவும் சர்வதேச நிறுவனங்களுக்கு ஊடாகவும் வழங்கப்பட்டு வருவதனால் அவை அதிகளவுக்கு பிரசித்தம் பெறுவதில்லை. உதாரணமாக, 1996-97 காலப் பிரிவின் போது உள்நாட்டுப் போரினால் பதிக்கப்பட்டுவரும் பிரதேசங்களில் இயங்கி வரும் பிரிட்டிஷ் அரசு சாரா அமைப்புக்களான சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், ஒக்ஸ்பாம் மற்றும் MERLIN என்பவற்றுக்கு கொடைகள் வழங்கப்பட்டிருந்தன. தற்பொழுது இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்திருக்கும் மக்களுக்கு நிவாரணம் வழங்கும் ஒரு செய்திட்டம். கிழக்கில் போர் நடைபெற்று வரும் வலயத்தின் எல்லைகளில் அமைந்துள்ள கிராமங்களுக்கான இரு உணவுப் பாதுகாப்பு செய்திட்டங்கள், வவுனியாவில் ஒரு மீள் குடியேற்றத்திட்டம், யாழ்ப்பாணத்தின் தெரிவு செய்யப்பட்ட சில நீர் விநியோகத் திட்டங்களுக்கான புனரமைப்பு என்பவற்றுக்கு ஐரோப்பிய ஆணைக்குழு நிதியுதவி வழங்கி வருகின்றது.

**நன்றி: ஐரோப்பிய யூனியனும் இலங்கையும் - இலங்கையின் ஐரோப்பிய ஆணைக்குழுவின் தூதுக் குழுவின் பிரசுரம்**

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முறையில் பிரதிநிதித்துவம் வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் 1998 டிசம்பர் 21 இல் இடம்பெற்ற ச நா நி யின் நிறைவேற்றுச் சபைக் கூட்டத்தில் ஐரோப்பிய மத்திய வங்கிக்கு ச நா நி யின் கூட்டங்களில் பார்வையாளர் அந்தஸ்தை வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டது. இந்தப் பார்வையாளர் அந்தஸ்து தொடர்பான விவரங்களை வருமாறு:

(அ) யுரோ பிரதேச நாணயக் கொள்கை சம்பந்தப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் நிறைவேற்று சபைக் கூட்டங்களில் சமூகமளிப்பதற்கு பார்வையாளர் அழைக்கப்படுவார்.

(ஆ) ஐரோப்பிய மத்திய வங்கி மற்றும் நிதியம் என்பன தேவை எனக் கருதும் சந்தர்ப்பங்களில் அவ்வப் பொழுது பார்வையாளருக்கு அழைப்பு விடுக்கப்படும்.

(இ) ஐரோப்பிய மத்திய வங்கியின் பொறுப்புக்குள் வரும் விடயங்கள் தொடர்பாக பார்வையாளர் தலைவரின் அனுமதியுடன் சபையில் உரை நிகழ்த்தலாம்.

(ஈ) ஆகப் பிந்தியது ஒரு வருட காலத்துக்குள் இந்த பார்வையாளர் அந்தஸ்து குறித்து மீளாய்வு மேற்கொள்ளப்படும்.

(உ) ச நா நி நிறைவேற்று சபையில் வாக்களிப்பதற்கான உரிமை பார்வையாளருக்கு வழங்கப்பட மாட்டாது.

# ஐரோப்பா யூனியன் தொடர்பாக உலக மயமாக்கலின் தாக்கங்களும் தென்னாசியாவும்

உலகமயமாக்கல் தொடர்பான ஆகக் குறைந்த வரைவிலக்கனம் பின்வரும் கருதுகோளை அநேகமாக உள்ளடக்க முடியும்: தேசிய எல்லைகளின் பங்கு வரவர அருகி வருவதும் தனித்தனி தேசிய சந்தைகள் தனியொரு உலகளாவிய சந்தை இடமாக படிப்படியாக இணைவதும். உலகமயமாக்கல் என்ற பதம் 1980 களில் உருவாக்கப்பட்ட போதிலும் அந்த நிகழ்வுப்போக்கு நீண்டகாலமாக இருந்து வந்துள்ளது. ஒரு சில வழிகளில் உலகம் இன்றிருப்பதிலும் பார்க்க ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் அதிக அளவில் உலமயமாக்கப்பட்டிருந்தது. அக் காலப் பிரிவின் போது மக்கள் நாடுகளுக்கிடையில் குடிபெயர்ந்து செல்வது (சுய விருப்பத்தின் பெயரிலோ அல்லது நிர்ப்பந்தத்தின் பெயரிலோ) பாரிய அளவில் இடம் பெற்று வந்தது.

தொடர்பாடல் மற்றும் போக்குவரத்து என்பவற்றில் ஏற்பட்டு வந்த புத்தாக்கங்கள் காரணமாக உலக மயமாக்கல் துரிதப்படுத்தப்பட்டது. இது மக்களும் பண்டங்களும் மூலதனமும் உயர் வேகத்தில் பயணம் செய்வதனை சாத்தியமாக்கியது. அது இந்தப் போக்கின் போது சர்வதேச தலையீட்டை அவசியப்படுத்தும் பல்வேறு சமூக, அரசியல், பொருளாதார பிரச்சினைகளை எடுத்து வந்தது. எவ்வாறிருப்பினும், அத்தகைய சர்வதேச முயற்சிகள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வெற்றியளிக்கவில்லை. உதாரணமாக புத்தாயிரமாவது ஆண்டில் இடம்பெற்ற சீட்டில் சுற்று பேச்சுவார்த்தைகள் தோல்வி கண்டமை வர்த்தகத்தில் ஓர் ஆரோக்கியமான உலக ஒழுங்கை எடுத்து வரும் முயற்சி எதிர்கொண்ட ஒரு தோல்வியாகும். கட்டுக்கடங்காத விதத்தில் இடம்பெற்ற உலக மயமாக்கல் நிகழ்வுப்போக்கு அபிவிருத்தி அடைந்த சமூகங்களிலும் எழுச்சி கண்டுவரும் சந்தைப் பொருளாதாரங்களிலும் எடுத்து வந்திருந்த சீர்குலைவுத் தாக்கத்துக்கு சீட்டில் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் ஓரளவுக்கு நிவாரணத்தை வழங்க முடியும் என முன்னர் எதிர்பாக்கப்பட்டது. உலகமயமாக்கலை சமாளிப்பதற்கும் பொறுப்புணர்வுடன் கூடிய உலகமயமாக்கல் முறையொன்றை சாதித்துக் கொள்வதற்கும் என தாக்கமான வழிமுறைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் எளிதில் ஊறுபடத்தக்க சமூகப் பிரிவினரும் வசதி வாய்ப்புக்கள் அற்ற நிலையில் வாழ்ந்து வரும் சமூகப் பிரிவினரும் மேலும் ஒதுக்கப்படுவதனை தடுத்து நிறுத்துவது சாத்தியமில்லாது போய்விடும்.

அடம்ஸ்மித்தினால் "கட்புலனாகாத கரம்" என வர்ணிக்கப்பட்ட முறை சாரா சக்திகள் உலகளவில் கட்டுக்கடங்காதவிதத்தில் செயற்படுவதற்கு நாங்கள் அனுமதிக்க வேண்டுமா? கடந்த கால அனுபவங்கள் வரைமுறை அற்ற உலகமயமாக்கல் செயன்முறையுடன் சம்பந்தப்பட்டிருக்கும் அபாயப் போக்குகளை அம்பலப்படுத்தியுள்ளன.

## ஐரோப்பிய யூனியன்

ஐரோப்பிய யூனியன் பல வழிகளிலும் பெருமளவுக்கு வெற்றியீட்டியுள்ள உலகின் பொதுச் சந்தையாக இருந்து வருகின்றது. அதன் முன்னோடியான ஐரோப்பிய நிலக்கரி மற்றும் உருக்கு சமூகம் 1951 இல் பிரான்ஸ், மேற்கு ஜேர்மனி, இத்தாலி மற்றும் பெனலெக்ஸ் நாடுகளை உள்ளடக்கிய விதத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இதன் ஸ்தாபிதத்துடன் சம்பந்தப்பட்டிருந்த தூர நோக்குடன் கூடிய தலைவர்கள், பிரான்ஸ் – ஜேர்மனி நல்லிணக்க நிலையிலேயே ஐரோப்பாவின் எதிர்காலம் தங்கியுள்ளது என்பதனை தீவிரமாக உணர்ந்திருந்தனர்.

ஐரோப்பிய யூனியன் தனக்கே உரித்தான பாராளுமன்றத்தையும் ஆணைக்குழுவையும் (சிவில் சேவை) மத்திய வங்கியையும் நீதி மன்றத்தையும் கொண்டுள்ளது. இப் பிராந்தியத்தில் மொத்தம் 35 கோடி மக்கள் வாழ்ந்து வருவதுடன், இதில் இணைந்துள்ள நாடுகளின் கூட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி அநேகமாக ஐக்கிய அமெரிக்காவின் மொ உ உ வுக்கு இணையானதாக இருந்து வருகின்றது. செல்வம் மற்றும் மக்கள் வளம் என்பவற்றின் அடிப்படையில் ஐரோப்பிய யூனியன் உலகின் தனியொரு வல்லரசான ஐக்கிய அமெரிக்காவுக்கு இணையானதாக இருந்து வந்த போதிலும், இராணுவ பலத்தின் அடிப்படையில் அது அமெரிக்காவுக்கு எந்த வகையிலும் இணையானதாக இருக்கவில்லை. ஐரோப்பிய யூனியன் இப்பொழுது உலக அளவில் தனது பிரசன்னத்தை ஸ்தாபித்துக் கொண்டுள்ளது. உலகின் பெருந்தொகையான நாடுகளுடன் அது தூதுவராலய மட்டத்திலான பிணைப்புக்களை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. மனித உரிமைகள் மற்றும் ஜனநாயாக கோட்பாடுகள் என்பவற்றுக்கு மதிப்பளிக்கும் விதத்துடன் இணைந்த விதத்தில் உலகளாவிய செல்வச் செழிப்பு நிலைமையொன்றுக்கு உசிதமான நிலைமைகளை உருவாக்கும் வழியில் ஐ யூ கொண்டுள்ள கடப்பாட்டினை இது எடுத்துக் காட்டுகின்றது.

எஸ்தோனியா, ஹங்கேரி, போலந்து, செக் குடியரசு, சுலோவேனியா மற்றும் சைப்ரஸ் என்பன 2003 இல் ஐரோப்பிய யூனியனில் இணைந்து கொள்ளும் என எதிர்பாக்கப்படும் முதல் தொகுதியைச் சேர்ந்த நாடுகளில் அடங்குகின்றன. இரண்டாவது அலையொன்றின் போது மேலும் சில நாடுகளை இணைத்துக் கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் இப்பொழுது இடம் பெற்று வருகின்றன. ருமேனியா, சுலோவேனியா, லட்வியா, லிதுவேனியா, பல்கேரியா மற்றும் மோல்டா ஆகிய நாடுகள் இதில் அடங்குகின்றன. இவ்விதம் உறுப் பினர் எண்ணிக்கையை இரு மடங்கினால் அதிகரிப்பதானது ஐ யூ வுக்கு பல புதிய பிரச்சினைகளை எடுத்து வர முடியும். முடிவுகளை எடுக்கும் விஷயத்தில் கருத்தொற்றுமையை சாதித்துக் கொள்வது என்பது மிகவும் சிரமமான ஒரு காரியமாகிவிடும். அடுத்ததாக சார்பு ரீதியில் குறைவிருத்தி நிலையில் இருந்து வரும் பொருளாதாரங்களை ஐ யூ வுக்கு இணையான மட்டங்களில் எடுத்து வரும் பொருட்டு பாரிய அளவிலான முதலீடுகளை மேற்கொள்ள வேண்டி நேரிடும்.

உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் பொழுது அடிக்கடி நெருக்கடிகள் தோன்றக் கூடிய நிலையும் ஏற்படலாம். அத்தகைய விதத்தில் ஐரோப்பிய யூனியன் பலவீனமடையும் அபாயம் வளர்முக உலகைப் பொறுத்தவரையில் கவலை அளிக்கத்தக்க ஒரு விடயமாக இருந்துவர முடியும். ஏனெனில், அது வளர்முக நாடுகளில் உலக மயமாக்கலின் விளைவாகத் தோன்றும் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் தலையீடுகளை மேற்கொள்ளும் ஐ யூ வின் ஆற்றலை குறைத்து விடும்.

*(31 ஆம் பக்கம் பார்க்க)*

# ஐரோப்பிய யூனியன் உருவாகிய பின்புலம்

*கலாநிதி ஜே. பி. கெலேகம*

அழிவுகரமான இரண்டாவது உலக மகா யுத்தம் முடிவுற்ற வேளையில் வென்றவர்களும் தோற்றவர்களும் ஒரே நம்பிக்கையையே கொண்டிருந்தனர். அதாவது யுத்தத்தை நோக்கி பிளவுண்ட ஐரோப்பாவுக்கு பதிலாக சமாதானத்தின் வழியில் செல்லும் ஐக்கிய ஐரோப்பா ஒன்றை உருவாக்குவதற்கான விருப்பினை அனைத்து தரப்பினருமே கொண்டிருந்தனர். ஐரோப்பிய அரசுகளிடையே தேசிய அக்கறைகளின் மோதல்கள் காரணமாக இன்னொரு போர் தோன்றுவதை எந்த விதத்திலாகிலும் சரி தடுத்துக் கொள்ள வேண்டும் என்பதே அவர்களுடைய அபிலாஷையாக இருந்தது. இதற்கு முதலில் தேசிய இறைமை தொடர்பான கண்ணோட்டங்களை நலிவடையச் செய்து, ஐரோப்பிய வாதம் என்ற உணர்வுக்கு வலுவூட்டுவது அவசியமாக இருந்தது. இதனைச் சாதித்துக் கொள்ளும் பொருட்டு பொது நிறுவனங்களுக்கு ஊடாகவும் பொதுவான விதிமுறைகளுக்கு ஊடாகவும் மேற்கு ஐரோப்பாவை ஒருங்கிணைப்பது அவசியமாக இருந்தது. இது தொடர்பாக தொடக்கத்திலேயே ஒரு சிக்கலான பிரச்சினையை சமாளிக்க வேண்டியிருந்தது. இரு உலகப் போர்களையும் தூண்டிவிட்ட நாடு என்ற முறையில் ஜேர்மனி குறித்து ஐரோப்பாவில் ஒரு பொதுவான அவநம்பிக்கை நிலவி வந்தது. இந்த அவநம்பிக்கையை போக்கிக் கொள்வது மிகவும் சிரமமான ஒரு காரியமாக இருந்தது. ஜேர்மனியின் புதிய தலைவர்கள் தமது அயலவர்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதற்கான மிகவும் தாக்கமான வழி பொதுவான ஐரோப்பிய நிறுவனங்களிடம் தமது இறைமையை சரணடையச் செய்வதும், பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் ஐரோப்பாவுக்கு கட்டுப்படுவது என்பதனையும் உணர்ந்திருந்தார்கள். சக்திவாய்ந்த ஐரோப்பிய யூனியனுடன் பிணைக்கப்பட்டிருக்கும் ஜேர்மனி சமாதானத்தை குலைக்கும் வகையில் பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொள்வதற்கு அநேகமாக வாய்ப்பு இருக்க மாட்டாது என இத் தலைவர்கள் நம்பினர். இந்த நம்பிக்கையை ஏனைய ஐரோப்பிய நாடுகளும் பகிர்ந்து கொண்டன. இந்தச் சூழ் நிலையில் ஐரோப்பிய ஒருங்கிணைப்புக்கான பேரார்வம் கொண்ட ஓர் ஆதரவாளராக ஜேர்மனி மாற்றமடைந்தது. இது இப்பணியை எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க இலகுவாக்கிவிட்டது.

## பொருளாதார ஒருங்கிணைப்பு

ஐரோப்பிய ஒருமைப்பாடு, சிக்கலான சர்ச்சைக்குரிய அரசியல் வழிமுறைகளுக்குப் பதிலாக பொருளாதார வழிமுறைகளுக்கு ஊடாகவே எடுத்து வரப்படவிருந்தது. பெருளாதார ரீதியில் ஒருங்கிணைக்கப்பட்ட ஓர் ஐரோப்பாவில் ஐரோப்பிய அரசுகள் பொது நிறுவனங்களிலும் பொது விதிமுறைகளின் கீழும் செயற்பட்டு வருவதன் மூலம் பெற்றுக் கொள்ளும் அனுபவம் பின்னர் ஒரு கட்டத்தில் அரசியல் ஒருமைப்பாடு தோன்றுவதற்கு வசதி செய்துகொடுக்கும் என நம்பப்பட்டது. இதற்கான அத்திவாரம் ஒரு பொது அதிகார சபையின் கீழ் பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளின் நிலக்கரி மற்றும் உருக்குக் கைத்தொழில்களை ஒன்றாக இணைத்ததன் மூலம் இடப்பட்டது. இந்தத் திட்டத்தை ஜீன் மொனட் மற்றும் ரொபர்ஷூமன் ஆகியோர் வகுத்திருந்தனர். இதன் பின்னர் ஐரோப்பிய நாடுகளுக்கு இடையிலான பிணைப்புக்கள் கட்டம் கட்டமாக படிப்படியாக பலப்படுத்தப்பட்டு வந்தன. உறுப்பு நாடுகளிடையே கட்டற்ற வர்த்தகத்துக்கு வசதி செய்து கொடுத்து ஏனைய நாடுகள் தொடர்பான பொதுவான ஒரு வெளித் தீர்வை முறையைக் கொண்ட ஐரோப்பியப் பொதுச் சந்தை முதலில் ஸ்தாபிக்கப்பட்டது. அதனையடுத்து ஐரோப்பிய பொதுச் சந்தை, ஐரோப்பிய பொருளாதார சமூகமாக நிலைமாற்றம் கண்டது. இந்த பொதுச் சமூக கட்டமைப்புக்குள் பண்டங்கள் தவிர மூலதனம், சேவைகள் மற்றும் மக்கள் என்பன சுதந்திரமாக நகரக் கூடியதாக இருந்தது. இந்த வழிமுறைகள் மேற்கு ஐரோப்பிய பொருளாதாரங்களை முன்னர் எப்பொழுதும் இருந்திராத அளவுக்கு ஒன்றாக இணைத்தன. தேசிய எல்லைகளைக் கடந்து பண்டங்களும் சேவைகளும் மூலதனமும் அதே போல மக்களும் சுதந்திரமாக செல்லக் கூடியதாக இருந்த நிலை குறுகிய மனப்பான்மை மற்றும் பொருளாதாரத் தேசிய வாதம் என்பவற்றை தோல்வியுறச் செய்தது.

பொருளாதார ஒருங்கிணைப்பினை அடுத்து உறுதியான தேசிய நாணயங்களை பராமரித்து வருவதற்கென முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அமெரிக்க டொலர் தங்கத்துடன் கொண்டிருந்த பிணைப்பு 1971 இல் துண்டிக்கப்பட்டதுடன், உலகச் பணச் சந்தைகளில் உறுதிப்பாட்டினை பேணிவரும் ஐக்கிய அமெரிக்காவின் பங்குப் பணியும் கைவிடப்பட்டது. இது ஐரோப்பிய நாடுகள் தமது நாணயங்கள் தொடர்பாக ஓரளவு உறுதிப்பாட்டைச் சாதித்துக் கொள்வதற்கு தமது சொந்த முயற்சிகளுக்கு ஊடாக தாம் இணைந்து செயற்பட வேண்டியுள்ளது என்பதனை எடுத்துக் காட்டியது. அவை தமது நாணயங்களுக்கிடையிலான தளம்பல்களை பல்வேறு வழிமுறைகளுக்கு ஊடாகவும் வரையறுத்துக் கொள்வதன் மூலம் இதனை மேற்கொள்ள முயன்றன. முதலாவது கட்டமாக மேற்கு ஐரோப்பிய நாணயங்களுக்கிடையிலான தளம்பல்கள் சுமார் 4.5% குள் வைக்கப்பட்டன. இந்த முயற்சி தோல்வியடைந்த பொழுது சந்தைக்கேற்ற விதத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த செலாவணி விகிதங்கள் சீராக்கம் செய்யப்பட்டன. ஐரோப்பிய நாணய முறையின் கீழ் ஐரோப்பிய செலாவணி விகித பொறிமுறையை ஸ்தாபித்ததன் மூலம் இத்திட்டம் திருத்தியமைக்கப்பட்டது. இதன் கீழ் ஐரோப்பிய நாணய அலகொன்றைக் கொண்ட நிலையான ஆனால் நெகிழ்ச்சித் தன்மையுடன் கூடிய செலாவணி விகிதங்கள் எடுத்து வரப்பட்டன. இந்த முயற்சியும் கூட ஓரளவுக்கு மட்டுமே வெற்றியை அளித்தது; செலாவணி விகிதங்கள் சுமார் 18 தடவைகள் மீள இணைக்கப்பட வேண்டியிருந்ததுடன் ஐக்கிய இராச்சியம், இத்தாலி, ஸ்பெயின் மற்றும் போர்த்துக்கல் போன்ற நாடுகள் தமது நாணயத் தளம்பல்களை நிர்ணயிக்கப்பட்டிருந்த வரம்புகளுக்குள் வைத்திருக்க முடியாமையினால் ஐரோப்பிய செலாவணி விகித பொறிமுறையிலிருந்து விலகின. இதன் விளைவாக செலாவணி விகித தளம்பல்கள் 15% அளவில் உயர் மட்டத்தில் இடம்பெறுவதற்கு இடமளிக்கப்பட்டதுடன் இந்த முறை 1993 வரையில் திருப்திகரமாக செயற்பட்டு வந்தது. இந்தத் திட்டங்கள் பல குறைபாடுகளைக் கொண்டிருந்த போதிலும் நாணய ஐக்கியத்துக்கு தேவைப்படும் அனுபவத்தை வழங்கின.

## பொது நாணயம்

ஒத்திசைவான பிராந்திய அலகொன்றை உருவாக்கும் பொருட்டு மேற்கு ஐரோப்பாவின் பொருளாதாரங்களை ஒருங்கிணைப்பதற்காக சுமார் நான்கு தசாப்த காலம் மேற்கொள்ளப்

பட்டு வந்த முயற்சிகளின் இறுதி விளைவாகவே ஐரோப்பிய நாணய யூனியன் (EMU) உருவாகியது. இதன் மைய அம்சம் அனைத்து நாடுகளினாலும் ஒரு பொதுவான நாணயம் பயன்படுத்தப்படுவதும், ஒரு பொதுவான நாணயக் கொள்கை பின்பற்றப்படுவதுமாகும். இதன் முதல் கட்டமாக இறைமை அரசுகளின் நாணயக் கொள்கைகளும் வட்டி விகிதங்களும் முழுமையான சுதந்திரம் கொண்ட (1999 ஜனவரியில் ஸ்தாபிக்கப்பட்ட) ஐரோப்பிய மத்திய வங்கிக்கு மாற்றப்பட்டன. இரண்டாவது கட்டம் 2002 இல் துவக்கி வைக்கப்படும். அப்பொழுது டொய்ஷ் மார்க், பிராங்க் மற்றும் கில்டர் போன்ற அனைத்து தேசிய நாணயங்களும் ஒழிக்கப்பட்டு யுரோ என்று அழைக்கப்படும் தனியொரு ஐரோப்பிய நாணயம் புழக்கத்துக்கு வரும். தனியொரு நாணயத்தின் மூலம் பல்வேறு அனுகூலங்கள் கிட்டுகின்றன. முதலாவதாக அது கொடுக்கல் வாங்கல் செலவுகளை கொள்வனவாளர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும் குறைத்துவிடும். அதாவது பல்வேறு நாணயங்களை மற்றொரு நாணயத்தில் மாற்றிக் கொள்ளும் போது ஏற்படும் செலவுகள் இல்லாமல் போய்விடும். மேலும், வணிகத்தின் மீது இடையூறுகளை எடுத்து வரும் செலாவணி விகித தளம்பல்களையும் அது நீக்கிவிடும். யுரோ நாணயம் உறுதிமிக்கதாக இருந்து வரும் நிலையில், ஐரோப்பிய வணிகத் துறையினர் நம்பகமான ஒரு நீண்ட கால அடிப்படையில் முதலீடுகளை திட்டமிடவும் விலைகளை நிர்ணயிக்கவும் ஒப்பந்தங்களில் கைச்சாத்திடவும் வாய்ப்பு கிட்டுகின்றது. அது பணவீக்கத்தை தடுத்து தேசிய இறைக் கொள்கைகளின் ஒத்திசைவை ஊக்குவிக்கும். மேலும் அது ஐரோப்பியர்களுக்கு பிரயாணம் செய்வதையும் பொருள் கொள்வனவையும் இலகுபடுத்திவிடும்.

நாணய கொள்கைகளும் செலாவணி விகித கொள்கைகளும் தேசிய மட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டு வந்தால் பொருளாதார சமூகமொன்று செயல்திறனுடன் கூடிய விதத்தில் இயங்குவது அநேகமாக சாத்தியமில்லை. எனவே, தனியொரு சந்தை தனியொரு நாணயத்தைக் கொண்டிருப்பது தர்க்க ரீதியானதாகும். அது குறிப்பிட்ட அந்த பொருளாதார சமூகத்துக்குள் பொருட்கள், சேவைகள், மூலதனம் என்பனவும் ஆட்களும் சுதந்திரமாக நகர்ந்து செல்வதற்கு வசதி செய்து கொடுக்கும். மேலும், ஒரு பொது நாணயத்தினால் எடுத்து வரப்படும் பாரிய அளவிலான அதிகளவில் செயல்திறனைக் கொண்ட ஒரு பிராந்திய நிதிச் சந்தை மூலதனத்தின் செலவைக் குறைத்து, சேமிப்புக்களின் வழங்கலை அதிகரித்து முதலீட்டு மூலதனத்துக்கான தேவையை உயர்த்தி பொருளாதார வளர்ச்சியை தூண்டும் எனவும் சுட்டிக் காட்டப்படுகிறது. தனியொரு நாணயம் பல்தேசியக் கூட்டுத்தாபனங்கள் தமது குறிப்பிட்ட சில விநியோக அலகுகளை தனியொரு அமைவிடத்தில் வைத்துக் கொள்வதற்கு உதவும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், அது செலவுகளைக் குறைத்துக் கொள்ளும் பொருட்டும், உற்பத்தித் திறனை அதிகரித்துக் கொள்ளும் பொருட்டும் கைத்தொழில்கள் தமது உற்பத்தி வசதிகளை யூனியனைச் சேர்ந்த வேறு நாடுகளுக்கு எடுத்துச் செல்வதற்கு தூண்ட முடியும். இச் செயன்முறையின் போது நிறுவனங்கள் ஒன்றாக இணைவதும் கையேற்புக்களும் இடம்பெறும், தனியொரு நாணயத்தின் விளைவாக தோன்றும் விலைகளின் பகிரங்கத் தன்மையும் உயர் அளவிலான போட்டியும் பல கம்பெனிகளின் விலைகளையும் அதேபோல இலாபங்களையும் குறைத்து வரும் ஒரு போக்கினையும் எடுத்து வரும். வங்கிகள் குறிப்பாக நாணயக் கொடுக்கல் வாங்கல்களிலிருந்து குறைந்த அளவிலான சம்பாத்தியங்களையே எதிர்பார்க்கலாம்.

பொது நாணயம் அரசியல் விடயங்களிலிருந்து முற்றிலும் சுதந்திரமானதாக இருந்து வரவில்லை. ஐக்கிய ஐரோப்பாவை மீண்டும் ஒரு போதும் மாற்றியமைக்க முடியாத விதத்தில் உருவாக்க வேண்டும் என்பதும், இதனை உறுதிப்படுத்துவதற்கான மிகச் சிறந்த வழி பொது நாணயமாக இருந்து வருகின்றது என்றும் ஜேர்மனி அதிபர் கருதுகிறார். ஒரு பொர்துவான நாணயம் ஜேர்மனியை ஐரோப்பாவுக்கு அருகில் எடுத்து வந்து , அப்பிராந்தியத்தில் அதன் மேலாதிக்கத்தை குறைத்து விடும் என மறுபுறத்தில் பிரான்ஸ் நம்புகிறது. பொதுவான விதிமுறைகளையும் ஒரு பொதுவான நாணயத்தையும் உபயோகிக்கும் பொருளாதார யூனியனொன்றுக்குள் வாழ்ந்து வரும் பொழுது தமது மக்கள் சிந்தனைப் போக்கில் உயர் அளவில் ஐரோப்பிய உணர்வைக் கொண்டவர்களாகவும், குறைந்தளவில் தேசியவாத உணர்வைக் கொண்டவர்களாகவும் இருந்து வருவார்கள் என அநேகமாக அனைத்து ஐரோப்பிய தலைவர்களும் நம்புகின்றனர். இதனை அடுத்து அரசியல் ஒருமைப்பாட்டுக்கு பெருமளவுக்கு சாதகமான ஒரு நிலை தோன்றும். அரசியல் ஒருமைப்பாடு மட்டுமே இறுதியில் சமாதானத்துக்கு உத்தரவாதம் வழங்க முடியும். உள்நாட்டுக் கொள்கைகள் தொடர்பான அவர்களுடைய பொதுவான முடிவெடுக்கும் முறை வெளிநாட்டு விவகாரங்களிலும் பாதுகாப்பு விவகாரங்களிலும் பொதுவான ஒரு முடிவெடுக்கும் நிலைக்கு வழிகோலும்.

## மாஸ்ட்ரிச்ட் உடன்படிக்கை

ஐக்கிய இராச்சியம், டென்மார்க் மற்றும் சுவீடன் ஆகிய நாடுகள் தவிர அநேகமாக ஏனைய அனைத்து ஐரோப்பிய நாடுகளும் ஐரோப்பிய நாணய யூனியனில் சேர விரும்பின. எனினும், 1992 இன் மாஸ்ட்ரிச்ட் உடன்படிக்கையில் விதித்துரைக்கப்பட்டுள்ள தேர்வு முறையை கண்டிப்பான முறையில் நிறைவு செய்து வைக்கும் நாடுகள் மட்டுமே இதில் சேர்ந்து கொள்ள முடியும். இந்த உடன்படிக்கையின் நிர்ணயகரமான ஒரு தேவைப்பாடு ஓர் உறுப்பு நாட்டின் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை மொ உ உ வின் 3% ஐ மிகைக்காமல் இருந்துவர வேண்டும் என்பதாகும். ஒரு நாட்டின் பொதுக் கடன் மொ உ உ வின் 60% க்கு குறைவாக இருந்து வர வேண்டும் என்பது இரண்டாவது விதிமுறையாகும். இது தவிர ஒரு நாடு குறைந்த பணவீக்கத்தையும் குறைந்த மட்டங்களிலான வட்டி விகிதங்களையும் உறுதியான செலாவணி விகிதங்களையும் கொண்டிருத்தல் வேண்டும். ஜேர்மனி 3% வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை விதியை அறிமுகம் செய்து வைப்பதில் முன்நின்றது. ஏனெனில், அது சக்தி வாய்ந்த டொய்ஷ் மார்க் நாணயத்தின் உருவத்தில் உறுதியான நிலையான ஒரு பொதுவான நாணயம் உருவாக வேண்டும் என விரும்பியது. ஜேர்மனி இன்னமும் கூட 1923 இல் நாட்டின் சேமிப்புக் கள் அனைத்தையும் அடித்துச் சென்ற பிரமாண்டமான பணவீக்கத்தின் அச்சத்திலிருந்து விடுபடவில்லை. அதனால் அது பணவீக்கம் குறித்து எப்பொழுதுமே தீராத அச்சத்தைக் கொண்டுள்ளது.

நாணய யூனியன் வெற்றியடைய வேண்டுமானால் பிராந்திய மட்டத்தில் பின்பற்றப்பட்டு வரும் திடமான நாணயக் கொள்கையுடன் இணைந்த விதத்தில் தேசிய மட்டத்தில் திடமான அரசிறைக் கொள்கைக் பின்பற்றப்பட்டு வர வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. பொதுவாக குறைந்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைகள் குறைந்த வட்டி விகிதங்களையும் உயர்ந்த முதலீட்டையும் வளர்ச்சியையும் வேலை வாய்ப்புக்களையும்

எடுத்து வருகின்றன. தனது அயல் நாடுகள் மீது சடுமையான பேரண்டப் பொருளியல் ஒழுக்காற்றினை அமுல் செய்து, அதன்மூலம் உறுதியான நிலையான பொது நாணயம் ஒன்றை எடுத்து வருவதற்கு நாணய யூனியனை பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பதே ஜேர்மனியின் எதிர்பார்ப்பாக இருந்தது. எனினும், ஐரோப்பிய யூனியன் உறுப்புரிமை தொடர்பாக மாஸ்ட்ரிச்ட் உடன்படிக்கை மூலம் விதிக்கப்பட்டிருக்கும் கடுமையான தேர்வு முறைகள் 3 முக்கிய பிரச்சினைகளை சந்தித்துள்ளன. முதலாவதாக, ஐரோப்பிய சமூகத்தைச் சேர்ந்த அனைத்து நாடுகளினதும் – ஜேர்மனியைக் கூட உள்ளடக்கிய விதத்தில் – வரவு செலவுத்திட்ட பற்றாக்குறைகள் 1997 இல் மொ உ உ வின் 3% ஐயும் மிகைத்துக் காணப்பட்டன என பொருளாதார ஒத்துழைப்புக்கும் அபிவிருத்திக்குமான நிறுவனத்தின் (OECD)மதிப்பீடுகள் காட்டுகின்றன: ஜேர்மனி 3.4%, பிரான்ஸ் 3.2% இத்தாலி 3.7%, ஸ்பெயின் 3.4%. இது இந்நாடுகள் தமது பொதுச் செலவினத்தைக் குறைத்து வரவு செலவுத்திட்ட பற்றாக்குறைகளை குறைப்பதற்கென வரி அறவீட்டினை அதிகரிக்க வேண்டியிருக்கும் என்பதனை – சுருக்கமாகச் சொல்வதானால் சிக்கன வழிமுறைகள் பின்பற்ற வேண்டியிருக்கும் என்பதனை – எடுத்துக் காட்டுகின்றது. இரண்டாவது பிரச்சினை பொதுச் செலவினத்தில் வெட்டுக்களை மேற்கொள்வது அவ்வளவு இலகுவான காரியமாக இருந்து வரவில்லை என்பதாகும். குறிப்பாக மக்கள் பழக்கப்பட்டிருக்கும் நலன்புரிச் செலவுகளை வெட்டிவிடுவது கடினமானதாகவே இருக்கும். பிரான்சில் இது தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருந்தது. அங்கு நலன்புரிச் செலவுகளின் வெட்டுக்களுக்கு எதிராக மக்கள் எதிர்ப்பைத் தெரிவித்ததுடன், அத்தகைய சிக்கன வழிமுறைகளை அறிமுகம் செய்து வைத்த அரசாங்கத்தை தேர்தலிலும் தோற்கடித்தனர்.

மூன்றாவது பிரச்சினை மேற்கு ஐரோப்பாவில் கணிசமான அளவில் வேலையில்லாத் திண்டாட்டம் நிலவி வருவதாகும்: 1997 இல் ஸ்பெயின் 22.9% பெல்ஜியம் 13.0%, பிரான்ஸ் 12.3%, இத்தாலி 11.9% மற்றும் ஜேர்மனி 10.2%. பொதுச் செலவினத்தில் மேற்கொள்ளப்படும் வெட்டுக்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தை மேலும் உயர்த்தும் என பொது மக்கள் அச்சம் கொண்டுள்ளனர். எனவே இன்றைய சூழ்நிலையில் பொது நாணயமான யுரோ ஐரோப்பாவில் அதிகளவில் ஜனரஞ்சகம் பெற்றிருப்பதாக தெரியவில்லை. 1997 மே மாதத்தில் நடத்தப்பட்ட ஒரு கருத்துக் கணிப்பின் படி, ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த கருத்துத் தெரிவித்தவர்களில் சுமார் 1/3 பங்கினர் பொது நாணயத்துக்கு எதிராகவே கருத்துத் தெரிவித்திருந்தனர்.

மாஸ்ட்ரிச்ட் உடன்படிக்கை தேர்வு முறைகளை நிறைவு செய்து வைப்பதில் உள்ள சிரமங்கள் காரணமாகவும், பிரான்சின் புதிய சோஷலிஸ்ட் அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோள்கள் காரணமாகவும் ஐரோப்பிய நாணய யூனியனுக்கான அனுமதி சடுமை குறைந்த தேர்வு முறையின் அடிப்படையிலும் அரசியல் காரணங்களின் அடிப்படையிலும் அநேகமாக நிர்ணயிக்கப்பட முடியும். அதிகளவில் நெகிழ்ச்சித் தன்மையை வழங்கும் பொருட்டு மாஸ்ட்ரிச்ட் ஒப்பந்த விதிகள் திருத்தியமைக்கப்படலாம் என அல்லது அவற்றுக்கு தாராளமான முறையில் பொருள் விளக்கம் அளிக்க நேரிடலாம் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இந்த நடவடிக்கைக்கு சாதகமான விதத்திலேயே பொதுசன அபிப்பிராயமும் இருந்து வருகின்றது.

ஐரோப்பிய நாணய யூனியனுக்கு ஓர் அரசியல் பரிமாணம் இருந்து வர வேண்டும் என்றும், ஐரோப்பிய மத்திய வங்கிக்கு ஒட்டுமொத்த அதிகாரம் வழங்கப்படக் கூடாது என்றும் அது ஒரு "பொருளாதார அரசாங்கத்தினால்" கண்காணிக்கப்பட்டு வர வேண்டும் என்றும் முன்னர் பிரான்ஸ் வாதிட்டு வந்தது. ஐரோப்பிய ஆணைக்குழு இந்த யோசனைக்கு எதிர்வினைவு காட்டும் விதத்தில் ஐரோப்பிய நாணய யூனியன் நாடுகளின் நிதியமைச்சர்களைக் கொண்ட உறுதிப்படுத்தல் பேரவையொன்றை அமைப்பதற்கு இணங்கியது. இது ஐரோப்பிய மத்திய வங்கிக்கான ஓர் அரசியல் மாற்று அமைப்பாக செயற்பட்டு வரும். இந்தப் பேரவை நாணயக் கொள்கையில் மத்திய வங்கியின் சுதந்திரத்தை கட்டுப்படுத்துமா என்பது தெரியவில்லை. ஆனால், இதில் முரண்பாடுகள் தோன்றுவதற்கு இடமிருக்கிறது. ஜேர்மனி "பொருளாதார" யுரோ ஒன்றை விரும்புகின்றது. இரண்டாவதாக பிரான்சின் எதிர்ப்புக்களை ஏற்றுக்கொள்ளும் விதத்தில் உறுதிப்பாடு தொடர்பான ஒப்பந்த விதிகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளதுடன் விதிகளை மீறுபவர்களுக்கெதிரான அபராதங்கள் குறித்து அரசாங்களின் ஒப்புதலை பெற வேண்டியிருக்கும்.

வ செ பற்றாக்குறைகளை மொ உ உ வின் 3% க்கு கீழ் குறைத்துக் கொள்வதில் உள்ள சிரமங்களை கருத்தில் கொண்டு இப் பற்றாக்குறைகள் 3% வரையில் குறைத்துக் கொள்ளப்படும் வரையில் இந்த விதியை மீறுவதற்கு இடம் அளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மாஸ்ட்ரிச்ட் உடன்படிக்கை விதிகளுக்கு நெகிழ்ச்சித் தன்மையுடன் கூடிய விதத்தில் பொருள் விளக்கம் அளிக்கப்படுவதன் விளைவாக, யுரோ ஜேர்மனியினால் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க பலம் குன்றிய ஒன்றாகவே உருவாக முடியும். ஆனால், ஜேர்மனி ஏற்றுமதியாளர்கள் தமது ஏற்றுமதிகளைப் பெருக்கிக் கொள்வதற்கென டொய்ஷ் மார்க்கிலும் பார்க்க பலவீனமான ஒரு யுரோ இருந்து வருவதையே விரும்புவார்கள்.

ஐரோப்பிய நாணய யூனியன் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டும் பொருட்டு வணிகத்தில் ஈடுபடும் செலவுகளைக் குறைகுமானால், ஐரோப்பிய மத்திய வங்கி நாணயக் கொள்கையை செயற்படுத்தி வரும் விதம் குறித்து மக்கள் திருப்தி அடைவார்களானால், பிரெஞ்சு அரசாங்கம் செய்ததைப் போல நலன்புரிச் செலவுகளை குறைப்பதிலிருந்தும் ஐரோப்பிய அரசாங்கங்கள் தவிர்ந்து கொண்டால், பொதுமக்கள் யுரோ நாணயத்தை ஏற்றுக்கொண்டால் ஐரோப்பிய நாடுகள் அரசியல் விவகாரங்களிலான தமது இறைமையை விட்டுக் கொடுப்பதற்கான தயக்கத்தை போக்கிக் கொண்டால் அது ஐக்கிய ஐரோப்பிய அரசுகளுக்கான பாதையை திறந்து வரும். மறுபுறத்தில், ஐரோப்பாவில் உயர்மட்ட வேலையில்லாத் திண்டாட்டம் நிலைத்து வந்து செலவுத் திட்ட பற்றாக்குறைகளை குறைப்பதற்காக சமூக நலன்புரிச் சேவைகள் வெட்டப்பட்டு யுரோவை ஒரு உறுதியான நாணயமாக ஆக்கிக் கொள்வதற்காக பணச் சுருக்கக் கொள்கைகள் பின்பற்றப்பட்டு வந்தால் ஆகக் குறைந்தது தொடக்கத்திலேனும் ஐரோப்பிய நாணய யூனியனும் பொது நாணயமான யுரோவும் கரடுமுரடான ஒரு பாதையை எதிர்கொள்ள வேண்டி நேரிடும்.

(இக் கட்டுரை 1999 ஜனவரி 01 ஆம் திகதி யுரோ அமுலுக்கு வருவதற்கு முன்னர் நிலவி வந்த பொருளாதார நிலைமையை எடுத்து விளக்குகிறது. இந்தப் பின்னணித் தகவல்கள் யுரோவின் பிற்கால செயற்பாட்டினை புரிந்து கொள்வதற்கு உதவும்).

# யூரோ நாணயத்தின் அறிமுகத்தின் ஒரு வருடத்தின் பின்னர் யூரோ பிரதேசம்

யூரோ நாணயம் ஒரு வருடத்துக்கு முன்னர் வெற்றிகரமாக துவக்கி வைக்கப்பட்டது. 1999 தொடக்கம் ஐரோப்பிய மத்திய வங்கியின் ஆட்சி மன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் யூரோ பிரதேசத்துக்கான தனியொரு நாணயக் கொள்கை பிரதேச அடிப்படையிலான பொருளாதார அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஒட்டுமொத்தமாக நோக்கும் பொழுது யூரோ பிரதேச பொருளாதாரத்தின் பல அமைப்பு ரீதியான குணாம்சங்கள் கடந்த வருடத்தின் பொழுது சிறிதளவு மட்டுமே மாற்றம் கண்டுள்ளன. ஆனால், தனியொரு நாணயத்தின் அறிமுகமானது யூரோ பிரதேசத்தின் நிதிச் சந்தைகளின் கட்டமைப்பிலும் அபிவிருத்தியிலும் ஏற்கனவே கணிசமான அளவிலான ஒரு தாக்கத்தை எடுத்து வந்துள்ளது. இக்கட்டுரை யூரோ பிரதேச பொருளாதாரத்தின் முக்கியமான அமைப்பு ரீதியான அம்சங்களையும் நிதிச் சந்தைகளில் ஏற்பட்டுள்ள பிரதான மாற்றங்களையும் எடுத்து விளக்குகிறது.

## யூரோ பிரதேசத்தின் முக்கியமான பேரண்டப் பொருளியல் அம்சங்கள்

இங்கு தரப்பட்டுள்ள அட்டவணை 1 இல் பல்வேறு மூலங்களிலிருந்தும் கிடைக்கும் பிந்திய தகவல்களைப் பயன்படுத்தி யூரோ பிரதேசத்தின் பல முக்கியமான பேண்டப் பொருளியல் அம்சங்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. தேவைப்படும் இடங்களில் யூரோ பிரதேசத்துக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும், மற்றும் ஜப்பானுக்கும் இடையிலான ஒப்பீடுகளும் தரப்படுகின்றன. ஐரோப்பிய மத்திய வங்கியின் 1999 ஜனவரி மாதாந்த செய்தி விவரணத்தில் சுட்டிக் காட்டப்பட்டது போல உலகளாவிய ஒப்பீட்டில் யூரோ பிரதேசம் ஒரு "பிரமாண்டமான பொருளாதாரமாக" இருந்து வருவதுடன், அது பாரிய அளவிலான கொள்வனவுச் சக்தியையும் தன்னகத்தே கொண்டுள்ளது. ஐக்கிய அமெரிக்க கொள்வனவு சக்திக்கு மட்டுமே அது இரண்டாவதாக இருந்து வருகின்றது. பிந்திய தரவுகளின் பிரகாரம் யூரோ உறுப்பு நாடுகள் அனைத்தும் சேர்ந்து மொத்த உலக உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 15 1/2% பங்கினை வழங்கி வருகின்றன. இது ஐக்கிய அமெரிக்காவின் பங்களிப்பிலும் (20 1/4%) பார்க்க குறைவானதாக இருந்து வந்த போதிலும் ஜப்பானின் பங்களிப்பிலும் (7 1/2%) பார்க்க கிட்டத்தட்ட இருமடங்காக உள்ளது. யூரோ பிரதேசத்தைச் சேர்ந்த மிகப் பெரிய நாடு உலக மொ உ உ வில் சுமார் 4 1/2% ஐ கொண்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

யூரோ பிரதேச பொருளாதாரத்தின் துறை வாரியான நடவடிக்கைகளை நோக்கும் பொழுது இங்கு காணப்படும் உற்பத்தி மாதிரிகள் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் உற்பத்தி மாதிரிகளை ஒத்திருப்பதனை காண முடிகிறது. சேவைகள் துறை மிகப் பெரிய பொருளாதாரத் துறையாக இருந்து வருவதுடன், அது மொத்த உற்பத்தியில் சுமார் 67% இற்கு பங்களிப்புச் செய்கின்றது. இது ஐக்கிய அமெரிக்காவின் சேவைகள் துறையிலும் (72%) பார்க்க குறைவானதாகும்; ஆனால், ஜப்பானின் அளவிலும் (60%) பார்க்க உயர்வானதாக காணப்படுகிறது. (கட்டடவாக்கத்தையும் உள்ளிட்ட) கைத்தொழில் துறை யூரோ பிரதேசத்தின் ஒட்டுமொத்த பொருளாதார நடவடிக்கைகளின் 1/3 பங்குக்கும் குறைவான பங்களிப்பினையே வழங்கி வருகின்றது. இது ஐக்கிய அமெரிக்காவின் அளவிலும் பார்க்க உயர்வானதாகவும் ஜப்பானின் அளவிலும் பார்க்க குறைவானதாகவும் உள்ளது. விவசாயம், கடற்றொழில் மற்றும் காட்டுத் தொழில் முதலிய ஆரம்ப உற்பத்தித்துறை இந்த 3 பொருளாதாரங்களிலும் அநேகமாக ஒரே அளவிலேயே காணப்படுகின்றது. அதாவது, இத்துறை மொத்த வெளியீட்டில் சுமார் 2% அளவிலான பங்களிப்பினையே வழங்கி வருகின்றது.

## உலக வர்த்தகத்தில் ஒரு பாரிய பங்கு

யூரோ பிரதேசம் உலக வர்த்தகத்தில் ஆகக்கூடிய பங்கினைக் கொண்டிருப்பதுடன், மொத்த உலக ஏற்றுமதிகளில் இப்பிரதேசத்தின் ஏற்றுமதிகளின் விகிதம் (சுமார் 19 1/2%) ஐக்கிய அமெரிக்கா (15%) மற்றும் ஜப்பான் (8 1/2%) என்பவற்றின் ஏற்றுமதிகளின் விகிதங்களிலும் பார்க்க உயர்ந்து காணப்படுகிறது. பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவற்றின் மொ உ உ வின் சதவீதம் என்ற முறையில், பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவற்றின் சராசரி ஏற்றுமதிகளினாலும் இறக்குமதிகளினாலும் அளவிடப்படும் பொருளாதாரம் திறந்துவிடப்பட்டிருக்கும் அளவு யூரோ பிரதேசத்தில் 16% ஆக உள்ளது. இது ஐக்கிய அமெரிக்கா (12%) மற்றும் ஜப்பான் (10 1/2%) என்பவற்றின் அளவுகளுடன் ஒப்பிடும் பொழுது உயர்வாகவே உள்ளது. அதேவேளையில், தனிப்பட்ட யூரோ பிரதேச நாடுகள் தொடர்பான வர்த்தகத்தில் பெரும் பகுதி ஏனைய ஐரோப்பிய நாடுகளுடன் இடம் பெற்று வருகின்றது என்ற உண்மையையும் நாங்கள் நோக்க வேண்டும். பிரதேச அடிப்படையிலான கண்ணோட்டத்தில் இது உள்ளக வர்த்தகமாக இருந்து வருவதுடன், யூரோ எதிர் ஏனைய நாணயங்களின் செலாவணி விகித அசைவுகளினால் அது பாதிக்கப்படுவதில்லை. நாணய யூனியனுக்கு முன்னர் தனிப்பட்ட உறுப்பு நாடுகள் சிறிய அல்லது நடுத்தர அளவைக் கொண்ட திறந்த பொருளாதாரங்கள் என கருதப்பட்டு வந்தன. இப்பொருளாதாரங்களில் மொ உ உ தொடர்பான பொருள்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி என்பவற்றின் சராசரி விகிதங்கள் உயர் அளவில் நிலவி வந்தன. ஒட்டுமொத்த யூரோ பிரதேசத்தை பொறுத்த வரையும் மொ உ உ வின் விகிதம் என்ற முறையில் பொருட்களின் ஏற்றுமதி 1998 இல் 13% க்கு சற்று உயர்வாக காணப்பட்டது. அதேவேளையில், இறக்குமதிகள் 11% க்கு சற்று உயர்வாக இருந்து வந்தன. சேவைகளிலான வெளி வர்த்தகம் கணிசமான அளவில் உள்ளது. ஆனால், பண்டங்களின் அளவிலும் பார்க்க அது குறைவானதாகும். சேவைகளிலான ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் என்பன மொ உ உ வின் சுமார் 4% அளவில் காணப்படுகின்றன.

யூரோ பிரதேசத்தின் கண்ணோட்டத்தில் வர்த்தகத்தில் காணப்படும் மற்றொரு சிறப்பம்சம் அதன் பூகோள ரீதியான பகிர்வாகும். ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, சுவிட்சர்லாந்து மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் (வர்த்தகத்தில் அவை பெற்றுக்கொள்ளும் பங்குகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.) சேர்ந்து யூரோ பிரதேசத்தின் ஒட்டுமொத்த வர்த்தகத்தில் சுமார் 43% க்கு பங்களிப்பு செய்கின்றன. யூரோ பிரதேசத்தைச் சாராத ஏனைய ஐரோப்பிய யூனியன் நாடுகள் மேலும் 8% ஐ வழங்குகின்றன இது தவிர ரஷ்யா, மற்றும் சீனா ஆகிய நாடுகளும் யூரோ பிரதேசத்தின் முக்கியமான வர்த்தக கூட்டாளிகளாக இருந்து வருகின்றன. தாய்வான், தென் கொரியா, ஹொங்கொங் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நான்கு ஆசியப் பொருளாதாரங்களுடனான வர்த்தகம்

அட்டவணை 1

யுரோ பிரதேசத்தின் பிரதான பண்புக் கூறுகள்

| | காலம் | அலகு | யுரோ பிரதேசம் | ஐக்கிய அமெரிக்கா | ஜப்பான் |
|---|---|---|---|---|---|
| குடித்தொகை | 1998 | மில்லியன் | 291 | 271 | 126 |
| மொ உ உ (உலக மொ உ உ வில் பங்கு) | 1998 | % | 15.5 | 26.8 | 7.4 |
| உற்பத்தித் துறைகள் விவசாயம், கடற்றொழில், காட்டுத் தொழில் | 1995 | மொ உ உ வில் % | 2.2 | 1.8 | 1.9 |
| (கட்டடவாக்கத்தையும் உள்ளிட்ட) கைத்தொழில் | 1995 | மொ உ உ வில் % | 30.8 | 26.3 | 38.0 |
| சேவைகள் | 1995 | மொ உ உ வில் % | 66.8 | 71.9 | 60.0 |
| பொது அரசாங்கப் பெறுவனவுகள் | 1999 | மொ உ உ வில் % | 47.1 | 36.1 | 30.5 |
| செலவினம் | 1999 | மொ உ உ வில் % | 48.6 | 33.9 | 38.7 |
| பண்டங்களின் ஏற்றுமதி | 1998 | மொ உ உ வில் % | 13.2 | 7.9 | 9.9 |
| பண்டங்கள் மற்றும் சேவைகள் என்பவற்றின் ஏற்றுமதி | 1998 | மொ உ உ வில் % | 17.1 | 11.0 | 11.5 |
| பண்டங்களின் இறக்குமதி | 1998 | மொ உ உ வில் % | 11.1 | 10.8 | 6.7 |
| பண்டங்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதி | 1998 | மொ உ உ வில் % | 15.1 | 12.9 | 9.6 |
| ஏற்றுமதிகள் (உலக ஏற்றுமதிகளின் பங்கு) | 1998 | % | 19.6 | 15.0 | 8.5 |
| ஊழியர் படை பங்கேற்பு | 1998 | % | 66.4 | 77.4 | 72.6 |
| வேலை வாய்ப்பு விகிதம் | 1998 | % | 59.4 | 73.8 | 69.5 |
| வேலையின்மை விகிதம் (மொத்த ஊழியர் படையில்) | அக் 1999 | % | 9.9 | 4.1 | 4.6 |
| அரசாங்க மிகை (+) அல்லது பற்றாக்குறை (-) | 1999 | மொ உ உ வில் % | -1.6 | 2.2 | -8.2 |
| மொத்தக் கடன் | 1999 | மொ உ உ வில் % | 72.9 | 57.7 | 127.8 |
| நடைமுறைக் கணக்கு நிலுவை | 1998 | மொ உ உ வில் % | 1.0 | -2.6 | 3.2 |

மொத்த வெளிநாட்டு வர்த்தகத்தில் 5½% ஆக உள்ளது. மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சுமார் 7% பங்கினைக் கொண்டுள்ளன. இவ் வர்த்தகத்தில் இயந்திரங்கள், போக்குவரத்து உபகரணங்கள், தயாரிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் இரசாயனங்கள் என்பன முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

## யுரோ பிரதேசத்தில் ஊழியச் சந்தைகள்

ஒட்டுமொத்த யுரோ பிரதேசத்தையும் பொறுத்தவரையில் 1999 இல் வேலையற்றிருந்தவர்களின் எண்ணிக்கை 13 மில்லியனுக்கும் சற்று அதிகமாக காணப்பட்டது. இது ஊழியர் படையின் 10% க்கும் உயர்வான ஒரு வேலையின்மை விகிதத்தைக் காட்டுவதுடன் இந்த விகிதம் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஜப்பான் நாடுகளின் வேலையின்மை விகிதங்களிலும் பார்க்க கணிசமான அளவில் உயர்வாக காணப்படுகிறது. ஊழியர் சந்தை பங்கேற்பு விகிதம் (அதாவது வேலை செய்யும் வயதைக் கொண்ட குடித்தொகையினரில் வேலைவாய்ப்பு மற்றும் வேலையின்மை விகிதம்) யுரோ பிரதேசத்தில் 66 1/2% ஆக உள்ளது. இது ஜப்பானின் 72 1/2% மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் 77% என்பவற்றுடன் ஒப்பிடத்தக்கதாகும். வேலை செய்யும் வயதுத் தொகுதியினரின் விகிதாசாரமாக வேலை வாய்ப்பினை நோக்கும் பொழுது மேலும் பாரிய அளவிலான வேறுபாடுகள் காணப்படுகின்றன. இந்த விகிதம் ஜப்பானில் 70% ஆகவும், ஐக்கிய அமெரிக்காவில் 74% ஆகவும் இருந்து வரும் அதே வேளையில் யுரோ பிரதேசத்தில் இது 60% க்கும் குறைவாக உள்ளது.

## அரசிறை தொடர்பான போக்குகள்

ஐரோப்பிய சமூகத்தை ஸ்தாபிக்கும் உடன்படிக்கையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள குறிப்பு மட்டத்திலும் பார்க்க ஒட்டுமொத்த யுரோ பிரதேசத்தின் கடன் - மொ உ உ விகிதாசாரம் இன்னமும் உயர்வாகவே இருந்து வருகின்றது. மொ உ உ தொடர்பான கடனின் சராசரி விகிதம் 1999 இல் 72.9% ஆக சற்று வீழ்ச்சியடைந்திருந்ததாக ஐரோப்பிய ஆணைக்குழுவினால் மதிப்பிடப்பட்டிருந்தது. அதேவேளையில், மொ உ உ தொடர்பான அரசாங்கப் பற்றாக்குறை விகிதத்தில் சிறு அளவிலான விருத்தி மட்டுமே ஏற்பட்டுள்ளது. யுரோ பிரதேசத்தில் மொ உ உ - சராசரி பொது அரசாங்கப் பற்றாக்குறை விகிதம் 1999 இல் 1.6% ஆக இருந்து வந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஒரு சில நாடுகள் மட்டுமே வரவு செலவுத் திட்ட மிகைகளையும், 60% க்கு குறைவான மொ உ உ - கடன் விகிதங்களையும் 1999 இல் பதிவு செய்திருந்தன. யுரோ பிரதேசத்தின் வரவு செலவுத்திட்ட ஏற்றத் தாழ்வுகளும் அரசாங்க கடன் மட்டங்களும் ஐக்கிய அமெரிக்காவின் மட்டங்களிலும் பார்க்க உயர்வானவையாகவும் ஜப்பானின் மட்டங்களிலும் பார்க்க குறைவானவையாகவும் இருந்து வருகின்றன.

யுரோ பிரதேசத்தில் அரசாங்கத் துறையின் அளவு மற்றும் கட்டமைப்பு என்பன ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் அரச துறைகளின் அளவு மற்றும் கட்டமைப்பு என்பவற்றிலிருந்து கணிசமான அளவில் வேறுபடுகின்றன. யுரோ பிரதேசத்தைப் பொறுத்தவரையில் மொ உ உ வில் அரசாங்க செலவினத்தின் பங்கு 49% ஆக உள்ளது. இது ஐக்கிய அமெரிக்கா (39%) மற்றும் ஜப்பான் (34%) என்பவற்றின் அரச செலவினத்தின் சதவீதங்களையும் பார்க்க உயர்வானதாக உள்ளது. பிரதானமாக சமூக நலன்புரி அமைப்புக்கள் இருந்து வருவதன் காரணமாக யுரோ பிரதேசத்தில் குடும்பங்களுக்கான அரசாங்கத்தின் பண மாற்றல்கள் சார்பு ரீதியில் உயர் அளவில் காணப்படுகின்றன. அரசாங்கத்தின் வருமானத்தைப் பொறுத்தவரையில் யுரோ பிரதேச நாடுகளிலும் ஜப்பானிலும் சமூகப் பாதுகாப்பு உதவு தொகைகள் சுமார் 1/3 பங்காக காணப்படுகின்றன. யுரோ பிரதேசம் பெருமளவுக்கு மறைமுக வரிகளில் தங்கியிருக்கும் அதேவேளையில் ஐக்கிய அமெரிக்காவிலும் ஜப்பானிலும் நேரடி வரிகள் ஒரு முக்கிய பங்கினை வகித்து

அட்டவணை 2

யுரோ பிரதேசம் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஜப்பான் என்பவற்றின் நிதிக் கட்டமைப்பு

| | காலம் | அலகு | யுரோ பிரதேசம் | ஐக்கிய அமெரிக்கா | ஜப்பான் |
|---|---|---|---|---|---|
| வங்கி வைப்புக்கள் | ஜுன் 1999 | யுரோ 100 கோடி | 4,752.2 | 4,742.8 | 4,467.5 |
| | ஜுன் 1999 | மொ. உ. உ. வில் % | 77.8 | 55.2 | 111.7 |
| வங்கிக் கடன்கள் | ஜுன் 1999 | யுரோ 100 கோடி | 6,136.1 | 4,154.8 | 4,280.8 |
| | ஜுன் 1999 | மொ. உ. உ. வில் % | 100.4 | 48.4 | 107.0 |
| வெளிநின்ற உள்ளநாட்டு கடன் பிணையங்கள் | ஜுன் 1999 | யுரோ 100 கோடி | 5,422.7 | 14,140.8 | 5,061.1 |
| | ஜுன் | மொ. உ. உ. வில் % | 88.8 | 164.6 | 126.5 |
| கம்பெனிகளால் வெளியிடப்பட்டவை | ஜுன் 1999 | யுரோ 100 கோடி | 202.3 | 2,493.8 | 583.4 |
| நிதி நிறுவனங்களால் வெளியிடப்பட்டவை | ஜுன் 1999 | யுரோ 100 கோடி | 1,891.5 | 3,900.1 | 753.7 |
| பொதுத் துறையினால் வெளியிடப்பட்டவை | ஜுன் 1999 | யுரோ 100 கோடி | 3,329.0 | 7,746.8 | 3,723.9 |
| பங்குச் சந்தை மூலதன மயமாக்கல் | அக் 1999 | யுரோ 100 கோடி | 4,346.0 | 13,861.1 | 6,275.8 |
| | அக் 1999 | மொ உ உ வில் % | 71.1 | 163.3 | 137.7 |

யுரோவின் பெறுமதி

| நாடு | நாணயம் | மாற்று வீதம் |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்கா | டொலர் | 1.1789 |
| ஜப்பான் | யென் | 133.73 |

யுரோ உத்தியோகபூர்வமான அந்நியச் செலாவணி வர்த்தகத்தை 1999 ஜனவரி 04 ஆம் திகதி ஆரம்பித்தது. அன்று நிலவிய விகிதங்கள் மேலே தரப்பட்டுள்ளன.

வருகின்றன.

## யுரோ பிரதேசத்தின் நிதித் துறையின் கட்டமைப்பு

யுரோ பிரதேசத்தின் நிதித் துறையின் கட்டமைப்பில் ஓரளவுக்கு மாற்றங்கள் இடம்பெற்று வந்த போதிலும் அது இன்னமும் வங்கி அடிப்படையிலான நிதித் துறை கட்டமைப்பொன்றுக்கு அருகில் இருந்து வருவதாக கருத முடியும். இப் பிரதேசத்தில் உன்நாட்டு வங்கிக் கடன்கள் 1999 இல் மொ உ உ வில் 100% ஆகவும், உள்நாட்டுக் கடன் பிணையங்கள் 89% ஆகவும் இருந்து வந்துள்ளன. கடன் பிணையங்களிலும் பார்க்க வங்கிக் கடன்களே கூடிய சதவீதத்தை கொண்டிருந்தன. கடன் பிணையங்கள் பெருபவைக்கு பொதுத் துறையினாலேயே வெளியிடப்பட்டு வருகின்றன. மேலும், மொ உ உ வின் சதவீதம் என்ற முறையில் யுரோ பிரதேசத்தில் பங்குச் சந்தை மூலதனமயமாக்கல் 1999 அக்டோபரில் 71% ஆக காணப்பட்டது. மறுபுறத்தில், அமெரிக்காவை பொறுத்தவரையில் நிதித்துறைக் கட்டமைப்பில் கடன் பிணையங்கள் மிகவும் முக்கியமான ஒரு பங்கினை வகித்து வருகின்றன. உன்நாட்டுக் கடன் பிணையங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட நிதிப்படுத்தல் அங்கு 1999 ஜுனில் (மொ உ உ வின் சதவீதம் என்ற முறையில்) 165% ஆக கணிசமான அளவில் உயர்ந்து காணப்பட்டது. அதேவேளையில், வங்கிக் கடன்கள் மூலமான நிதிப்படுத்தல் 48% ஆக மட்டுமே காணப்பட்டது. யுரோ பிரதேசத்துடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது மொ உ உ வில் உள்நாட்டுக் கடன் பிணையங்கள் மற்றும் பங்குச் சந்தை மூலதன மயமாக்கல் என்பவற்றின் சார்பு ரீதியான விகிதங்கள் கணிசமானளவில் உயர் மட்டத்தில் இருந்து வந்தன. ஜப்பானின் நிதித் துறைக் கட்டமைப்பில் பிணையங்களின் பங்கு ஐக்கிய அமெரிக்காவின் பங்கிலும் பார்க்க குறைவானதாகவும் யுரோ பிரதேசத்தின் பங்கிலும் பார்க்க உயர்வானதாகவும் இருந்து வந்தது.

## நிதிச் சேவைகள் கைத்தொழில் துறை

1998 டிசம்பர் தொடக்கம் 1999 நவம்பர் வரையிலான காலப் பிரிவின் போது யுரோ பிரதேசத்திலிருந்த நாணய மற்றும் நிதி நிறுவனங்களின் எண்ணிக்கை 9,856 இலிருந்து 9,443 ஆக சுமார் 4% இனால் வீழ்ச்சி கண்டிருந்தது. இதில் மிகப் பெரிய தொகுதியான கொடுகடன் நிறுவனங்களின் எண்ணிக்கை இதே காலப் பிரிவில் 8,320 இலிருந்து 7,906 ஆக 5% இனால் வீழ்ச்சியடைந்திருந்தது. கொடுகடன் நிறுவனங்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டு வரும் இந்த வீழ்ச்சிப் போக்கு கடந்த ஒரு தசாப்த காலமாக இடம்பெற்று வருகின்றது. ஐரோப்பாவில் வங்கித் துறையைப் பொறுத்தவரையில் சந்தை நிலைமைகளில் மாற்றங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. தொழில்நுட்ப அபிவிருத்திகள், ஒழுங்கு விதிகள் தளர்த்தப்பட்டமை தாராளமயமாக்கல் மற்றும் உலக மயமாக்கல் போன்ற முக்கியமான பல காரணிகள் இந்த மாற்றங்களை எடுத்து வந்துள்ளன. யுரோ நாணயத்தின் அறிமுகம் இந்த சக்திகளுக்கு மேலும் வலுவூட்டும் என்று கருதப்படுகின்றது. குறிப்பாக, யுரோ பிரதேசத்தில் பாரிய ஒருங்கிணைந்த வங்கிகளுக்கிடையிலான ஒரு சந்தை உருவாக்கப்பட்டிருப்பதனை அடுத்து மொத்த வங்கித் தொழிலில் குறிப்பிடத்தக்க பல மாற்றங்கள் தோன்றியுள்ளன. சில்லறை வங்கித் தொழிலிலான மாற்றங்கள் படிப்படியாகவே ஏற்பட்டு வருகின்றன. பாரிய உள்நாட்டு நிறுவனங்களின் எழுச்சி 1999 இல் இப்பிரதேசத்தில் இடம்பெற்ற முக்கிய அபிவிருத்திகளில் ஒன்றாகும்.

## பணச் சந்தை மாற்றங்கள்

யுரோ நாணயம் மற்றும் புதிய நாணயக் கொள்கை கட்டமைப்பு என்பவற்றுக்கு எதிர்வினைவு காட்டும் விதத்தில் யுரோ பிரதேசம் முழுவதிலும்

(31 ஆம் பக்கம் பார்க்க)

# ஓய்வு நேர நடவடிக்கைகள்: கருதுகோள்களும் வரைவிலக்கணங்களும்

தீபானி எதிரிசூரிய
(புவியியல் துறை விரிவுரையாளர், சபரகமுவ பல்கலைக்கழகம்)

ஓய்வு, சுற்றுலாத் துறை மற்றும் ஓய்வு நேர பொழுது போக்கு நடவடிக்கைகள் என்பன தொடர்பாக பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள பல தனிப்பட்ட வரைவிலக்கணங்களை அகராதிகளில் காண முடிகின்றது. தனிப்பட்ட கல்வித்துறை பாடங்களும் இதனுடன் சம்பந்தப்பட்டிருக்கும் பொதுத்துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்களும் வேறுபட்ட வரைவிலக்கணங்களை உபயோகித்து வருகின்றன.

ஓய்வு என்ற கருதுகோள் வீட்டில் வெறுமனே ஓய்வு ஒடுத்தல் (அதாவது தூங்குதல், தொலைக்காட்சி பார்த்தல், வாசிப்பு முதலியவை) போன்ற நடவடிக்கைகளையும் உள்ளடக்குகின்றது. இவை இயங்காத (அசைவற்ற) நடவடிக்கைகள் என வகைப்படுத்தப்படுகின்றன. இதற்கு மாறாக சுற்றுலா செயல் துடிப்பு மிகுந்த ஒரு நடவடிக்கையாக இருந்து வருகின்றது. அந்த வகையில் அது பயணம் செய்வதன் மூலமும் வெளியிடங்களில் தங்குவதன் மூலமும் பல்வேறு உறவுகளை உருவாக்குகின்றது. சுற்றுலாத் துறை, ஓய்வுடன் ஒப்பிடும் பொழுது அனைத்தும் அடங்கிய ஒரு நிகழ்வாக காணப்படுகிறது. எனினும், எந்த ஒரு சுற்றுலா பயணியினதும் இறுதிக் குறிக்கோள் ஏதேனும் ஒரு வகையிலான ஓய்வு நேர நடவடிக்கையில் ஈடுபடுவதாகும். சுற்றுலா என்பது ஓய்வு நேர பொழுது போக்குக்கு என மேற்கொள்ளப்படும் பிரயாணம் செய்யும் நடைமுறை என வெப்ஸ்டர் (1973) குறிப்பிடுகிறார்.

சுற்றுலாத் துறை ஒரு பொழுது போக்கு வடிவமாகும்; ஆனால் அது அனைத்து பொழுது போக்கு வடிவங்களையும் உள்ளடக்கியிருக்கவில்லை. சுற்றுலாத் துறை எங்கே தொடங்குகின்றது மற்றும் பொழுதுபோக்கு எங்கே முடிவடைகிறது என்பது குறித்த திட்டவட்டமான வரையறைகள் காணப்படவில்லை. சுற்றுலா ஓரளவுக்கு குறைந்த பட்ச தூரத்தை அவசியப்படுத்தும் ஓரிரவில் தங்கக்கூடிய ஒரு பயணத்தை உள்ளடக்குகிறது என மிட்ச்சல் (1991) கூறுகிறார். பொழுதுபோக்கு என்பது செயல் முனைப்பு மிகுந்த மற்றும் அசைவற்ற ஆகிய இருவகைகளையும் சேர்ந்த மனித நடவடிக்கை வகைகளை கொண்டுள்ளது. எனவே, அது ஓய்வு என்பதிலிருந்தும் வேறுபடுகிறது (தெஹராகொட 1984). அது ஓய்வு நேரத்தின் சுறுசுறுப்பான நடவடிக்கைகள் அனைத்தையும் விளையாட்டுக்களையும் உல்லாசப் பயணத்தையும் உள்ளடக்குகின்றது. அது அருகிலுள்ள பூங்காவில் அல்லது விளையாட்டு கட்டடத் தொகுதியில் அல்லது சிறிதளவு நேரத்தில் சென்றடையக் கூடிய ஒரு இடத்தில் அல்லது நீண்ட பயணத்தின் பின்னர் சென்றடையக்கூடிய ஒரு இடத்தில் இடம்பெறலாம்.

ஓய்வு என்பது அடிப்படையில் நேரத்துடன் சம்பந்தப்பட்ட ஒரு கருதுகோளாகும். அதேவேளையில், பொழுது போக்கு என்பது நடவடிக்கையுடன் சம்பந்தப்பட்ட ஒரு கருதுகோளாக உள்ளது. ஓய்வு என்பது (வேலையின்றி) சும்மா கிடக்கும் நேரமாகும். பொழுது போக்கு என்பது அந்த நேரத்தை உபயோகித்துக் கொள்ளும் ஒரு வழிமுறையாகும். ஓய்வு நேரத்தின் போது மேற்கொள்ளப்படும் பல்வேறு வகைப்பட்ட நடவடிக்கைகள் எனவும் பொழுதுபோக்கு என்ற பதத்துக்கு வரைவிலக்கணம் வழங்கப்பட்டு வருகின்றது. எனவே, அனைத்து விதமான உள்ளக மற்றும் வெளி ஓய்வு நேர நடவடிக்கைகள், பயணம் செய்யும் நடவடிக்கைகள், சமூக நடவடிக்கைகள், அழகியல், கல்வி நடவடிக்கைகள், சாகச நடவடிக்கைகள், விளையாட்டுக்கள் ஆகிய அனைத்தையும் பொழுதுபோக்கு நடவடிக்கைகள் உள்ளடக்குகின்றன.

## பொழுது போக்கு நடவடிக்கைகளை வகைப்படுத்துதல்

*பயண நடவடிக்கைகள்*

நடைப் பயணம் மற்றும் உல்லாச நடை
சைக்கிள் பயணம்
குதிரைச் சவாரி
உல்லாசமாக வாகனத்தை ஓட்டிச் செல்லல்
படகுச் சவாரி
நீர் விளையாட்டு

*சமூக நடவடிக்கைகள்*

விளையாட்டுக்களும் போட்டிகளும்
முகாமிடுதல்
உல்லாசப் பயணம் செல்லல்
நீச்சல்

*அழகியல் நடவடிக்கைகள்*

படம் பிடித்தல், இயற்கை காட்சிகளை அனுபவித்தல்
ஓவியம் மற்றும் கைவினைக் கலை
இயற்கை ஆய்வு (உயிரினவியல் சுற்றுலா)
கலாசார, தொல்லியல் அமைவிடங்களையும் நினைவுச் சின்னங்களையும் போய்ப் பார்வையிடல் (கலாசார சுற்றுலா)

*உயர் சாகசம்*

மலை ஏறுதல்
மலைகளிலிருந்து இறங்குதல்
அபாயகரமான பயணங்கள்
வேறு நடவடிக்கைகள்
மீன் பிடித்தல்
வேட்டையாடுதல்

கடந்த சில வருடங்களின் போது பொழுதுபோக்கு நடவடிக்கைகள் குறித்து ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் பல நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. "பொழுதுபோக்கு புவியியல்" என்ற சுருக்கமான மீளாய்வும் இதில் அடங்குகிறது. மறூரி என்பவரின் புவியியல் குறித்த விரிவான ஒரு அத்தியாயத்தில் ஒரு பாகமாக இது சேர்க்கப்பட்டிருந்தது. மறூரி கடந்த பல வருடங்களின் போது தொடரான பல ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் வெளியீடுகள் என்பவற்றுக்கு ஊடாக பொழுதுபோக்கு புவியியல் என்ற கருதுகோளில் பல மாற்றங்களையும் அபிவிருத்திகளையும் எடுத்து வந்துள்ளார். பொழுதுபோக்கு நடவடிக்கைகளின் முக்கியமான ஒரு சிறப்பம்சம் புவியில் இடப் பரப்பு பரந்த அளவில் பயன்படுத்தப்பட்டு வருவதாகும். பொழுது போக்குக்கென இயற்கை பிரதேசங்களை பயன்படுத்துவதற்கான கோட்பாட்டு ரீதியான சட்டகம் இயற்கைச் சுற்றுலா துறை மற்றும் உயிரினவியல் சுற்றுலா துறை போன்றவை தொடர்பான விஞ்ஞான ஆய்வுகளில் விளக்கப்பட்டுள்ளன.

மனிதர்கள் புவியியல் இடப்பரப்புடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் தோன்றக்கூடிய மனித

நடவடிக்கை வகைகள் குறித்து புவியியலாளர்கள் அக்கறை கொண்டுள்ளனர். சுற்றுலாத் துறை மற்றும் பொழுது போக்கு புவியியல் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுக் கொள்கிறது.

ஐக்கிய அமெரிக்காவிலுள்ள ஜோர்ஜ் வாஷிங்டன் பல்கலைக்கழகத்தில் 1990 இல் இடம்பெற்ற சுற்றுலாத் துறை தொடர்பான கொள்கை வல்லுனர்களின் முதலாவது சர்வதேச பேரவை, பொழுது போக்கு நடவடிக்கைகளின் அபிவிருத்திக்காக பரந்த அளவிலான கொள்கைகளை வகுத்துக் கொள்வதற்கான சட்டாம் ஒன்றை முன்வைத்துள்ளது. பசுமை சுற்றுலாத் துறை தொடர்பாக பெருமளவுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. பசுமைச் சுற்றுலாத் துறை என்பது திட்டவட்டமான இடங்களை நோக்கிய சுற்றுச் சூழல் ரீதியில் பொருந்தக் கூடிய சுற்றுலாவாகும். அது இயற்கையின் வரையறைகளுக்குள் இயற்கையின் நிலைபேறான தன்மையை உறுதி செய்து கொள்ளும் விதத்திலான வாழ்க்கை பாணிகளையும் அபிவிருத்தி வழிகளையும் பின்பற்றுகின்றது.

சுற்றுலாக் கைத்தொழில் காரணமாக எமது பௌதிகச் சூழலின் மீது ஏற்படும் சீரழிவு குறித்து பரவலான முறையில் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்னொரு புறத்தில் பொழுது போக்கு நடவடிக்கைகளின் நீண்ட கால வெற்றிக்கு உயர் தரமான சூழலின் மீது அது வேறு எந்தக் கைத்தொழிலையும் பார்க்க அதிகளவில் தங்கியுள்ளது. பொழுதுபோக்கு புவியியல் கண்ணோட்டத்திலிருந்து நோக்கும் பொழுது, பொழுதுபோக்குக் கைத்தொழில் ஏனைய சாதாரண கைத்தொழில்களிலிருந்து ஒரு மாறுபட்ட இயல்பைப் கொண்டுள்ளது. கைத்தொழில் உற்பத்திப் பண்டங்களைப் போல பொழுதுபோக்குக் கைத்தொழிலின் வெளியீட்டினை நுகர்வோரின் சந்தைக்கு எடுத்துச் செல்ல முடியாது. (சுற்றுலாப் பயணியான) நுகர்வோரே உற்பத்திப் பண்டத்தை தேடி வருகின்றார். அது மூலவளங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு கைத்தொழிலாக இருந்து வருகின்றது. இந்த வகையில் பொழுதுபோக்கு என்பது மூலவளங்களை அந்த இடத்திலேயே நுகரும் ஒரு வடிவமாக உள்ளது. எனவே, அதன் உறுதியான இடம் சார்ந்த அமைவு காரணமாக அந்த மூலவளம் இருந்து வரும் இடத்திலேயே அதனை மேம்படுத்த வேண்டியுள்ளது. மறுபுறத்தில், பொழுதுபோக்கு மற்றும் சுற்றுலாத் துறை என்பவற்றுக்காக மூலவளங்களை பேணிக் காத்துக் கொள்வதும், அதே போல சுற்றுலாத் துறையின் மூலமான மாசாக்கல் மற்றும் மிதமிஞ்சிய அளவிலான உபயோகம் என்பவற்றிலிருந்து அவற்றுக்கு பாதுகாப்பு அளிப்பதும் முக்கியமாகும். இந்த வகையில் இலங்கையையும் உள்ளிட்ட உலகைச் சூழவுள்ள பல சுற்றுலாத் தலங்களில் நிலம் மற்றும் நீர் வளம் என்பவற்றின் தரம் சீரழிந்து வருவதனை தெளிவாகக் காணப்படுகிறது. இதன் விளைவாக பாதுகாப்புக்கும் பௌதீகச் சூழலின் உபயோகத்துக்கும் இடையில் ஒரு போட்டி தோன்றுவது தவிர்க்க முடியாததாகும். ஏனெனில், சுற்றுலாத் துறையில் உயர் வெளியீட்டுத் திறனையும் அதேபோல இலாபத்தையும் உத்தரவாதப்படுத்துவதில் மூலவளத்தின் தரம் முக்கியமான ஒரு பங்கினை வகித்து வருகின்றது. எனவே, வருங்கால சுற்றுலாத்துறை அபிவிருத்தி சுற்றுச் சூழலுக்கு இசைவான விதத்தில் மேற்கொள்ளப்படுவது அவசியமாகும்.

## இலங்கையில் பொழுது போக்கு நடவடிக்கைகளின் அபிவிருத்தி

ஓய்வு, சுற்றுலாத் துறை மற்றும் பொழுதுபோக்கு என்பவற்றின் விஞ்ஞான பின்புலத்துக்கு இலங்கையையும் உள்ளிட்ட வளர்முக நாடுகள் அளித்து வரும் கோட்பாட்டு ரீதியான பங்களிப்பு மிகவும் சிறு அளவிலேயே காணப்படுகிறது. சுற்றுலாப் பயணிகளுக்கு பொழுது போக்கு வசதிகளை வழங்குவது உலகின் பல பாகங்களில் வெற்றிகரமான ஒரு பணம் சம்பாதிப்பு வழியாக உருவாகியுள்ளது. எனவே, பொழுதுபோக்கு மற்றும் சுற்றுலாத்துறை என்பவற்றுக்கான மூலவள ஒதுக்கீடு விவேகபூர்வமற்ற முறையில் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், அது சுற்றுச் சூழல் சம்பந்தப்பட்ட தீவிரமான பல பிரச்சினைகளையும் தோற்றுவித்துள்ளது. இலங்கை போன்ற நாடுகளில் பொழுதுபோக்கு மற்றும் சுற்றுலாத்துறை என்பவற்றுக்கான மூலவளங்களின் பாவனையின் போது இது தொடர்பான அடிப்படைக் கருதுகோள்கள் கவனத்தில் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இரண்டாவது உலக மகா யுத்தத்துக்கு பிற்பட்ட காலத்தில் கரிபியன், ஆபிரிக்க, ஆசிய, பசுபிக் பிராந்தியங்களைச் சேர்ந்த பல வளர்முக நாடுகளில் சர்வதேச சுற்றுலாத் துறை பாரிய அளவில் விரிவாக்கம் கண்டது. ஆனால் இலங்கையை பொறுத்தவரையில் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வதற்

**ஓய்வு, பொழுதுபோக்கு மற்றும் சுற்றுலா**

ஓய்வு நேரம் — வேலை நேரம்

**ஓய்வு**
வேலை, தூக்கம் மற்றும் ஏனைய அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்பட்ட பின்னர் ஒரு நபருக்குக் கிடைக்கும் நேரம்

**பொழுதுபோக்கு**
ஓய்வு நேரத்தின்போது ஈடுபட்டிருக்கும் நடவடிக்கை

| வீட்டு பொழுது போக்கு | அன்றாட பொழுதுபோக்கு | ஒரு நாள் பயணம் | சுற்றுலாத் துறை |
|---|---|---|---|
| வாசிப்பு, தோட்ட வேலை டி. வி. பார்த்தல் சமூகத் தொடர்பு முதலியவை | திரையரங்குகளுக்கு அல்லது உணவகங்களுக்கு செல்லல் விளையாட்டுக்கள் | உல்லாசப் பயணங்களை மேற்கொள்ளல் | சாதாரண வசிப்பிடத்திலிருந்து வெளியே உள்ள இடங்களுக்கு தற்காலிகமாக நகர்ந்து செல்லல், அவ்விதம் தங்கியிருக்கும் போது மேற்கொள்ளும் நடவடிக்கைகள், அத்தகையவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக உருவாக்கப்படும் வசதிகள், |

கான பயனுள்ள நடவடிக்கைகள் 1966 ஆம் வருடத்திலேயே மேற்கொள்ளப் பட்டன. 1960 களின் தொடக்கத்தின் போது நாடு அனுபவித்த தீவிரமான பொருளாதாரப் பிரச்சினைகளான கடுமையான அந்நியச் செலாவணி பற்றாக் குறை, உயர் மட்டத்திலான வேலையில்லாத் திண்டாட்டம் மற்றும் மெதுவான பொருளாதார வளர்ச்சி என்பன இலங்கை அரசாங்கம் சுற்றுலா துறையை இப் பிரச்சினைகளுக்கான ஒரு சிறந்த மாற்று வழியாக அபிவிருத்தி செய்வதற்கு நிர்ப்பந்தித்தன. சுற்றுலாத் துறை அபிவிருத்தி தொடர்பான அரசாங்கக் கொள்கை, பொருளாதார ஆதாயங்களை உச்ச மட்டத்தில் பெற்றுக்கொள்ளும் அதேவேளையில், அதன்மூலம் தோன்றக் கூடிய மோசமான சமூக, பொருளாதார மற்றும் சுற்றாடல் தாக்கங்களை குறைந்த பட்ச மட்டத்தில் வைத்திருக்கக் கூடிய விதத்தில் வகுக்கப்பட்டிருந்தது. 1968 இன் சுற்றுலாத் துறை அபிவிருத்திச் சட்டம் இலங்கையில் ஒரு முறையான அடிப் படையில் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான சட்ட ரீதியான அதிகாரத்தை இலங்கை சுற்றுலாச் சபைக்கு வழங்கியது. சுற்றுலாத் துறை வெகு விரைவில் சவால்களுடன் கூடிய இலாபகரமான ஒரு முதலீட்டு துறையாக வளர்ச்சியடைந்தது. சுற்றுலாத் துறை தொடர்பான பத்தாண்டு திட்டத்தை (1967) அடுத்து சுற்றுலாத் துறை குறித்த பெருந்திட்டம் (1992) வகுக்கப்பட்டது. இது இலங்கையில் சுற்றுலாத் துறை அபிவிருத்திக்கான திட்ட சட்டகாத்தை வழங்கியது.

## இலங்கையில் பொழுது போக்கு வளங்களும் நடவடிக்கைகளும்

பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்கென பயன்படுத்திக் கொள்ளக் கூடிய நாட்டின் இயற்கை வளங்கள் மற்றும் மனித வளங்கள் என்பவற்றை இனங்கண்டு கொள்வதற்கென முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கை சுற்றுலா திட்டம் (1967) அடுத்து வரும் பத்தாண்டு காலத்தில் அபிவிருத்தி செய்வதற்கென 6 பொழுதுபோக்கு பிராந்தியங்களை இனங்கண்டிருந்தது:

(1) பாரிய கொழும்புப் பிராந்தியம்
(2) தென் கரையோரப் பிராந்தியம்
(3) கிழக்கு கரையோரப் பிராந்தியம்
(4) மத்திய மலைநாட்டு பிராந்தியம்
(5) கலாச்சார முக்கோணப் பிராந்தியம்
(6) வட பிராந்தியம்

இலங்கையில் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்யும் திசையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு சரியான நடவடிக்கை என இதனைக் குறிப்பிட முடியும். ஆனால், இந்த சுற்றுலாத் துறைக்கான பத்தாண்டுத் திட்டம் பத்தாண்டு காலம் செயற்படுத்தப்பட்ட பின்னரும் கூட அதன் குறிக்கோள்களை முழுமையாக சாதித்துக் கொண்டிருக்கவில்லை.

இயற்கை மற்றும் மனித மூலவள அடிப்படையில் இலங்கைக்கான பொழுது போக்கு வலயங்களை வகுப்பதில் 1984 இல் தெஹரகொட என்பவரினால் ஒரு புதிய கருதுகோள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இந்தப் புதிய வலயங்களுக்கான திட்டத்தை தயாரிப்பதில் பொழுதுபோக்கு வசதிகளுக்கான உள்ளார்ந்த ஆற்றல், தற்போதைய உள் கட்டமைப்பு வசதிகள், பொழுதுபோக்கு கைத்தொழிலின் பொருளாதார முக்கியத்துவம் முதலிய பல்வேறு விடயங்களும் கவனத்தில் எடுக்கப்பட்டிருந்தன. எனினும் மிகப் பிந்திய பிராந்தியக் கருதுகோள் 1992 இன் சுற்றுலாத் துறைக்கான பெருந்திட்டத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது. இந்த பெருந்திட்டத்தின் பிரதான குறிக்கோள்கள் வருமாறு:

(1) சர்வதேச மற்றும் உள்நாட்டு சுற்றுலாத் துறையின் அபிவிருத்திக்கு என நீண்டகால அனைத்தும் அடங்கிய உபாயத் திட்டம் ஒன்றை வகுத்தல்.

(2) நீண்ட கால சுற்றுலாத் துறை அபிவிருத்தி கட்டமைப்புக்குள் ஐந்தாண்டு சுற்றுலா அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமொன்றை தயாரித்தல்.

(3) முக்கியமான கலாசார, சரித்திர மற்றும் வனவிலங்கு கவர்ச்சிப் பிரதேசங்களை உள்ளடக்கக் கூடிய விதத்தில் சுற்றுலாத் தலங்களை அபிவிருத்தி செய்தல்.

(4) உள்நாட்டு சுற்றுலாத் துறையை மேம்படுத்துதல்

சுற்றுலாத் துறைக்கான பத்தாண்டு பெருந்திட்டம் (1992) இரத்தினபுரி, போபத் எல்ல, கிதுள்கல, தெனியாய, வவுல் பனே சுண்ணக்கல் சுரங்கம், இரக்குவானை, சேகாலை மற்றும் சிங்கராஜ வனம் என்பவற்றையும் உள்ளடக்கிய பல புதிய பிரதேசங்களை அபிவிருத்திக்கான உள்ளார்ந்த ஆற்றலைக் கொண்டிருக்கும் பிரதேசங்களாக இனங்கண்டிருந்தது. மேலும், இயற்கை எழில் கொண்ட மேலே குறிக்கப்பட்ட இடங்கள் உயிரினவியல் சுற்றுலாவுக்கான தலைசிறந்த இடங்களாகவும் இனங்காணப் பட்டிருந்தன. பெலிஹுஃல்லோய பம்பஹின்ன பிரதேசத்தையும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய ஒரு முக்கிய பிரதேசமாக இப் பெருந்திட்டம் இனங் கண்டுள்ளது.

தற்பொழுது (வட மாகாண சபை தவிர்ந்த) அனைத்து மாகாண சபைகளும் சுற்றுலாத் துறையை மேம்படுத்தி வருகின்றன. ஊவா மற்றும் சபரகமுவ பிரதேசங்களின் பொழுதுபோக்கு வசதிகள் இன்னமும் முற்றாக பயன்படுத்தப் படவில்லை. உடவளவே குளத்தைச் சூழவுள்ள பிரதேசங்கள் வனவிலங்குச் சரணாலயங்கள் மற்றும் பெலிஹுஃல்லோயா பிரதேங்கள் என்பன உயிரினவியல் சூழல் சுற்றுலாத் துறைக்கென அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. அதேவேளையில், பலாங்கொடையைச் சூழவுள்ள பிரதேசம் கலாசார சுற்றுலாத் துறைக்கென அபிவிருத்தி செய்யப்படும். மேலும், சபரகமுக மாகாண சபை சுற்றுலாக் கைத்தொழிலுக்கு ஆளணியினரை பயிற்றுவிப்பதற்கு உகந்த இடமாக இனங்கண்டுள்ளது.

சுற்றுலா அபிவிருத்தியின் சுற்றுச் சூழல் அம்சங்களை இலங்கை இன்னமும் போதியளவில் அங்கீகரித்திருக்கவில்லை. இதன் விளைவாக தற்பொழுது காணப்படும் சுற்றுலாத் துறை உள்கட்டமைப்பு வசதிகள் இன்றைய பசுமை சுற்றுலாத்துறையின் பின்புலத்தில் வழக்கொழிந்தவையாக காணப்படுகின்றன. தாம் பெற்றுக்கொள்ள விரும்பும் பயண அனுபவம் மற்றும் பிரயாணங்களை திட்டமிடுவதற்கான முடிவுகளை மேற்கொள்வதற்கு தமக்குத் தேவையான தகவல்கள் என்பவற்றைப் பொறுத்தவரையில் இன்றைய நுகர்வோர் கல்வி கற்றவர்களாகவும், அதிகளவில் தேவைகளைக் கொண்டவர்களாகவும் உலக நடைமுறைகளை அறிந்தவர்களாகவும் இருந்து வருகின்றனர். எந்தவொரு சுற்றுலாத்தலமும் இத்தகைய போக்குகளை புறக்கணித்து விட முடியாது. எவ்வாறிருப்பினும் இலங்கையில் பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்கான மூலவள உபயோகம் சுற்றுச் சூழலுக்கு உசிதமான விதத்தில் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. பாரிய அளவிலான சுற்றுலாத் துறை மேம்படுத்தப்பட்டுவரும் பொழுது சுற்றுச் சூழல் தொடர்பான அம்சங்கள் உதாசீனப் படுத்தப்படுகின்றன. இயற்கை மூல வளங்கள் தொடர்பான பெரும்பாலான சட்டவாக்கங்கள் சமூகத்தின் மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப அனுசரித்துச் செல்வனவாக இருந்து வரவில்லை. அவை அத்தகைய மூலவளங்களின் நிலையான உபயோகத்துக்கு பதிலாக அவற்றை சுரண்டும் விதத்திலேயே உருவாக்கப்

(31 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் பாடசாலை மட்டக் கணிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் அறிமுகம்

ஏ. ஏ. நவரத்ன
(உதவி பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்)

*(சென்ற இதழ் தொடர்ச்சி)*

இலங்கையைப் பொறுத்தவரையில் கடந்த ஆறு தசாப்த காலப் பிரிவின் போது அரசாங்கம் அனைவருக்கும் கட்டாய பொதுக் கல்வியை இலவசமாகவும், சமத்துவமான முறையிலும் வழங்குவதற்கு பல்வேறு வழிமுறைகளை மேற்கொண்டு வந்துள்ளது. பாலர் வகுப்பு தொடக்கம் பல்கலைக்கழகம் வரையில் அனைவருக்கும் இலவசக் கல்வியை வழங்குதல், பாடசாலைகளில் தாய் மொழியை போதனா மொழியாக ஆக்கியமை, அனைத்துப் பாடசாலைகளையும் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் எடுத்து வந்தமை, பள்ளி மாணவர்களுக்கான இலவச பகலுணவு, சீருடைகள் மற்றும் பாடப் புத்தங்கள் என்பன இது தொடர்பாக நிகழ்த்தப்பட்டுள்ள சாதனைகளில் சிலவாகும். 1972 இன் கல்விச் சீர்திருத்தங்கள் இச் செயன்முறைக்கு முக்கியமான ஒரு பங்களிப்பினை வழங்கின. 5-14 வயதுத் தொகுதியில் இருந்து வரும் அனைத்துப் பிள்ளைகளுக்கும் கல்வியைக் கட்டாயப்படுத்தும் சட்டமொன்றை அரசாங்கம் 1998 ஜனவரி தொடக்கம் அமுல் செய்து வருகின்றது.

இது உண்மையில் 1990 இல் ஜொம்டென்னில் கூடிய (இலங்கையையும் உள்ளிட்ட, அனைத்து உறுப்பு நாடுகளினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட குறிக்கோள்களையும், இலக்குகளையும் எய்துவதற்கான ஒரு முயற்சியாகும். 1997 இல் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட கல்விச் சீர்திருத்த செயல்முறை வகுப்பறை மட்டத்திலான கணிப்பீட்டுக்கு உயர் முன்னுரிமை அளித்தது. இக்கணிப்பீட்டு முறை கற்றல், கற்பித்தல் செயன்முறை முழுவதிலும் தேர்ச்சி மட்டங்களைக் கணிப்பிட்டுக் கொள்வதற்கான வாய்ப்பினை அளிக்கின்றது.

இலங்கையில் உள்ள பாடசாலைகள் அனைத்திலும் இப்பொழுது விரிவான ஒரு கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டம் வடிவமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

பாடசாலை மட்ட கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் சிறப்பம்சங்கள்:-

## (1) கருதுகோள்

இது மாணவர்களிடம் சமநிலையான ஓர் ஆளுமையை அபிவிருத்தி செய்யும் ஒரு செயன்முறையாகும். எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டங்களுக்கு மாணவர்களை எடுத்து வரும் பொருட்டு ஆசிரியர்கள், மாணவர்களின் ஆற்றல்களையும், பலவீனங்களையும் அடையாளம் கண்டு அவர்களுக்கு உதவியளித்தல் வேண்டும். மேலும், வகுப்பறையில் இடம்பெற்று வரும் கல்வி பயிலல் நடவடிக்கைகளின் போது அவர்களுடன் இணைந்து பணியாற்றல் வேண்டும். இச் செயன்முறை ஒவ்வொரு மாணவனினதும் அபிவிருத்திக்கு வழிகோலுவதாக இருந்து வருகின்றது. இது மாணவர்கள் எட்டியிருக்கும் அறிவு மட்டங்களுக்கு ஏற்ப அவர்களை ஒப்பிடும் ஒரு செயன்முறையாகவோ ஆற்றல்களுக்கு ஏற்ப அவர்களை வரிசைப்படுத்தும் ஒரு செயல்முறையாகவோ இருந்து வரவில்லை.

## (2) குறிக்கோள்கள்

பாடசாலை மட்டக் கணிப்பீடு நான்கு பிரதான குறிக்கோள்களை கொண்டுள்ளது:

(அ) மாணவர்களின் பயிலும் செயன்முறையை விருத்தி செய்தல்.

(இ) கற்றல், கற்பித்தல் என்பன அதிகளவுக்கு செயல்திறன் மிக்கதாகவும், தாக்கமானதாகவும் இருந்து வரும் பொருட்டு கணிப்பீட்டு முறையை விருத்தி செய்தல்.

(ஈ) பாடசாலை சூழ்நிலையை மதிப்பீட்டுக் கலாசாரம் ஒன்றிலிருந்து கணிப்பீட்டு கலாசாரத்திற்கு நிலைமாற்றம் செய்தல்.

கணிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட வேண்டிய காரணிகளை இரு விரிவான வகைகளுக்குள் அடக்கலாம். மாணவர்களின் சமநிலையான ஆளுமையின் அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்ட காரணிகள் முதல் வகையில் அடங்குகின்றன. அதாவது, உய்த்துணரும் திறன்கள், தாக்கத் திறன்கள் உளச் செயல்பாட்டுத் திறன்கள், சமூகத் திறன்கள், ஆளுமைப் பண்புக் கூறுகள் என்பவை கற்றலுடன் சம்பந்தப்பட்டவையாகும். மாணவர்களின் கற்றல் செயல்பாட்டில் தாக்கங்களை எடுத்து வரும் காரணிகள் இரண்டாவது தொகுதியில் அடங்குகின்றன. புத்திக் கூர்மை, செயற்றூண்டல், கற்றல் விகிதம், எதிர்பார்ப்பு மட்டங்கள், உளவியல் வேறுபாடுகள், பாடசாலை நுழைவுக் கட்டத்தில் காணப்படும் ஆற்றல்கள், கற்றல் திறன்கள், மற்றும் சமூக பொருளாதார பின்னணி என்பன இந்த இரண்டாவது தொகுதியில் அடங்குகின்றன.

மாணவர்கள் வகுப்பறையில் கற்றல் செயல்பாட்டில் ஈடுபட்டிருக்கும் பொழுது அவர்கள் தொடர்பான கணிப்பீடுகளை மேற்கொள்வது சிறந்ததாகும். வகுப்பறைக்கு வெளியிலும் கூட அவர்கள் கற்றல் செயல்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் பொழுது கணிப்பீடுகளை மேற்கொள்வது சாத்தியமாகும். இக் கணிப்பீடு ஆசிரியரின் தற்றுணிபின் பேரில் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும். முன்னரே நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒரு கால அட்டவணையின் படி அதனை மேற்கொள்ளக் கூடாது.

ஒரு தவணையின் போது பல தடவைகள் மாணவர்கள் தொடர்பான கணிப்பீடுகளை மேற்கொள்ளலாம். மதிப்பீட்டின் போது மாணவரின் ஆயத்த நிலை, வேலையில் ஈடுபடுவதற்கான ஆற்றல், சாதனை மட்டங்கள், படித்திருக்கும் விசயங்களை உண்மையான வாழ்க்கையில் பயன்படுத்தும் ஆற்றல் என்பன தொடர்பாக விசேஷ கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

பாடசாலை மட்ட கணிப்பீட்டில் பயன்படுத்தப்படும் கருவிகள் பொதுப் பரீட்சைகளில் அடைவு மட்டங்களை கண்டறிந்து கொள்வதற்காக பயன்படுத்தப்பட்டு வரும் கருவிகளை ஒத்தவையாக இருந்து வர வேண்டிய அவசியமில்லை. பொதுப் பரீட்சைகள் மாணவர்களின் அடைவு மட்டங்களை பரீட்சித்துப் பார்க்கும் முறையை பின்பற்றுகின்றன. பாடசாலை மட்ட கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் செயல்பாடு கணிப்பீட்டு உத்திகளை பயன்படுத்த வேண்டியுள்ளது. இதற்கென வகுப்பறை மட்டத்தில்

சிறு எழுத்துப் பரீட்சைகள், அவதானிப்பு அட்டவணைகள், பரீட்சிப்பு பட்டியல்கள், ஒப்படைகள், செயற்றிட்டங்கள், படங்களை அடிப்படையாகக் கொண்ட பரீட்சைகள், வாசிப்புப் பரீட்சைகள், எழுத்துப் பரீட்சைகள் மற்றும் செயல்பாடுகள் முதலிய கருவிகளை உபயோகித்துக் கொள்ள முடியும். இவை ஒரு பிள்ளையின் ஆற்றல்களையும் பலவீனங்களையும் மதிப்பிட்டுக் கொள்வதற்கு பெருமளவுக்கு உதவுவதுடன், சம்பந்தப்பட்ட துறையில் அப்பிள்ளை நல்ல திறமையை வளர்த்துக் கொள்வதற்கும் வகை செய்யும்.

இத்தகைய கணிப்பீட்டுக் கருவிகளின் சிறப்பம்சம் அவை வெறுமனே பரீட்சிப்பு கருவிகளாக மட்டும் இருந்து வரவில்லை என்பதாகும். மாறாக அவை சிறந்த முறையில் கற்பித்தல், கற்றல் மற்றும் கணிப்பீட்டு நடைமுறைகள் என்பவற்றுக்கான வழிகாட்டுக் கருவிகளாக இருந்து வருகின்றன. ஒப்படை என்பது ஆசிரியரின் வழிகாட்டுதலின் கீழும் மேற்பார்வையின் கீழும் மாணவர்களினால் மேற்கொள்ளப்படும் ஒரு நடவடிக்கையாகும். எனவே, இந்த ஒப்படை கற்றல் செயற்பாட்டினை எவ்வாறு வடிவமைப்பது என்பது தொடர்பான ஒரு வழிகாட்டுதலை ஆசிரியருக்கு வழங்குகின்றது. கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுவது எப்படி என்ற வழிகாட்டுதலை அது மாணவர்களுக்கு வழங்குகின்றது. ஒப்படையில் தரப்பட்டுள்ள விவரங்கள் இச்செயன்முறையின் போது மாணவர்கள் தொடர்பான கணிப்பீடுகள் எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும், ஆசிரியரால் அவர்களுக்கு எத்தகைய வழிகாட்டுதலும் திருத்தங்களும் வழங்கப்பட வேண்டும் என்பவற்றை எடுத்துக் காட்டுகின்றன. அவதானிப்பு அட்டவணைகள் மாணவர்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய விடயங்கள், செயற்பாட்டின் போது கணிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட வேண்டிய விடயங்கள், வேலையில் ஈடுபட்டிருக்கும் பொழுது மாணவர்களை வகைப்படுத்துவது எப்படி என்பது குறித்த வழிகாட்டுதலை வழங்குகின்றன. செயற்றிட்டங்கள் மூலம் மாணவர்கள் தமது சொந்த கற்றல் செயற்பாட்டினை வகுத்துக் கொள்வதுடன், எதனைச் செய்வது எவ்வாறு செய்வது என்பது குறித்த முடிவுகளை அவர்கள் மேற்கொள்வதற்கும் இடமளிக்கிறது. விவரத் தொகுப்புக்கள் மாணவர்கள் தாம் அக்கறை கொண்டிருக்கும் பாட துறைகளில் எட்டியிருக்கும் அபிவிருத்தி மற்றும் முன்னேற்றம் என்பது தொடர்பான சான்றுகளை திரட்டிக் கொள்வதற்கு உதவுகின்றன. படங்களை அடிப்படையாகக் கொண்ட பரீட்சைகள், வாய் மூலப் பரீட்சைகள், மற்றும் செயற்பாடுகள் என்பன மாணவர்கள் உண்மையான கற்றல் செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கும் பொழுது தமது தேர்ச்சிகளையும் திறன்களையும் நிரூபித்துக் காட்டுவதற்கான வாய்ப்பை வழங்குகின்றன. இந்தப் பின்னணியில் பாடசாலைமட்ட கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் வகுப்பறையில் சாதகமான மாற்றங்களை எடுத்து வந்திருப்பதுடன், கற்றலில் மாணவர்கள் ஆர்வம் காட்டும் ஒரு நிலையையும் கற்பித்தலில் ஆசிரியர்கள் ஆர்வம் காட்டும் ஒரு நிலையையும் எடுத்து வந்துள்ளன. இத்தகைய விருத்தி செய்யப்பட்ட பல்வேறு கற்பித்தல் - கற்றல் உத்திகளை பயன்படுத்துவதன் மூலம் மேற்கொள்ளப்படும் கணிப்பீட்டு நடைமுறை வகுப்பறையில் தீவிரமான மாற்றங்கள் ஏற்படுவதற்கு வழிகோலியுள்ளது. கற்பிக்கும் நேரத்தையும் அது மிச்சப்படுத்துகின்றது. ஒப்படைகள், கூட்டு செயற்பாடுகள் முதலிய குழு நடவடிக்கைகளில் ஈடுபடுவதானது கற்றல் செயற்பாட்டை செயல்திறன் கொண்டதாகவும் தாக்கத்திறன் கொண்டதாகவும் ஆக்குகின்றன. வகுப்பறையில் பெருமளவுக்கு சாதகமான மகிழ்ச்சியுடன் அனுபவிக்கத்தக்க கற்றல் செயற்பாடு இடம்பெறும் வகையில் கற்றல் – கற்பித்தல் உத்திகள் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதனை தேசிய கல்வி நிறுவகத்தினால் வெளியிடப்பட்டிருக்கும் வழிகாட்டு நூல்கள் வலியுறுத்துகின்றன. குறிப்பிட்ட ஒரு அலகு கற்பித்து முடிக்கப்பட்டவுடன் பரீட்சைகள் நடத்தக் கூடாது என ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. புதிய கற்பித்தல் முறைகளை பயன்படுத்துவதன் மூலம் மாணவர்கள் பாடங்களை மகிழ்ச்சியுடன் அனுபவிக்கத்தக்க விதத்தில் ஆசிரியர்கள் ஒவ்வோர் அலகையும் கற்பிக்க வேண்டுமென்றும், மாணவர்கள் குழுக்களாக சேர்ந்து செயல்படுவதற்கு இடமளித்து குழுக்களின் பரஸ்பர செயல்களுக்கூடாக கற்பதற்கான வாய்ப்புக்களை அவர்களுக்கு வழங்க வேண்டும் என்றும் ஆசிரியர்களுக்கு வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த உத்தி கற்பித்தல் – கற்றல் நேரத்தை மிச்சப்படுத்துவதுடன் குறுகிய காலப் பிரிவுக்குள் கொடுக்கப்பட்டுள்ள பாடத் திட்டத்தை பூர்த்தி செய்யும்.

மாணவரின் முன்னேற்றம் தொடர்பான பதிவேடு வகுப்பறையில் பயன்படுத்தக்கூடிய ஓர் உத்தியாகும். மாணவர்களின் உதவியுடன் ஆசிரியர்களினால் இப்பதிவேடுகள் பராமரிக்கப்பட்டு வருமானால் அது மிகவும் எளிதானதாகவும் பயனுள்ளதாகவும் இருக்கும். குறிப்பிட்ட ஒரு பாடத்தில் பல்வேறு தலைப்புக்கள் தொடர்பாகவும், குறிப்பிட்ட ஒரு மாணவர் குழு எட்டியிருக்கும் அடைவு மட்டங்களையும் இப்பதிவேடுகள் சிறந்த முறையில் எடுத்துக் காட்டும். முன்னேற்றம் தொடர்பான பதிவேட்டில் உள்ள கோடுகளை நோக்கினால் ஆசிரியரின் செயல்பாடு குறித்த ஒரு தெளிவான கருத்தினை நாங்கள் பெற்றுக்கொள்ள முடியும். ஆசிரியர் கற்பித்துள்ளவை எவை? கற்பிக்காதவை எவை? அவரால் யாருக்கு சிறந்த முறையில் கற்பிக்க முடியாதிருந்தது? எத்தகைய தலைப்புக்கள் தொடர்பாக அவர் மேலதிக கற்றல் செயல்பாடுகளை அல்லது நடவடிக்கைகளை ஏற்பாடு செய்ய வேண்டும்? என்பன தொடர்பான விவரங்களை அவை வழங்குகின்றன. ஒவ்வொரு பாடம் தொடர்பாகவும் ஒவ்வொரு மாணவருக்கெனவும் ஒரு தொகுப்பினை உருவாக்குவது வகுப்பறையில் பராமரிக்கப்பட்டு வர வேண்டிய மற்றொரு பதிவு முறையாகும். இது மாணவரின் முன்னேற்றத்தை வரைபட அடிப்படையில் முன்வைக்கும்.

ஒவ்வொரு பாடத்தையும் கற்பிக்கும் ஆசிரியர்கள் இந்தப் பாடங்கள் தொடர்பாக மாணவர்களின் அடைவு மட்டங்களை எடுத்து விளக்கும் ஓர் அறிக்கையை பெற்றோருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். இது ஒரு பிள்ளையின் பின்வரும் விடயங்கள் தொடர்பான தகவலையும் உள்ளடக்கும்:

(அ) நடத்தை மாதிரி.
(ஆ) பல்வேறு தலைப்புக்களிலும் எட்டியுள்ள திறமை மட்டங்கள்.
(இ) அடைந்துள்ள முன்னேற்றத்தைக் காட்டும் ஒரு தொகுப்பு.

இது தவிர ஆசிரியர் மாணவர் மற்றும் பெற்றோர் ஆகியோருக்கிடையிலான கருத்துப் பரிமாற்றத்துக்கும் இதில் ஓர் இடம் விடப்பட்டுள்ளது. இந்தக் கருத்துப் பரிமாற்றம் பிள்ளை சிறந்த முறையில் கல்வி கற்கச் செய்வதற்கு பெற்றோரும் அதேபோல ஆசிரியரும் என்ன செய்ய வேண்டியுள்ளது என்பது தொடர்பாக நெறிப்படுத்தும்.

## அமுலாக்கம் தொடர்பான முயற்சிகள்

இந்த நிகழ்ச்சித் திட்டம் தேசிய கல்வி நிறுவகத்தின் கணிப்பீட்டுப் பிரிவினால் 1994 இல் துவக்கி வைக்கப்பட்டதுடன், மாத்தறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 30 பாடசாலைகளில் முன்னோடி அடிப்படையில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. 1995 இல் அது மேலும் 20 பாடசாலைகளுக்கு விரிவாக்கப்பட்டது. 1997 அளவில் இந்த முன்னோடி நிகழ்ச்சித் திட்டம் மொனராகலை மாவட்டம் முழுவதுக்கும் வடமேல் மாகாணம் மற்றும் மேல் மாகாணம்

(31 ஆம் பக்கம் பார்க்க)

(25 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பணச்சந்தை ஆழமான ஓர் ஒருங்கிணைப்புச் செயன்முறைக்குப் தரப்படுத்தல் செயன்முறைக்கும் உட்படுத்தப்பட்டுள்ளது. எனினும், இதுவரையில் ஏற்பட்டிருக்கும் ஒருங்கிணைப்பின் அளவு பல்வேறு சந்தைப் பிரிவுகளுக்கு ஏற்ப வேறுபட்டுக் காணப்படுகின்றது. பாதுகாப்பற்ற வைப்புச் சந்தையே பெருமளவுக்கு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. வங்கிகள் தமது குறுங்கால பணத்தினை பிணை உத்தரவாதம் இன்றி பரிமாறிக் கொள்கின்றன. சார்பு ரீதியில் குறைவாக ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைப் பிரிவுகளில் மீள்கொள்வனவு சந்தையும் அடங்குகின்றது. இச் சந்தையில் பங்கேற்பவர்கள் பிணைகளுக்கு எதிராக குறுங்கால பணத்தையும் (திறைசேரி உண்டியல்கள், வர்த்தகத் தாள் மற்றும் வைப்புச் சான்றிதழ்கள் போன்ற) குறுங்கால சந்தைப் பிணைப் பத்திரங்களையும் பரிமாறிக் கொள்கின்றார்கள்.

## பங்குச் சந்தைகளில் ஏற்பட்ட அபிவிருத்தி

யுரோ பிரதேச பங்குச் சந்தைகளின் மொத்த மூலதனமயமாக்கல் 1999 அக்டோபர் முடிவில் 4,346 பில்லியன் யுரோ நாணயங்களாக இருந்து வந்தன. இது மொ உ உ வின் 71% ஆகும். 1999 ஆம் வருடத்தின் போது பங்குச் சந்தைகளில் பட்டியலிடப்பட்ட கம்பெனிகளின் எண்ணிக்கையிலும் ஓர் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. யுரோ பிரதேசத்தில் நேரடி நிதிப்படுத்தல் முறை முக்கியத்துவம் பெற்று வருகின்றது என்பதனை இது எடுத்துக்காட்டுகின்றது. மேலும், இப்பிரதேசத்தின் நிதித்துறைக் கட்டமைப்பில் கடன் பிணையங்களின் முக்கியத்துவம் அதிகரித்து வருவதனையும் காண முடிகின்றது. யுரோ நாணயத்தின் அறிமுகம் பங்குச் சந்தைகளிலும் ஒரு வளர்ச்சியை தூண்டிவிட்டுள்ளது போல் தெரிகிறது. முன்னர் வங்கி நிதிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரு நிலைமையை இது ஏற்படுத்தியுள்ளது.

1999 ஜனவரியில் இடம் பெற்ற யுரோ நாணயத்தின் அறிமுகம் ஐரோப்பாவின் பொருளாதார மற்றும் நிதித்துறைச் சூழலில் கணிசமான அளவிலான மாற்றங்களை எடுத்து வந்துள்ளது. 1999 ஆம் வருடத்தின் போது இடம்பெற்ற மிகவும் குறிப்பிடத்தக்க மாற்றம் யுரோவின் நிதித்துறைக் கட்டமைப்பில் ஏற்பட்டது. யுரோ பிரதேசம் அதிகளவுக்கு சந்தை வழிப்பட்ட ஒரு கட்டமைப்பை கொண்டதாக மாற்றமடைந்து கொண்டு வருகின்றது. குறுங்கால பணத் தேவைகளுக்காக தேசிய பணச் சந்தைகள் தனியொரு யுரோ பிரதேச சந்தையாக ஒருங்கிணையும் நிகழ்வுப்போக்கு படிப்படியாக இடம்பெற்று வந்தது. மேலும், யுரோ நாணயத்திலான தனியார் முறிச் சந்தையிலும் உயர் ஆதாயங்களைக் கொண்ட முறிகள் போன்ற நிதிக் கருவிகளின் சந்தையிலும் முன்னேற்றங்கள் ஏற்பட்டன. இத்தகைய முன்னேற்றங்கள் அடுத்து வரும் வருடங்களின் போது யுரோ பிரதேசத்தின் நிதித்துறைக் கட்டமைப்பில் பல அடிப்படையான மாற்றங்களை எடுத்துவர முடியும்.

*(ஐரோப்பிய மத்திய வங்கி மாதாந்த செய்தி விவரணத்திலிருந்து (ஜனவரி 2000) தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகள்).*

(19 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உலக மாநாடுகள் நடந்து முடிந்தன. உலக பொருளாதார மாநாடு சுவிட்சர்லாந்தில் 2000 பெப்ரவரி 19 ஆம் திகதி பாங்கொக்கில் முடிவுற்றது. இந்த மாநாடுகளின் போது தெரிவிக்கப்பட்ட சில முக்கியமான சில கருத்துக்கள் கீழே சுருக்கமாக தரப்படுகின்றன:

- பல்பக்க வர்த்தக தாராளமயமாக்கல் தொடர்பான கருத்துக்களுக்கு வலுவூட்டுதல்.

- உலகமயமாக்கலின் புதிய சிக்கலான பிரச்சினைகள் மற்றும் சவால்கள் என்பவற்றை தாக்கமான முறையில் சமாளிக்கும் பொருட்டு சர்வதேச நிறுவனக் கட்டமைப்புக்கு வசதிகளை வழங்குதல்.

- சிறந்த முறையில் செயற்படும் சர்வதேச நிதி அமைப்பொன்றையும் சந்தை ஒன்றையும் முன்னுணர்ந்து கூறக் கூடிய பல்பக்க வர்த்தக முறையொன்றையும் ஸ்தாபித்தல். உருகுவே சுற்று உடன்படிக்கைகளின் சமநிலையான அமுலாக்கத்தினை உறுதி செய்தல்.

- அனைத்து சர்வதேச நிறுவனங்களினதும் முடிவுகளை எடுக்கும் செயன்முறையில் வளர்முக நாடுகள் மிகவும் தாக்கமான முறையில் பங்கேற்பதற்காக வாய்ப்புக்களை அளித்தல். அதே நேரத்தில் இந்தச் செயன்முறையை ஒளிவு மறைவற்ற விதத்திலும் மேற்கொள்ள வேண்டும். மேற்கொள்ளப்படும் முடிவுகள் பாரிய வணிகத் துறையினர் மற்றும் பாரிய அரசாங்கங்கள் என்பவற்றின் நலன்களை மட்டுமன்றி சிறு வணிகத் துறை மற்றும் சிறு அரசாங்கங்கள் என்பவற்றின் நலன்களை பிரதிபலிப்பதையும் உறுதி செய்துகொள்ள வேண்டும்.

*"ஐரோப்பா மற்றும் தென்னாசியா - பன்முக அடையாளங்கள் மற்றும் பன்முகநோக்குகள்" என்ற தலைப்பிலான சர்வதேச மாநாட்டில் களனிப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கே. திலகரத்ன அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகள்.*

(28 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளன. சில சட்டவாக்கங்கள் சமூக பொருளாதார அல்லது அரசியல் காரணங்களினால் செயல் வடிவம் பெறுவது தடுக்கப்பட்டுள்ளது. சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கு பொறுப்பாக இருந்து வரும் அரசாங்கம் அதன் முகவரகங்களும் சுற்றுலாத் துறை அபிவிருத்தியில் சுற்றுச் சூழல் மற்றும் உயிரினவியல் சூழல் காரணிகளை பாதுகாத்துக் கொள்ள வேண்டிய முக்கியமான தேவையை அறியாதிருந்து வருகின்றன. எனவே, இத்துறையில் நிலைபேறான ஒரு வளர்ச்சியை எடுத்து வரும் பொருட்டு பொழுது போக்கு நடவடிக்கைகளின் அபிவிருத்திக்காக விவேகபூர்வமான முறையில் மூலவளங்களை ஒதுக்குவது அத்தியவசியமானதாகும்.

(30 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்பவற்றுக்கும் விரிவுபடுத்தப்பட்டிருந்தது. இந்த முன்னோடி நிகழ்ச்சித் திட்டத்தின் விளைவாக ஒரு மூலவளப் புத்தகம், ஆசிரியர் கையேடு மற்றும் பயிற்றுவிப்பவர்களுக்கான கையேடு என்பன உருவாக்கப்பட்டன. பாடசாலை மட்ட கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டம் 1998 தொடக்கம் நாடெங்கிலும் அமுல்படுத்தப்படும் என கல்வி அமைச்சு ஒரு சுற்றறிக்கையின் மூலம் தெரிவித்திருந்தது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தை அமுல் செய்யும் முறைகள் தொடர்பாக தேசிய கல்வி நிறுவகம் பரீட்சைகள் திணைக்களம், கல்வி அமைச்சு மற்றும் மாகாண கல்வி அமைச்சுக்கள் என்பவற்றுடன் இணைந்து பெரும் எண்ணிக்கையிலான கல்வி அதிகாரிகளுக்கும் சேவைக்கால ஆலோசகர்களுக்கும் அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஆசிரியர்களுக்கு போதிப்பவர்களுக்கும் பயிற்சியை வழங்கியுள்ளது. தரங்கள் 6 மற்றும் 9 என்பவற்றில் 1999 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்ச்சித் திட்டம் 2004 ஆம் ஆண்டளவில் படிப்படியாக அனைத்துத் தரங்களுக்கும் விரிவாக்கப்படும்.

# வரவு செலவுத்திட்டம் 2000

*(இக்கட்டுரையின் முதல் பாகம் நவம்பர்/ டிசம்பர் 1999 இதழில் வெளியாகியது)*

பொதுவாக ஒரு வரவு செலவுத்திட்டத்தின் நோக்கம் குறிப்பிட்ட ஒரு வருடத்தின் போது அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படவிருக்கும் செலவுகள் மற்றும் அதற்குத் தேவையான வருமானத்தை திரட்டிக் கொள்ளல் என்பவற்றை எவ்வாறு மேற்கொள்வது என்பது குறித்த விளக்கம் ஒன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாகும். பொதுவாக செலவுகள் வருமானங்களையும் மிகைத்துக் காணப்படுவது வழமையாகும். இதற்குக் காரணம் அரசின் நிர்வாகப் பணிகள் மற்றும் நாட்டின் அபிவிருத்திச் செயல் பாடுகள் என்பவற்றுக்கான செலவுகள் அதிகரித்துச் செல்லும் வேகத்தில் வருமானங்கள் அதிகரிக்காமையாகும். இது இலங்கைக்கு மட்டும் வரையறுக்கப்பட்ட ஒரு விடயமாக இருந்து வரவில்லை. உலகின் பெரும்பாலான நாடுகளில் வரவு செலவுத் திட்டங்களில் இத்தகைய நிலைமைகளே காணப்படுகின்றன. இதன் விளைவாக பற்றாக் குறையாக இருக்கும் தொகைகளை ஈடு செய்து கொள்வதற்கு அரசாங்கம் எதிர்காலத்தில் மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைத் திட்ட யோசனைகளும் வரவு செலவுத்திட்டங்களில் உள்ளடக்கப்படுகின்றன.

நாட்டில் விலையேற்றங்கள் மேற்கொள்ளப்படுவதும், அராசங்க ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்கள் செய்யப்படுவதும், பல்வேறு மானியங்கள் வழங்கப்படுவதும் வரவு செலவுத் திட்டத்தின் மூலமே இடம் பெறுவதாக பொதுவாக மக்கள் நம்புகின்றனர். தற்போதைய அரசாங்கம் 1995 ஆம் வருடத்துக்கான வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பித்த பொழுது 3 வருட காலப் பிரிவுக்கான இலக்குகளையும் 6 வருட காலப் பிரிவு தொடர்பான திட்டங்களையும் சமர்ப்பித்திருந்தது. தனியார் துறைக்கு முதலிடம் அளிக்கும் விதத்தில் பொருளாதாரம் கட்டமைக்கப்பட வேண்டுமென்பது கொள்கை ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. மூன்று வருட காலப் பிரிவுக்குள் பின்வரும் இலக்குகளை பூர்த்தி செய்து கொள்வதற்கென யோசனைகள் முன்வைக்கப்பட்டிருந்தன:

1. 1995 இல் 6 சதவீதமான பொருளாதார வளர்ச்சி இலக்கினை 1997 இல் 7-8 சதவீதம் வரையில் படிப்படியாக அதிகரித்துக் கொள்ளல்.
2. 1995 இல் 7-8 சதவீதமளவில் இருந்து வரக் கூடிய பணவீக்கத்தினை 1997 இல் 5-6 சதவீதம் வரையில் குறைத்துக் கொள்ளல்
3. 1995 இல் மொத்த தேசிய உற்பத்தியில் 6-4 சதவீதமாக இருந்து வரும் என மதிப்பிடப்பட்டுள்ள வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு நிலுவையை 1997 இல் 5 சதவீதம் வரையில் குறைத்துக் கொள்ளல்.
4. வேலையில்லாத் திண்டாட்ட விகிதத்தை தற்போதைய உயர் மட்டமான 13 சதவீதத்திலிருந்து 8 சதவீதம் வரையில் குறைத்துக் கொள்ளல்.

இவ்விதம் எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார இலக்குகள் சரிவரப் பூர்த்தி செய்யப்படாத நிலையில் 2000 ஆவது வருடத்துக்கான வ. செ. திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்குகளை நிறைவேற்றிக் கொள்ளும் விசயத்தில் பல காரணிகள் இடையூறுகளாக இருந்து வந்துள்ளன. வடக்கில் இடம் பெற்று வரும் போர் காரணமாக வருடமொன்றுக்கு சுமார் 5000 கோடி ரூபாவை அரசாங்கம் செலவிட வேண்டியிருப்பதுடன், உள்நாட்டு வெளிநாட்டுக் கடன்களுக்கான வட்டிக் கொடுப்பனவுகளுக்கெனவும் பெருந்தொகைகளை செலவிட வேண்டியுள்ளது. இந்த இரு விடயங்களுக்குமான செலவு மெத்தம் 31 சதவீதமாக இருந்து வருவதனால் ஏனைய செலவுகளுக்கென 69 சதவீதம் மட்டுமே எஞ்சுகின்றது. இதன் விளைவாக அபிவிருத்தி முயற்சிகளுக்கு குந்தகம் ஏற்படுகின்றது.

எவ்வாறிருப்பினும், இக் காலப்பிரிவின் போது பேரண்டப் பொருளியல் கொள்கைகள் ஓரளவுக்கு வெற்றிகரமான முறையில் செயற்படுத்தப்பட்டு வந்திருப்பதனை காண முடிகின்றது. பொருளாதாரத்தில் 5 சதவீதத்துக்கு கிட்டிய வளர்ச்சி வேகத்தைப் பராமரித்து பணவீக்கத்தை 8-9 சதவீதத்துக்குள் வைத்திருந்தமை வ. செ. திட்ட பற்றாக்குறையை 1998 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 9.2 சதவீதம் வரையிலும் 1999 இல் 8.0% வரையிலும் குறைத்துக் கொண்டமை என்பன இது தொடர்பாக இடம் பெற்றுள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களாகும்.

2000 ஆவது ஆண்டுக்கான வ. செ. திட்ட யோசனைகளை நிறைவு செய்து கொள்ள முடியுமாயின் பொருளாதாரத்தில் தற்போது நிலவி வரும் நிதியியல் உறுதியின்மை நிலையை ஓரளவுக்கு ஸ்திரப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புக் கிடைக்கும். 2000-2002 காலப் பிரிவு தொடர்பாக வரவு செலவுத் திட்டத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நடுத்தர கால நிதிக் கொள்கையின் மூலம் பின்வரும் இலக்குகளை நிறைவு செய்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது:

| வருமானம் | 2000 | 2002 |
|---|---|---|
| தேறிய மொ. உ. உ யில் மொத்தச் செலவு | 18.6 | 19.9 |
| மொ. தேசிய வருமானத்தில் | 26.2 | 24.9 |
| மீளவரும் செலவு | 18.9 | 15.9 |
| அரசாங்க மூதலீடுகள் | 8.1 | 8.8 |
| வ. செ. திட்ட பற்றாக்குறை | -7.6 | -5.0 |

இதன் மூலம் அரசாங்கம் அடுத்து வரும் மூன்று ஆண்டுகளில் மொத்த வருமானத்தையும் அரசாங்க முதலீடுகளையும் நடை முறைக் கணக்கு மிகைகளையும் அதிகரித்துக் கொள்வதற்கும், வ. செ. திட்ட பற்றாக் குறைகளை குறைத்துக் கொள்வதற்கும் எதிர்பார்க்கின்றது. தற்போதைய நிலைமைகளின் கீழ் இவற்றை எவ்வளவு தூரம் நிறைவு செய்துகொள்ள முடியும் என்பதனை அறுதியிட்டுக் கூற முடியாதுள்ளது.

மேலும் 2000 ஆவது வருடத்துக்கான வரவு செலவுத் திட்டம் ஒரு நீண்ட கால திட்டத்தை முன்வைத்திருப்பதுடன், 2010 அளவில் விரிவான பொருளாதார வளர்ச்சியொன்றை எடுத்து வரும் எதிர்பார்ப்பினையும் கொண்டுள்ளது. 2010 இல் பொருளாதார வளர்ச்சியை 7.8% வரையிலும் தலைக்குரிய வருமானத்தை (தற்போதைய 850 அமெரிக்க டொலர் அளவிலிருந்து) 2500 அ. டொலர்களாவும் அதிகரித்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்டுகின்றது. தற்போதைய சூழலை கருத்தில் கொண்டு நோக்கும் போது இவற்றை எந்த அளவுக்கு நிறைவு செய்து வைக்க முடியும் என்பதனை கூறுவது கடினமாகும். அரசாங்கத்தினால் கட்டுப்படுத்திக் கொள்ளக்